
ஓம்

சக்திமயம்

# திலகதீபம்



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம், தொல்புரம் ஆகிய இடங்களில் வசித்தவருமான

திருமதி

## கனகநாயகம் திலகவதி

அவர்கள் அமரத்துவம் எய்திய நினைவாக திலகதீபம்

29.01.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

முருகையா



கந்தரோடையை பிறப்பிடமாகவும் சுன்னாகம்,
தொல்புரம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும்
கொண்டிருந்த

திருமதி

**கனகநாயகம் திலகவதி**

அவர்கள் அமரத்துவம் எய்திய நினைவாக

திலகதீபம்

29.01.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

கருவாக்கி உருவாக்கிச் சுமந்து பெற்று
திருவாக்கி பாலூட்டி தாலாட்டி
நிலாக்காட்டிச் சோறூட்டி
பாராட்டித் தோள் சுமந்து
துயிலவைத்து எழில் பார்த்தீர் !
எண்ணும் எழுத்தும்
உண்ணும் உணவும்
ஊட்டி எமக்கு
அறத்தோடு ஒழுக்கம் புகட்டி
ஆளாக்கி எமை அழகாக்கினீர் !
அன்னையே எந்தையே
உமக்கே திலகதீபம்
சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
சக்தி மயம்

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு" குறள் (340)



தாயின் மடியில்
26.11.1936

நோயின் பிடியில்
29.12.2008

அமரர்

# கனகநாயகம் திலகவதி

அவர்களின்

திதிப் பா

ஆண்டு சர்வதாரி மார்கழி பதினாங்காம் நாள்
பூண்ட திதி பூர்வபட்ச துதியையில் யாண்டு புகழ்
திலகவதி என்னும் திவ்விய நற்குண நலத்தாள்
நில வணிந்த சிவன் சக்தி பதம் தஞ்சமடைந்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திலகதீபத்தின் ஒளி பரவமுன்னர் உங்களிடம் சில வார்த்தைகள்......

30 மார்ச் 1988, 29 ஏப்ரல் 2004 ஆகிய திகதிகளில் முறையே வெளியிடப்பட்ட "என் அப்பாவின் கதை" , "என் அம்மாவின் கதை" ஆகியவை முறையே தனது தந்தையின் மறைவையடுத்தும் தனது தாயின் மறைவையடுத்தும் சமூகவியல் பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன் (தற்போதய துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்) அவர்களால் வெளியிடப்பட்டிருந்தன. அவ்விரு நூல்களையும் அவரிடமிருந்து பெற்று நான் வாசித்ததோடு அவற்றை எனது அம்மாவிடம் வாசிக்க கொடுத்திருந்தேன். அம்மா அவ்விரு நூல்களையும் கவனமாக வைத்திருந்து ஒரு முறையல்ல இருமுறை வாசித்ததையும் அவதானித்திருந்தேன். அத்துடன் எனது நண்பன் ஸ்ரீகுமரன் அவர்கள் தனது தாயின் மறைவையடுத்து "அற்றுப்போன அழகு" எனும் நூலை எழுதி வெளியிட்டிருந்தார். நானும் அம்மாவும் அந் நூலையும் வாசித்திருந்தோம்.

இவ்வாறான நூல்கள் யாழ்ப்பாணத்தின் " கல்வெட்டுக் கலாச்சாரத்திலிருந்து" விலகி ஆக்கபூர்வமான அம்சங்கள் பலவற்றை தருபவை. அவற்றின் வழிகாட்டலை ஏற்றுக்கொண்டு அதேவேளையில் எங்கள் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் எங்கள் வேர்களோடு வேர்களாக வாழ்ந்தவர்கள் என அனைவரினதும் கருத்துக்கும் பார்வைக்கும் இடம்கொடுக்கும் வகையில் "திலகதீபம்" ஒளிர்கிறது. "திலகதீபம்" எங்கள் அம்மாவின் கதை. அதனூடாக எங்களின் கதை.

ஒவ்வொரு அம்மாவினதும் ஒவ்வொரு அப்பாவினதும் கதை – வெறுமனே அவரவரது தனிப்பட்ட கதையல்ல; மாறாக சூறாவளியில் வீழ்ந்து கிடக்கும் எங்கள் மண்வேர்களின் கதை. அந்த வேர்களின் தாங்குகை, ஊட்டமளித்தல் என்பன இன்றி விருட்சங்களும் விழுதுகளும் இருப்புக் கொள்வது சாத்தியமில்லை. நாங்களும் வேர்களாக மாறவேண்டிய கடமையும் எங்கள் பரம்பரையைத் தாங்கி ஊட்டம் கொடுக்கும் கட்டாயமும் காத்துக் கிடக்கிறது.

அதனால் எங்கள் பெற்றோரின் கதை தொடர்பாடல் செய்யப்பட வேண்டியதாகிறது. தனிப்பட்ட வாழ்வு, பொதுப்பட்ட வாழ்வு ஆகிய வற்றின் சவால்களை தாண்டவும் சாத்தியம் மிக்க அக, புற சமாதானத்திற்கும் இத்தொடர்பாடல் அவசியமாகும். அடுத்து வரும் சந்ததிக்கு இக் கதைகள் பாடமாகவமையும். சாத்தியமான வாய்ப்புக்களையும் வளங்களையும் புத்திசாதுரியமாக பயன்படுத்தவும் சூழகமும் சமாதானமும் மிக்க சமூகச்சூழலைக் கண்டு கொள்ளவும் இக்கதைகளினூடாக வழிகள் திறபடும்.

இனி திலகதீபத்தின் ஒளியில் உண்மைகள் ஏதாவது கண்களுக்குத் தெரிகிறதா பாருங்கள்.

அன்புடன் அன்னையின் மகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் ஸ்ரீ சாயி ராம்"

# சாயி மார்க்கமும் எங்கள் தாயும்



பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபாவின் சிந்தனைகள், ஆன்மீக தத்துவங்கள், சேவைகள், அற்புதங்கள் ஆகியவற்றை தனது இளமைக் காலத்திலிருந்தே ஏற்றுக்கொண்டவர் எங்கள் தாய். அத்துடன் அவர் சத்திய சாயியை எங்கள் கந்தரோடை வீட்டின் சுவாமி அறையில் படமாக வைத்து ஆராதனை செய்தவர். சத்திய சாயி மார்க்கத்தில் எங்களையும் ஈடுபாடு காட்டுவதற்கு வழிகாட்டியவர்.

கடந்த 29.12.2008 அன்று எங்கள் தாய் யாழ் மருத்துவமனையில் காலமாகிய பின்னர் 18.01.2009 அன்று எங்கள் தாய் தனது கடைசி சிலமாதங்களாக தொல்புரம் மேற்கு, சுழிபுரத்தில் தனது இளைய மகன் ஹரிஹரசக்தியின் இல்லத்திற்கு அண்மையாக வசித்து வந்த தங்ககிரி என்ற பெயருடைய அந்த வீட்டிற்கு சென்றோம். அங்கு அவர் கடைசியாக படுத்து உறங்கிய தலையணைக்கு கீழே சாயி மார்க்கம் அவதாரச் சிறப்பு மலரும் சிவத்தமிழ்ச் செல்வியின் பொன் மொழிகள் என்ற ஏடும் காணப்பட்டன. சாயி மார்க்கம் அவதாரச் சிறப்பு மலர் (ஒக்ரோபர் - டிசெம்பர் 2004) கொண்டிருந்த "சுவாமியை தரிசித்த ஈராக்கியத் தம்பதிகள்" என்ற பகுதி இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

## சுவாமியை தரிசித்த ஈராக்கிய (Iraq) தம்பதிகள்

இவ்வருடம் மே மாதத்தில் பாக்டாட் நகரத்தின் முன்னாள் பொலிஸ் மா அதிபராகிய ஜசின் டாவூட் சுலைமன் (Gen.Yassin Dawood Suleimen) அவர்களும் அவரின் பாரியாரும் பிருந்தாவனத்தில் வந்திருந்தபோது, சந்தித்து அறிந்ததை இங்கு தருகின்றேன்.

பொலிஸ் மா அதிபர் 1977 ம் ஆண்டு, அந் நாட்டுத்தலைவர் சதாம் ஹூசெயின் மனச்சாட்சிக்கு எதிரான செயலைச் செய்யும் படி வற்புறுத்தியதன் நிமித்தம் தனது பதவியிலிருந்து விலகினார். பின்பு துருக்கி, பல்கேரியா நாடுகளில் வாணிபம் செய்து செல்வந்தரானார். அமெரிக்கப் படை ஈராக்கை கைப்பெற்றிய பின்பு, தனது நாட்டிற்குச் சென்றார். அங்கே நடக்கும் வன்முறைச் சம்பவங்களைக்கண்டு மனம் வருந்தினார். அமெரிக்கர்கள் இவரைத் திரும்பவும் பொலிஸ் மா அதிபர் பதவியை ஏற்குமாறு கேட்டார்கள். இதற்கு அவர் மறுப்புத் தெரிவித்தார். நாட்டின் நிலைமை திருந்த வேண்டுமென்று அல்லாவை அல்லும் பகலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்தித்தார். பிரார்த்தனை தீவிரமடைந்த வேளைகளில் உள் மனது யாரோ ஒரு தெய்வீகமானவரைப் போய் சந்திக்கச் சொல்லி உறுத்திக்கொள்ளத் தொடங்கியது. உள் மனதே இந்தியாவுக்கு போகும் படியும் உறுத்தியது. போகவும் தீர்மானித்தார்.

தனது மனைவி அமீரா அலிக்கு தனது தீர்மானத்தை சொன்னார். மனைவி. யாரைப் பார்க்க என்றும். இந்தியாவில் எந்த இடத்தில் என்றும் தெரியாமல் எவ்வாறு பயணம் செய்வது என்று கேட்டார். கணவனின் தீர்மானத்திற்கு ஒருவாறு ஒத்துக்கொண்டு பயணத்தை ஆரம்பித்தினர்.

ஈராக்கிலிருந்து விமானம் மூலம் பயணம் செய்ய முடியாத நிலைமை இருந்ததால். தரை மார்க்கமாக ஈரான். பாகிஸ்தான் நாடுகளினூடாக இந்தியாவை வந்தடைந்தனர்.

அம்றிஸ்ரார் நகரிலிருந்து டில்லிக்கு வந்தார்கள். டில்லி புகையிரத நிலையத்தில் பிரயாணச்சீட்டு விற்கும் யன்னலடியில். ஏதாவது ஒரு புனித ஸ்தலத்திற்கு பயணச்சீட்டு தருமாறு கேட்டனர். அங்கிருந்த ஒருவர் தர்மவரம் என்று சொல்ல. சீட்டு விநியோகித்தவர் நேரே புட்டபர்த்திக்கு போகலாம் என்று. பயணச்சீட்டுக்களை கொடுத்தார்.

புட்டபர்த்தி புகையிரத நிலையத்தில் இறங்கியதும். பகவானின் படத்தைக் கண்டதும் இவர்தான் நான் தேடும் புனித மனிதர் என்று சொல்லி யசின் டாவூட் சுலைமன் ஆனந்தமடைந்தார். பின்பு பிரசாந்தி நிலையத்திற்கு போனார்கள். புட்டபர்த்தியை அடைய இருபத்திநான்கு நாட்கள் எடுத்தன. அவரின் ஆர்வமோ எள்ளளவும் குன்றவில்லை. சுவாமி பங்களூரில் இருந்ததை அறிந்து. ஒரு ஜேர்மன் பக்தர் கணவனையும் மனைவியையும் அடுத்த நாள் "வைற் பீல்ட்" (White Field) க்கு கூட்டிச்சென்றார். அங்கே ஆச்சிரமத்தில் தங்கினார்கள். அவர்கள் பகவானைக் கண்ட ஆனந்தத்தில் மிதந்தார்கள். தனது நாடான ஈராக்கை காக்க வேண்டுமென்று தான் பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபாவிடம் பிரார்த்திப்பதாக சொன்னார்.

என்ன அதிசயம்!! எவ்வாறு பகவான் தனது பக்தர்களை ஈர்க்கின்றார். இவர்களே ஈராக்கிலிருந்து பகவானிடம் வந்த முதற் பக்தர்களாக இருக்க வேண்டும்.

"ஜெய் சாயி ராம்"

செவ்வி கண்டவர்
Dr.G.வெங்கட்ராமன்
தகவல் : சாயி வானொலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




✷" தாய் ஒருத்தி ஒரு பொருளை தான் பெறும் போது அடையும் மகிழ்ச்சியை விட தனது பிள்ளை அப் பொருளை பெறும் போது அடையும் மகிழ்ச்சி அளப்பெரியது. அதைப்போல் நாம் இறைவனுக்கு கொடுக்க நினைப்பதை எல்லாம் இறைவன் உறையும் இதயங்களைக் கொண்டிருக்கும் ஏழைகளுக்கு வழங்கினால் அது இறைவனுக்கு எவ்வளவோ மகிழ்ச்சியைக் கொடுக்கும்."

✷"சமூகத்தில் அமைதியும் ஒழுங்கும் நிலவவேண்டுமானால் மக்களிடையே இறை நம்பிக்கை ஸ்த்திரமாக பதிய வேண்டும். வேட தாரிகளாக இல்லாமல் உண்மையான ஆசார சீலர்களாக நாம் ஒழுகினால் நாட்டில் அமைதி நிரந்தரமாக நிலவ முடியும்."

✷"பள்ளிக்கூடங்களில் சமயக்கல்வி அளிக்கப்படுகிறது. அது பரீட்சையில் தேர்ச்சி பெறுவதற்கு மட்டுமே அன்றி சமயப் பண்பு வாழ்க்கையில் வளம் பெறுவதற்கு பயன்படவில்லை. தாய்மார்கள் வீட்டில் சமய வாழ்வு வாழ்ந்து பிள்ளைகளுக்கு அப் பண்பை ஊட்ட வேண்டும். அப்போதுதான் குழந்தைகள் நல்வாழ்வு வாழவும் சைவம் தழைத்து ஓங்கவும் முடியும்."

✷"மனித வாழ்க்கையிலே மன அமைதி, மனச்சாந்தி என்னும் பேறு கிடைத்தற்கரிய பேறு. செல்வமும் நிதிகளும் மட்டும் மனச்சாந்தியளிக்கா. மன அமைதியைப் பெறுவதற்குக் கடவுளின் கருணாநிதியை பெற வேண்டும்."

✷"நன்மைக்கும் தீமைக்குமிடையே எப்போதும் போட்டி இருந்து கொண்டே இருக்கும். ஆனால் அப் போட்டியில் இறுதியாக நன்மைதான் வெற்றியடையும் என்பதை எல்லோரும் உணர்வர். ஆனபடியால் நாம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ என்றும் நல்லவற்றையே நினைக்க வேண்டும், நல்லவற்றையே பேச வேண்டும். நல்லவற்றையே நாட வேண்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் உடலாகிய எங்கள் பொருளாகிய எங்கள் உயிரே..

அம்மா உன்னுடைய எழுபத்தியிரண்டாவது பிறந்த நாள் 2008 நவம்பர் 26. உள்ளத்தில் அணைகளைப் பிளந்து பாய்ந்த துயர வெள்ளம்... நாடி நரம்பெங்கும் வீசிய தோல்விச் சூறாவளி... சூரியனை இருட்டடிப்புச் செய்த ஒரு பொய்யான பகல்... அன்று யாழ்ப்பாணத்தை "நிஷா" சூறாவளி தாக்கிக்கொண்டிருந்தது. எங்கள் ஊர்கள் வெள்ளத் துயரத்துள்... நூற்றாண்டு விருட்சங்கள் சூறாவளி தோல்விக்குள் சரிந்தே போயின...

அம்மா! நீ எண் சோதிடம் கூறுவாயே... அன்றும் இன்றும் என்றும் எட்டாம் நம்பரில் - குறிப்பாக அதன் பிடிவாதத்தில் அசாத்தியமான தைரியத்தில், அசாதாரண பற்றுதியில்.... தோல்வியில் துவண்டு போகாத உளவியலில்.... இறந்த காலம் - நிகழ்காலம் ஆகியவற்றை விட எதிர்காலத்திற்கே அதீத முக்கியத்துவம் கொடுக்கும் விடாப்பிடியில் எங்களுக்கு நல்ல பரீட்சயம் உள்ளது. நீயும் அப்பாவும் எட்டாம் நம்பர்...! உனது மருமக்கள் இருவரும் எட்டாம் நம்பர்... உனது பேர்த்தி பார்க்கவி ( சிவன்சேய் - பாரதி மண இணையரின் மகள் ) எட்டாம் நம்பர்... அம்மா! உன்னிடம் கேட்டால் பெரும் பெரும் பேர்வழிகள் எல்லாம் சர்வதேச, உளளூர் மட்டத்தில் எட்டாம் நம்பர் கட்சிக்குள் சேர்த்து புகழ்பாடுவதில் உனக்கு நீயே நிகர்...... அம்மா! நீ உனது நம்பிக்கைகளை ஒரு போதுமே மீளாய்வோ மறு வாசிப்போ செய்ததை நான் அறியமாட்டேன். நீ கடைசி வரை யாழ்ப்பாணத்து சைவத்தமிழிச்சியாகவே வாழ்ந்தாய்....

அம்மா! 2008 நவம்பர் 30ம் திகதி யாழ்ப்பாணம் ஆஸ்ப்பத்திரிக்கு சக்தியுடன் செல்லும் போது பெரிய பெரிய மரங்கள் எல்லாம் வேரோடு சாய்ந்திருந்த காட்சிகளை பார்த்து வியந்து வேதனைப்பட்டாயாமே! அம்மா! வீழ்ந்து கிடந்த விருட்சங்களைப்பற்றி உன்னிடம் ஒரு அவதானிப்பை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று விரும்பியிருந்தேன்... ஆனால் நீ ஒரு மாதமாய் நோய் மடியில் துடித்துக்கொண்டிருந்ததால் ஆஸ்ப்பத்திரிக்கு வந்தபோதெல்லாம் என்னால் உனக்கு வெறும் ஆறுதல் மொழியத்தான் முடிந்தது......

அம்மா! நீ எழுபத்தியிரண்டு வருட விருட்சம்! உன் திருப்திக்காக மட்டுமல்ல... என்னுடைய திருப்திக்காகவும் சொல்ல வேண்டும்... நீ சைவத்தமிழ் விருட்சம்... இன்னும் தெட்டத்தெளிவாக சொல்வதானால் யாழ்ப்பாணக் கந்தரோடையின் சைவத்தமிழ் விருட்சம் நீ. அம்மா! உன்னில் உனக்கிருந்த பற்றுறுதி... உன் பிள்ளைகள், உறவுகள், உற்றார் , நண்பர்கள், ஊரார், இனசனங்கள் ஆகியோரிடம் உனக்கிருந்த பற்றுறுதி... இனம் சமயம் தாய்மொழி தாய்பூமி என நீ இறுகக்கொண்டிருந்த பற்றுறுதி... அம்மா! உனது தனிமனித அவலங்களை யோசிக்கவும் யாசிக்கவும் நேரம் போதாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிலும்... உனது கண் பார்வை மறையும் வரை நூல்களையும் பத்திரிகைகளையும் வாசிப்பாயே... கண்ணில் சத்திரசிகிச்சை முடித்துக்கொண்டு கடந்த வருடத்தின் பல மாதங்கள் என் வீட்டில் நீ இருந்த போது கூட " அம்மா! பேப்பரில தலைப்புச் செய்திகளை மட்டும் வாசி.. எந்த புத்தகங்களையும் வாசியாதை... குறுனி எழுத்துக்களை வாசிக்கிறது கண்ணுக்கு கூடாது" என்று சொன்னாலும் கேட்கவே மாட்டாய் ஏதாவது ஒரு புத்தகத்தை தலையணைக்கு கீழே மறைத்து வைத்திருப்பாய்....

அம்மா! நீ சமயத்தை ஆன்மீகத்திற்கான ஒரு கருவியாக மட்டும் பார்ப்பாய்... அதுவும் உனது வயதான காலத்தில் அந்தப்பார்வை மட்டுமே உனக்கு இருக்கும் என்று நினைத்தேன். ஆனால் மொழியும் சமயமும் ஒரு இனத்தின் இரண்டு கால்கள் என்று நீ கூறிய போது.... மறுதலிப்பையோ விமர்சனத்தையோ நான் தெரிவிக்கவில்லை. ஏனென்றால் மொழியின் பெயரால் எங்கள் இனத்தின் வரலாற்றுப் பயணத்தை எங்கள் தலைமைகள் திசைமாற்றிய கதையை நீ அறியாதவள் அல்ல. ஆனால் உனது கருத்துக்கு மற்றவர் மறுதலிப்போ விமர்சனமோ வெளியிடுவதை எள்ளளவும் நீ விரும்புவதில்லை.

அம்மா! சூறாவளியால் வீழ்ந்த விருட்சங்களைப்பற்றிய எனது வியப்பு... வீழ்ந்து கிடந்த நூற்றாண்டு விருட்சங்களின் ஆணி வேர் பக்க வேர்கள் எல்லாம் எப்பவோ உக்கி இறந்திருந்திருக்க வேண்டும். அம்மா! வைரவர் சூலம் வைத்து பலியிட்டதும் பொங்கியதும் படைத்ததும் நேர்த்திக்கடன்கள் தீர்த்ததும் தூக்குக் காவடி, துலாக்காவடி, பாற்காவடி எடுத்ததும் கற்பூரச்சட்டிகள் காவியதும் விருட்சங்களை நம்பியல்லவா? நீ கூட ஆலடிப்பிள்ளையார், புளியடி வைரவர்.... என்று கூறுவாயே! எங்களை செல்வச்சந்நிதி முருகன் கோவிலுக்கு கூட்டிச்சென்றால் "எனக்கு இந்த பெரிய பூவரசு மரத்தின் கீழே தான் அப்பா தாலி கட்டினார்" என்று சொல்லி விட்டு அந்த பூவரசு மரத்தையும் தொட்டுக் கும்பிடுவாயே. அம்மா... நீ உயிருடன் இருந்தால் இப்ப நீ சொல்லுவாய் "தம்பி... நம்பிக்கை முக்கியம்.... " ஒரு நாள் வரப்போகும் சூறாவளியில் வேரிழந்து சாய்கின்ற விருட்சங்களை ஒவ்வொரு நாளும் சந்தேகப்படுவதும்... தினம் தினம் நடக்கும் நேர்த்திகளையும் காவடி ஆட்டங்களையும் படையல்களையும் விருட்சங்களுடன் வாழும் வைரவர் சூலங்களுக்கு நிறைவேற்றாமல் விடுவது பற்றியும் உடன்பாடுகள் இருக்காது உனக்கு....

அம்மா.... தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்று நம்பிவள் நீ.... விளையும் பயிர முளையில் தெரியும் என்று கூறியவள்.... தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலையென நினைத்தவள். பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது என்பாய்.... நிலவுக்கு அஞ்சி பரதேசம் போவதா என்று கேட்பாய். கெடுகுடி சொற்கேளாது சாகுடி மருந்து குடியாது என்று தத்துவம் சொல்லுவாய். ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது என்பாய். சுவரிருந்தால் தான் சித்திரம் வரையலாம் என்பாய். தாரமும் குருவும் தலை விதிப்பயன் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியவள் நீ... . அடியாத மாடு படியாது என்பாய். சாணேற முழம் சறுக்கும் வாழ்வியல் அனுபவங்களைக் கூறுவாய். அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும் என்று பிரகடனம் செய்வாய். பேச்சுப்பல்லக்கு தம்பி கால்நடை என்பாய். உன்னுடைய பழமொழிகளின் ஊடாகவே சமூகத்தின் இயல்புகளை விளங்கிக் கொள்ளலாம் போல் இருக்கிறது.

ஆத்திசூடி. கொன்றைவேந்தன். மூதுரை. திருக்குறள். தேவார திருவாசகங்கள்.... எல்லாமும் உன்னிடம் தானே கற்றோம். பின்னேரம் ஆறு மணிக்கே முகம். கை. கால் கழுவி சுவாமி அறையில் குத்துவிளக்கேற்றி தூபமிட்டு திருமுறைகளை ஒழுங்கு தவறாமல் பாட வைப்பாய். எங்கள் கந்தரோடை வீட்டின் சுவாமியறை கோவில் போல இருந்தது. அப்பா நோய் வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் இருந்த பொழுதுகளிலும் எங்கள் பாடங்களை சொல்லித் தருவதற்கு நீ தவறியதில்லை. சமயம். கணிதம். தமிழ். ஆங்கிலம் முதலிய பாடங்களில் சிறு வயது முதல் நீ தான் எங்கள் வீட்டு ஆசிரியை.... எங்கள் பாடசாலை வினாத்தாள்கள். விடைத்தாள்களை பார்வையிடுவதிலிருந்து பிழைதிருத்தங்களை வழிநடத்துவதிலிருந்து - மாணவர் தேரச்சி அறிக்கைகளில் அன்றைய ஆசிரியர்கள் சிலர் வேலைப்பளு காரணமாக மொத்தப் புள்ளிகளை கூட்டுதலில் விடும் தவறுகளை உடனே அப்பாடசாலைக்குச் சென்று அதிபர். ஆசிரியர்களுடன் உரையாடி எங்கள் தகைமைகளை பாதிப்படையா வண்ணம் காப்பாற்றுவாய்.

நாங்கள் சின்னஞ் சிறுவராக இருந்த போதே அப்பா காலமாகினார். அப்பா அமரத்துவம் எய்தியபின்னர் எங்கள் அம்மாவும் அப்பாவும் நீ தான்.... கந்தரோடையில் குடி தண்ணீர் அள்ளுவதிலிருந்து கடை கடையாய் அரிசி. பருப்பு. உப்பு. புளி. சர்க்கரை..... வாங்கி சமையல் செய்வதிலிருந்து.... நாங்கள் நோய்வாய்ப்பட்டால்.... தோளில் தூக்கிப் போட்டு பஸ் எடுத்து சுன்னாகத்திற்கு டாக்குத்தர் விக்கினேஸ்வராவிடம் கூட்டி வந்து மருந்து எடுத்து நோய் தீர்ப்பதிலிருந்து .... உடுப்பு வாங்கித்தருவதிலிருந்து.... எனக்கு சைக்கிள் எடுத்து தந்ததிலிருந்து பிள்ளைகளை நூற்றுக்கு நூறு வீதம் பொறுப்போடு வளர்த்த தாய் நீ... எனக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது.... ஸ்கந்தாவில் ஏழாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த போது யாழ்ப்பாணம் நகரத்தில் பேரம்பலம் சைக்கிள் கடைக்கு கூட்டிச்சென்று எனக்கு ஒரு புதிய சைக்கிள் வாங்கித்தந்தாய். அந்த சைக்கிளுடன் யாழ்ப்பாணம் கில்னர் லேனிலுள்ள எங்கள் பெரியம்மா வீட்டுக்கு கூட்டிச்சென்று "தஞ்சனுக்கு ஒரு புதுச் சைக்கிள் எடுத்துக் குடுத்திருக்கிறன் ஒரு விதமான ஆபத்துமில்லாமல் அவன் அதில போய் வரவேணும். அதுக்காக மாரியாச்சியை கும்பிட வந்தனான்" என்று பெரியம்மாவிடம் சொல்லிவிட்டு பெரியம்மா வீட்டின் முன்னால் உள்ள மாரியம்மன் கோவிலினுடைய உள் வீதியால் சைக்கிளோடு என்னைக் கூட்டிச்சென்று கோவிலின் பின்னாலுள்ள வில்வ மரத்தடியில் சைக்கிளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீபூதி, சந்தனம் பூசி எனக்காக மாரியம்பாளிடம் அருள் வேண்டி பிரார்த்தித்தாய் அம்மா!. அப்பாவின் ஓய்வூதியம் வாழ்க்கைச் செலவுக்கு போதாது என்ற நிலையிலும் எங்கள் உணவு, உடை ஆரோக்கிய தேவைகளை - நகைகளையோ காணிகளையோ விற்றுத்தானும் பூர்த்தி செய்தாய்..... சாகும் வரை நீ பிள்ளைகளுக்கு மட்டுமல்ல பேரப்பிள்ளைகளுக்கும் சகலத்தையும் பகிர்ந்து பகிர்ந்து கொடுத்தபடியேதான் இருந்தாய்......

அம்மா நீ அடிப்படையில் ஒரு போதும் வன்முறையை விரும்பியது கிடையாது..... அரிச்சந்திரன் - சந்திரமதி கதையையும் மகாத்மா காந்தியையும் எங்களுக்கு விரிவாக விளக்கியவள் நீ.... டி.எஸ் சேனநாயக்க, எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்க... சேர் பொன் இராமநாதன்... ஆறுமுகநாவலர்... இந்துபோட் இராசரத்தினம்... இவர்களின் சக, சய பக்கங்களை எனக்கு சொல்லியிருக்கிறாய்.... அம்மா உன்னுடைய தமையன் (எங்கள் ஆசைமாமா ) , தந்தை செல்வநாயகத்தின் உறவினர் (எங்கள் மாமி) ஒருவரை திருமணம் செய்து கொண்டதால் ( பேச்சுத்திருமணம் அல்ல ) ஆசை மாமாவைப்பற்றிச் சொல்லும் போது .... எனது சிறுவயதில் தந்தை செல்வாவை பற்றியும் முதன் முதலில் நீதான் சொன்னாய்... ஸ்கந்தாவில் நீ படிக்கும் காலத்தில் "கடவுள் எங்கே இருக்கிறார்?" என்று கேட்ட சோஷலிஷ சித்தாந்தி வி. பொன்னுருடன் (வி. பொன்னம்பலம்) வாக்குவாதப்பட்டதை கூறுவாய். "சுவேந்திரன் கூட்டணி அமிர்தலிங்கத்தின்ரை கூட்டத்தில் கல்லெறிந்த கதை" சொல்லுவாய். கந்தரோடையில் ஒரு சாரார் கொமியூனிஸ்ட் கட்சியையும் எஸ்.எல்.எவ். பி யையும் அந்த காலத்தில் ஆதரித்தமையையும் எனக்கு ஏன் என்று விளக்கி கூறியதும் நீதான் அம்மா.... மிக அண்மையில் ஒரு நாள் யாழ்ப்பாணத்து பத்திரிகையில் போர்க்கள அழிவுகள் பற்றிய செய்தி ஒன்றை வசித்துக்கொண்டிருந்த போது "பண்டாரநாயக்க தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவராட்டி தமிழரும் சிங்களவரும் ஒற்றுமையா இருந்திருக்கலாம் தானே..." என்று கூறியது ஞாபகம் வருகுது. ஜி.ஜி பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பது கேட்ட கதையும் நீ சொல்லுவாய். அந்த காலத்து தேர்தல் கோஷங்களை வரி தவறாமல் சொல்லிச் சிரிப்பாய் ......

தர்மலிங்கம் எம்.பி அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார் என்ற செய்தி கந்தரோடையில் பரவியபோது - 1980 களின் நடுப்பகுதி - "இப்பிடி எங்கட இனத்தின்ர மூத்த தலைவர்களையெல்லாம் அழிச்சாங்களெண்டால் ஒரு தீர்வுமே தமிழருக்கு கிடைக்காது. இவங்கட சிறு பிள்ளை வேளாண்மை விளைந்தும் வீடுவந்து சேராது" என்று நீ கூறியது இன்றும் என் செவிகளில் மீள மீள எதிரொலிக்கிறது. நீ கண் கலங்கி அழுதாய்.... " அந்த ஆள் மிதிச்ச எறும்பும் சாகாது... சுட்டுப்போட்டாங்கள்..." என்று துயரப்பட்டாய்.

அம்மா... நீ இரண்டாம் உலகப்போரைப்பற்றி விரிவான கதையைச் சொல்லுவாய்..... ஜேர்மனியின் ஹிட்லரைப்பற்றியும் இங்கிலாந்து பிரதமர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வின்ஸ்ரன் சேர்ச்சிலைப்பற்றியும் முதன் முதலில் எனக்கு கூறியவள் நீ....

பீற்றர் கனமன். கொல்வின் ஆர்.டி சில்வா.... இலங்கை கொமியூனிஸ்ட் கட்சி. நவசமசமாஜக்கட்சி... இவை பற்றியெல்லாம் எனக்கு கூறியிருக்கிறாய்.....

அரசியல் வரலாறு பற்றிக் கூறியவை போக.... நீ அம்மா அறுபத்து மூன்று நாயன்மார்களில் முக்கியமானவர்கள் அனைவரது கதைகளையும் சொல்லித்தந்திருக்கிறாய். கந்தசஷ்டி கவசம் பாடுவாய். சித்திராப்பௌர்ணமி தினமோ ஆடி அமாவாசையோ.... இப்ப மறந்துவிட்டேன்... அமராவதி சரித்திரம் படித்து எங்களுக்கு விளக்குவாய் அந்த விரத நாளில்.....

நீ எஸ.எஸ்.சி இல் உயிரியல் விஞ்ஞானப்பிரிவில் கற்றபடியால் எங்களுக்கு விஞ்ஞானப்பாடத்தில் அடிப்படை விடயங்களை இலகுவாக விளங்கப்படுத்துவாய்.....

"கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும் "நீறில்லா நெற்றி பாழ்..." என்றும் கூறுவாய். உனக்கு சிவசின்னங்கள் மீது அதிக பக்தி. திருநீறு. குங்குமம். சந்தனம். உருத்திராட்சம் என்பன உரிய உரிய நேரத்தில் உரிய உரியவர்கள் அணியவேண்டும் என்று விரும்புவாய். உனது பிள்ளைகளோ. உற்றார். உறவினர். நண்பர்களோ திருநீறு அணியாமல் வீட்டுக்கு வந்தால் "என்ன வேதக்காரர் மாதிரி விறுத்தி இல்லாத முகத்தோட வாறியள். நெற்றியில வடிவா வீபூதி பூசுங்கோ" என்று கண்டிப்பாய். இப்படி நீ காட்டமாகக் கதைத்தாலும் கந்தரோடையில் சரி பின்னர் நீ வாழ்ந்த வீடுகளிலும் சரி ஜேசுநாதர். புத்தபிரான் ஆகிய மகான்களின் படங்களையும் உனது சுவாமி அறையில் வைத்து வழிபாட்டாய்.

வாழ்விலும் வீழ்விலும் கடவுள் பக்தி. திருநீறு அணிதல். தேவார திருவாசகம் பாடுதல் இவற்றை நீ மறந்ததில்லை. எனக்கு நல்ல ஞாபகம்... எங்கள் கந்தரோடை வீட்டில் 1982.01.17 (ஞாயிற்றுக்கிழமை) அந்திசாயும் நேரம். அப்பாவின் நோய் முற்றி.... வைத்தியர்களால் காப்பாற்ற முடியாத வேளையில் அப்பாவை ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்குக்கொண்டு வந்து சேர்த்திருந்தோம். எனக்கு வயது பதினொன்று. நீ அப்பாவின் தலைமாட்டில் கண்ணை மூடிக் கும்பிட்ட படி திருமுறைகளைப் பாடிய படி இருந்தாய். அப்பா ஆஸ்பத்திரியில் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் நாங்கள் சிறுவர்களாக அக்காவுடன் தனித்திருந்த இராப்பொழுதுகளில்.... நீ அப்பாவின் பணிவிடைகளையெல்லாம் ஆஸ்பத்திரியில் கவனித்து விட்டு யாழ்ப்பாணம் - கீரிமலை 768 பஸ்ஸில் வந்து ஸ்கந்தா பஸ் தரிப்பு நிலையத்தில் இறங்குவாய்.... எங்கள் கந்தரோடை வீட்டு வளவிலிருந்து நேரே தெரியும் ஸ்கந்தாவின் வாசலில் - றோட்டு லைற் வெளிச்சத்தில் - உனது வருகை தோன்றும் வரை நாங்கள் இருட்டிலும் எங்கள் வீட்டு ஒழுங்கையில் வந்து வந்து பார்த்தபடி இருப்போம். அதுவரை ஒரு ஆந்தை அலறி அலறியே அந்தக் கும்மிருட்டில் சிறுவர்கள் எங்கள் உயிரை எடுத்துவிடும். அப்பாவின் உயிர் பிரியும் வேளையில் உனது தேவாரம் மட்டுமே கேட்டுக்கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பா கந்தோரிலிருந்து வார நேரமல்லோ..." என்று நான் சிறுவன் கத்துகிறேன். அப்பா அனுங்கிய குரலில் "..... தம்பி அழாத....." என்று கூறுகிறார். மீண்டும் நீ தேவாரம் பாடுகிறாய்.... சில நிமிடங்களில் ஏதோ ஒரு பொருள் எங்கள் முற்றத்தில் விழுகிறது. முற்றத்திற்கு சற்று அப்பால் நின்ற பனை மரத்திலிருந்து கங்கு மட்டை விழுந்திருக்க வேண்டும்..... என்று சொன்ன பெரியம்மா அங்கே சென்று பின்னர் பார்த்த போது அது கங்குமட்டை அல்ல பெரிய ஆந்தையொன்று வீழ்ந்து இறந்திருந்தது.... அந்த ஆந்தை இறந்தவுடன் அம்மாவும் தேவாரம் பாடுவதை நிறுத்த அப்பாவின் ஆவி பிரிந்தது.

அம்மா மன்னித்துக்கொள். உன்னிலிருந்து மெய் ஞானத்தையும். விஞ்ஞானத்தையும் சமாந்தரமாக சமகாலத்தில் தரிசிக்கும் வாய்ப்பு இருந்தும் அஞ்ஞானத்தில் சில வேளைகளில் மூழ்கிக்கிடக்கிறோம். மெய்ஞானத்தினதும் விஞ்ஞானத்தினதும் அடிப்படையே தளராத நம்பிக்கை தான் என்று பல கதைகளினூடாக நீ கூறுவாய். தளாராத நம்பிக்கையோடு நீ வாழ்ந்து காட்டினாய். உன் அளவுக்கு கெட்டியாகவும் கெட்டித்தனமாகவும் கடைசி மூச்சுவரை மனத்தைரியத்தை பேண முடியாது. நீ கூறும் பழமொழிகள் "மழைக்கால் இருட்டானாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது". "மலையே என்றாலும் தலையே சும".

அம்மா திருநாவுக்கரசு நாயனார் சமண சமயத்திற்கு மாறி சூலைநோயில் வாடிய போது தமக்கையார் திலகவதியார் தம்பியாரை திருத்தி சைவத்திற்கு மீட்டதாக கூறுவாய். தற்பரானந்தன் சேர் தமிழ்க்கந்தையா வித்தியாசாலை அதிபராக இருந்த போது சிவநெறிக்கழகம் நடத்தும் சமய அறிவுப்போட்டியொன்றில் திருநாவுக்கரசராக நடிப்பதற்கு என்னையும் திருஞான சம்பந்தராக நடிப்பதற்கு சிற்பி ஐயாவின் மகன் சாயீஸ்வரனையும் தற்ப்பரானந்தன் சேர் தெரிவு செய்திருந்தார். சாயி முதலாம் வகுப்பு பச்சிளம் பாலகன். பாலுக்குப் பாலகனாக வேண்டி அழுதிட பொருத்தமான சம்பந்தக் குழந்தையின் குளுகுளு தோற்றம். நானோ மெலிந்த வாடிய உடல் வாகு. அப்பருக்கு நடிக்கத்தான் பொருத்தம். பெரிய சேர் (அந்தக்காலத்தில் அதிபரை பெரிய சேர் என்றுதான் சொல்லுவம் ) எங்களை கீரிமலை நகுலேச்சரம் ஆலயத்திற்கு போட்டிக்காக கூட்டிச்சென்றார். அவருடைய இல்லறமும் கீரிமலையில் தான். வழமையாக போட்டிகள் முடிய அவரது இல்லத்திலேயே எங்களோடு வந்த ஆசிரியர்கள் நாங்கள் மாணவர்கள் எல்லோரும் சாப்பிட்டு களையாறி கந்தரோடை திரும்புவோம். அன்றைய தினம் சம்பத்தக் குழந்தைக்கு உரிய வேடமிடப்பட்டு சாயி தயாரானார். ஏற்கனவே நான் தலையை மொட்டையாக வெட்டியிருந்தேன். ஆச்சி ( அம்மாவின் தாயார் ) வீட்டில் போய் உருத்திராட்சம் மாலைகள் முழுவதையும் வாங்கியிருந்தேன். திருநீறு. உருத்திராட்சம். காவியுடை எல்லாம் தரித்த படி இருந்த என்னிடம் பெரிய சேர் உழவாரமும் தந்தார். "வேல்தஞ்சன் இந்தக் கோவில் வீதியில தான் உழவாரத்தொண்டு செய்து காட்டி நடிக்க வேணும். அப்பர் தேவாரங்களை பாடிப்பாடித்தான் நடிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேணும்" என்று எனக்கு அறிவுறுத்தினார். மத்தியஸ்தர்கள் வந்து போட்டி தொடங்கியதும் பதட்டத்தில் தேவாரம் பாட மறந்து விட்டேன். போட்டியில் முதலாமிடம் எனக்கு இல்லை. இரண்டாமிடமே... நகுலேஸ்வர பெருமானின் அதே வீதியில் "ஏன் நீ தேவாரம் பாடேல்ல?" என்று கேட்டு பெரிய சேர் எனது செவிய முறுக்கோ முறுக்கென்று முறுக்கினார். இப்பவும் ஞாபகம் அவர் முறுக்கின முறுக்கில செவி வலித்து நெருப்புப்போல சுட்டது. வீட்டை வந்து அம்மாவிற்குச் சொன்னன். "அவர் சொல்லித்தந்தத நீ ஏன் செய்யேல்ல அதுதான் இனிமேல் நீ பிழைவிடாமல் இருக்கவேணும் என்று தான் அவர் உனக்கு சின்னத் தண்டனை தந்தவர். நீ அவர் சொன்னபடி செய்திருந்தால் உனக்கும் உன்ர பள்ளிக்கூடத்திற்கும் முதலாமிடம் கிடைச்சிருக்குமே...." என்று எனக்கு அம்மா நீ ஆறுதல் கூறினாய். "நீ பெரிய சேர் காதை முறுக்கினதுக்கு கவலைப்படுகிறாய்.... திருநாவுக்கரசரை கொதிக்கிற சுண்ணாம்பு அறைக்குள்ள போட்டாங்கள். மாசில் வீணையும் மாலை மதியமும் வீசு தென்றலும்.............. பொய்கையும் போன்றதே ஈசன் எந்தை இணையடி நிழலே என்று தான் பாடினார். கல்லோடு கட்டி கடலில போடேக்கையும் நற்றுணையாவது நமச்சிவாயவே என்று இறைவனை துணைக்கு கூப்பிட்டார் அப்பர்....." என்று விளங்கப்படுத்தினாய்.

எமது சிறுவயதிலிருந்து வாழ்வியல் துன்பங்களைத் தாங்கிக் கொள்ளவும் தனிப்பட்ட வாழ்வினதும் பொது வாழ்வினதும் சவால்களை எதிர்கொள்ளவும் நீ எங்களை போதியளவு தயார் செய்திருந்தாய். சமய புராண கதைகளினூடாகவும் விஞ்ஞான தத்துவங்களுக்கு ஊடாகவும் இலக்கியங்களுக்கு ஊடாகவும் எங்களுக்கு எதையும் தாங்கும் இதயத்தை வடிவமைத்துத் தந்திருந்தாய். ஆனால் நீ உறுதியாக கூறுவாய் "நான் செத்தால் நீங்கள் நல்லாக் கவலைப்படுவியள்...." அம்மா உனக்குத் தெரியும் நீ தான் எங்கள் கருத்துலகம். நீ தான் எங்கள் வாழ்வுலகம். நீ தான் எங்கள் தத்துவ வடிவம். நீ தான் மாதா. பிதா. குரு. தெய்வம் எல்லாமுமாக இருந்தவள். இதில் பொய்யோ. புனைவோ எள்ளளவும் இல்லை. எங்கள் வாழ்க்கைத் துணைகள். எங்கள் பிள்ளைகள். எங்கள் சம்பந்த வழிகள். எங்கள் உறவுகள. உற்றார்........ என அனைவருக்கும் இதனை திரும்பத் திரும்ப சொல்லியிருக்கிறோம். சொல்கிறோம். சொல்லிக்கொண்டேயிருப்போம். எங்கள் அம்மா எங்களுக்கு சூரியனாகவும் நிலவாகவும் அன்னை பூமியாகவும் எல்லாம் தந்து எல்லாம் சுமந்து எங்கும் எங்களைக் காத்து எங்களை நாங்களாக வடிவமைத்த எங்களது ஆலயம். வாழ்விலும் சாவிலும் எங்களுக்கு எங்கள் அம்மா வழிகாட்டுவார்.

பாசத்திற்குரிய மூத்தமகன்
வேல்தஞ்சன்
பாசத்திற்குரிய இளைய மகன்மார் சிவன்சேய்.ஹரிஹரசக்தி
ஆகியோர் சார்பிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அம்மா வற்றாத குடும்ப ஊற்று

மாதா - பிதா - குரு - தெய்வம் என்ற வாழ்வியல் நெறிமுறைக்குட்பட்டது சைவத்தமிழ்ச் சமூக வாழ்வு. இம் மனித வாழ்வியல் முறைகள் பல கிளைகள் பரப்பி நிழல் வழங்கும் பெரு விருட்சத்திற்கு ஒப்பானது. இப் பெரு விருட்சமானது சமூக வாழ்வின் ஒழுங்குபடுத்தப்பட்ட பல அமைப்புக்களுக்கும் பயனும் நிழலும் பரப்பி நிற்கின்றது. சமூக அமைப்பியல் பார்வையில் குடும்பம், கிராமம், நகரம், பிரதேசம், தேசம் . உலக சமூகம் என பல படிமுறைகள் காணப்படுகின்றன. கிழக்கத்தேய சமூகங்களாயினும் மேற்கத்தேய சமூகங்களாயினும் இப் படிமுறைகளில் பெற்ற தாயின் நெறியாள்கைக்கு முக்கியத்துவம் மிக்க இடம் இருக்கிறது. மழலையின் முதற் போசாக்கு ஊட்டத்திலிருந்து உடல் உள வளர்ச்சியை ஆரம்பித்து வைப்பதோடு பூரண மனிதனாக உருவாக்கி சமூகமயப்படுத்திவிடுவதில் தாயின் பங்கு காத்திரமானது.

இதற்கூடாக "எங்கள் அம்மா"..... நாங்கள் சிறுவயதிலிருந்து அம்மோய்! அம்மோய் எனக் கூப்பிடுகின்ற எங்கள் குடும்ப மரபில் அவ் அம்மோய் (அம்மா) எங்கள் வாழ்வின் அசைக்க இயலாத பெரு விருட்சம். நாங்கள் பிறந்த நாள் தொடக்கம் மட்டுமல்ல கருப்பையில் முளைத்த நாளிலிருந்தே ஒழுக்கத்துடன் ஒழுங்கு காத்து தெய்வ ஆசியுடன் பிள்ளையைப் பெற்றெடுக்க வேண்டும் என்ற பெரும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார். இது எங்களுக்கும் உங்களுக்கும் எல்லோருக்குமான பொது நியதியுமாகும். எங்கள் அம்மாவின் பாத்திரம் எங்கள் குடும்பப் பார்வையில் மிகவும் ஆழமானது. யாராவும் மதிப்பிட முடியாததுமாகும். எல்லாப் பிள்ளைகளுக்கும் அவரவர் தாய் அவ்வாறே. எங்கள் குடும்ப அமைப்பியல் நிலை குடும்பப் பாத்திரங்களின் பல்தரப்பட்ட நெறிமுறை ஆகியவற்றில் "அம்மோய்" இணைந்து செயலாற்றிய முறை ஆழ்ந்தகன்றது.

கந்தரோடைப்பதி தன்னில் வாழ்ந்த வேளாண்மை (விவசாயம்) மரபு வழி வந்த . வேளாண்மையே தங்கள் வாழ்வு ஊட்டும் வருமானத்துறையாக வைத்து சமூக முன்னேற்றம் கண்ட கந்தரோடை விவசாய சமூகத்தில் அமரர்கள் அப்பச்சி - முத்துப்பிள்ளை தம்பதிகளின் கனிஸ்ட புத்திரியே எங்கள் அம்மா. அமரர்கள் அப்பச்சி முத்துப்பிள்ளை தம்பதிகளின் முன்னோர்களும் அவர்களின் மரபினரும் தோன்றல்களும் கந்தரோடைக் கிராமத்தின் சைவத்தமிழ்ச் சமூகத்தின் அத்திவாரங்கள். கந்தரோடையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளும் வயலும் வயல் சார்ந்த நிலமும் ஆகும். சுற்றிச் சூழ பெரிய குளங்கள் காணப்படுகின்றன. இவ்வாறான மருத நிலத்தின் விவசாய உற்பத்தி நடவடிக்கைகளும் அவற்றைச் சந்தைப்படுத்தும் வகையில் முற்காலத்தில் சிறு நகரமாக வளர்ச்சி அடைந்த சுன்னாகத்தின் வாணிப நடவடிக்கைகளும் எங்கள் பேரன் பேர்த்தியின் தொடர்ந்து எங்கள் மாமன் மாரின் நிர்வகிப்புக்குள் கணிசமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவு இருந்துள்ளன. கந்தரோடை என்னும் மருத நிலத்தில் இரண்டு கந்தைய வள்ளல்கள் இரு கல்விச்சாலைகளை நிறுவினர். இதனால் விவசாய. வாணிப நடவடிக்கைகளில் ஈடுபாடு காட்டிய எங்கள் முன்னோர்கள் அடிப்படைக் கல்வியிலிருந்து உயர் கல்விவரை தமிழ் மொழி மூலமும் ஆங்கில மொழி மூலமும் கல்விகற்கும் பெரும் பேற்றைப் பெற்றனர். கல்விச் சாலைகள் தோன்றியதும் வேளாண்மை நடவடிக்கைகளை அவர்கள் எள்ளளவும் கைவிடவில்லை. கல்வி கற்பதோடு வயலிலும் உழைத்தனர். சுன்னாக நகரத்தின் சந்தைக் குத்தகை. நிர்வாகம் என்பன எங்கள் பேரனாரால் எங்கள் மாமாக்களின் உதவியுடன் மேற்க்கொள்ளப்பட்டது. விவசாயம். வர்த்தகம். கல்வி என மூன்று பரிமாணங்களில் ஓய்வு ஒழிச்சல் இன்றி ஈடுபட்ட குடும்பத்தில் பிறந்த எங்கள் தாய் இம் மூன்று பரிமாணங்களிலும் கவனம் செலுத்தி குடும்ப நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தும் பலம் மிக்கவராக தனது இளமைப் பருவத்தில் திகழ்ந்திருக்கிறார். எங்கள் மாமன்மார் இருவர் விவசாயம். வர்த்தகம். கல்வி என்ற முப்பரிமாணங்களுக்கு அப்பால் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஒறேற்றர் கால வீறு நடையில் மிகச் சிறந்த உதைபந்தாட்ட வீரர்களாகவும் திகழ்ந்துள்ளனர்.

இவ்வாறான குடும்ப ஒழுங்குக்குள் எள்ளளவேனும் சோம்பேறித்தனமில்லாத உழைப்பாளிகளின் அரவணைப்பில் மிக நேர்மையான வருமானத் தேடல் மிக்க குடும்பப் பின்னணியில் தனது ஆரம்பக் கல்வியை தமிழ் மொழி மூலம் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையிலும் தனது இடைநிலை. உயர்நிலைக் கல்வியை ஆங்கில மொழி மூலம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் எங்கள் அம்மா பயின்றார். தனது அண்ணன்மார் முன் உதாரணமாக ஆங்கில மொழி மூலமான கல்வியை 1950 ம் ஆண்டுக்கு முன்னரேயே தொடர்ந்து கற்றுத்தேறியிருந்தமை காணப்பட்டிருப்பினும் ஒரு விவசாயக் குடும்பத்திலிருந்து ஒரு பெண்மணி அந்தக்காலத்தில் ஆங்கிலக் கல்விப்புலத்தில் தனது கிராமத்துக் கல்லூரியிலேயே கற்றுத் தேர்ச்சி அடையும் வாய்ப்பு மிகமிகச் சிலருக்கே கிடைத்திருந்ததை அம்மாவிடம் இருந்து நாங்கள் கேட்டறிந்திருக்கிறோம். அதிலும் திருமணமாகி குழந்தைகளைப் பெற்று பராமரித்துக் கொண்டிருந்த அம்மாவின் மூத்த சகோதரிகளுக்கும் ஆதரவாக அப் பெறாப்பிள்ளைகளின் மொழியறிவு. கணிதம் கற்பித்தல் ஆகியவற்றிலும் பங்களித்துக் கொண்டு சுன்னாகம் நகரத்தின் சந்தைப்படுத்தல் குத்தகை நிதி விவகாரங்களின் பொறுப்புக்களில் தகப்பனுக்கு உதவிக்கொண்டு குடும்பத்தாரின் விவசாய நடவடிக்கைகளிலும் கருத்தூன்றிக்கொண்டு ஆங்கில மொழி மூலமான கல்வியில் பல்வேறுபட்ட பாடத்தெரிவில் உட்பட்டிருந்த அக்கால விஞ்ஞானப்பாடத்திட்டத்தை கற்று S.S.C தேர்வில் வெற்றி பெற்றார்எங்கள் அன்னை. தொடர்ந்து பூர்த்தி செய்யவில்லை ஆயினும் H.S.C வகுப்பிலும் கற்கும் வாய்ப்பை பெற்றார்.

எங்கள் அம்மாவின் மூதாதையர்களின் வாழ்வியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கு முறைமைக்கு அமைவாகவே யாழ்ப்பாணம் நீராவியடி பகுதியை பூர்வீகமாகக் கொண்ட கந்தர் சங்கரப்பிள்ளைக்கு ஏக புத்திரனாக பிறந்த எங்கள் தந்தை கனகநாயகம் அவர்கள் எங்கள் அம்மாவுடன் திருமண வாழ்வில் இணைந்தார். இது ஒரு நகர - கிராம சங்கமம் என்றும் கூறலாம். எங்கள் அப்பா யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவன். S.S.C ஆங்கில மொழி மூலம் கற்றுத் தேர்ந்து சிறுது காலம் தனிப்பட்ட ரீதியில் ஆசிரியராக சமூகத்திற்கு பணியாற்றி பின்னர் அரசாங்க எழுதுவினைஞர் சேவையில் இணைந்து கொண்டவர். எங்கள் அப்பா முதல் தாரத்தில் தனது மனைவியின் இறப்புடன் ஒரு பெண் பிள்ளையுடன் (எங்கள் ஆசை அக்கா) மறுதார வாழ்வில் (இரண்டாம் தாரம்) எங்கள் அம்மாவை துணைவியாக ஏற்றுக் கொண்டவர். எங்கள் அம்மா தனது குடும்பத்தில் பொறுப்புக்களைச் சுமந்தாலும் தனது தாய்தந்தையர் சகோதரர்களின் செல்லப்பிள்ளை என்றே கூறவேண்டும். 1970 ம் ஆண்டில் அப்பாவுடன் திருமணவாழ்வில் இணைந்து தனது கண்கண்ட தெய்வமாக அவரை ஏற்று வாழத்தொடங்கினார்.

திருமண வாழ்வு என்பது அதிகமாக மனிதர்களின் வாழ்வை தொண்ணூறு பாகையாலோ சில வேளைகளில் நூற்றியெண்பது பாகையாலோ திருப்பி விடுகிறது. அம்மாவின் வாழ்விலும் இவ்வாறான திருப்பு முனைகள் தோன்றத் தொடங்கியிருந்தன. அம்மா அப்பா திருமண வாழ்வு இணைப்பினால் எங்கள் ஆசை அக்கா அம்பிகாதேவியுடன் (நந்தினி) நாங்கள் மூன்று ஆண் பிள்ளைகள் (வேல்தஞ்சன், சிவன்சேய், ஹரிஹரசக்தி) என நான்கு பிள்ளைகளாக மொத்தம் ஆறு அங்கத்தவர்கள் உள்ள குடும்பமாக வளர்ந்தோம். எங்கள் அம்மாவின் இல்லற வாழ்விலும் எங்கள் இனிய குதூகலத்திலும் அப்பாவின் அலுவலக பணியிலும் நோய் அரக்கன் வந்து குறுக்கிட்டான். நாங்கள் ஆரம்பக் கல்விப் பருவத்தில் இருந்த காலத்திலேயே ( அக்காவிற்கு பதினைந்து வயது இடைநிலைப் பள்ளிப் பருவம்) எங்கள் அப்பா மிகக் கடுமையாக நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் அரசினர் வைத்திய சாலையில் 1980, 1981,1982 ம் ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இவரின் வைத்தியசாலை உதவிகளைச் எங்கள் உடன் பிறவாத அண்ணன் மார் கவனித்தனர். அம்மாவின் வைத்தியசாலைக்கான தொடர் பயணத்தில் நான்கு வருடங்கள் அள்ளுண்டு போயின. எங்கள் அக்காவின் இடைநிலைக் கல்வி நிறைவு பெற்றதன் பின்னர் தனது தந்தையின் கடமைகளைக் கவனிப்பதோடு தனது தம்பிமார்களில் கண்ணும் கருத்துமாக இருந்து எங்கள் அப்பாவின் வைத்தியசாலைக் கஸ்டங்களுக்கு பேருதவியாக தனது பொறுப்பினை வழங்கினார். எங்கள் அக்காவே எங்களுக்கு உணவு தாயார் செய்து தருவார். எங்களை நீராடச் செய்து பாடசாலைக்கு தயார் படுத்தி அனுப்பி வைப்பார். எங்கள் ஆரம்பப் பள்ளிப்பருவக் காலத்தில் அப்பா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததும் அம்மா அப்பாவினுடைய வைத்திய விடயங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணும் கருத்துமாக இருந்ததும் எங்கள் ஆசை அக்கா தனது தம்பிமார்களை கவனித்ததும் எங்கள் உடன் பிறவாத அண்ணன்மார் அக்காமார் எங்களுக்கு பாதுகாப்பாக இருந்ததும் எங்கள் பெரியம்மா மார் அம்மாவிற்கு உதவியாக இருந்ததும் எங்கள் மாமா (அமரர் வன்னியசிங்கம்). எங்கள் ஆசைமாமா (திரு. முருகையா) மற்றும் எங்கள் அப்பாவின் உறவினர்கள் யாவரும் சிறுவயதில் பக்கபலமாக இருந்ததும் எமக்கு என்றைக்கும் மறக்க முடியாத நன்றிக்குரிய காலமாகும். 1982ம் ஆண்டு தை மாதம் 17ஆந் திகதி எங்கள் அப்பா குணப்படுத்த இயலாத நோயினால் பாதிக்கப்பட்டு இறைவனடி சேர்கின்றார். அப்பாவின் இறப்பின் போது அக்காவிற்கு (அம்பிகாதேவி) வயது பதினெட்டு. அண்ணைக்கு (வேல்தஞ்சன்) வயது பதினொன்று. மைந்தனுக்கு (சிவன்சேய்) வயது ஒன்பது. எனக்கு வயது எட்டு.

அப்பாவின் இழப்பின் பின்னர் எங்கள் குடும்ப வாழ்வில் மேலும் சடுதியான மாறுதல்கள் ஏற்பட ஆரம்பிக்கின்றன. எங்கள் அக்கா திருமண வாழ்வில் இணைந்து கொள்கிறார். அவர் தனிக் குடும்பமாகி எங்களைத் தற்காலிகமாக பிரிந்து சென்றார்.

எங்கள் அம்மா சிறுவர்களின் அனைத்துப் பொறுப்புக்களையும் தாங்கும் தாயாகவும். தந்தையாகவும். நல்ல ஆசிரியராகவும் எல்லாவற்றுக்கும் மேலாக கடவுள் நம்பிக்கையை வளர்க்கும் தெய்வமாகவும் எங்களை வழிப்படுத்துகிறார். எங்கள் அப்பாவுடன் பன்னிரண்டு வருடங்கள் மட்டும் (அதில் நான்கு வருடங்கள் வைத்தியசாலை அலைச்சல்) வாழ்ந்த எங்கள் அம்மா தன் சிறுவர்களின் எதிர்கால வாழ்வு மேம்பாட்டிற்காக இரண்டு தசாப்த காலத்திற்கு மேலாக தனித்து மனிமரமாக நின்று நிழல் கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டு விட்டது. எங்களின் பாடசாலைக்கல்வி. ஆரோக்கியமான உணவு. பழக்கவழக்கங்கள். வாழ்வியல் முறைகள் அனைத்திலும் எமக்குப் பின்னால் தனித்து நின்று வழிப்படுத்தும் சிறந்த தெய்வமாக எங்கள் அம்மா வாழ்ந்துள்ளார்.

அம்மாவின் அசைக்க இயலாத இறைபக்தி. வெளிமனதுடன் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் திறன். உள்ளொன்று வைத்து வெளியொன்று கதைக்காத தூய மனம் என்பன அவரது வாழ்வின் இறுதிப் பயணம் வரை சிறப்பாக சிந்திக்கவும் நல்வழியில் வாழவும் வழிப்படுத்தியுள்ளது. எங்கள் அம்மா வாழ்க்கைப் பந்தயத்தில் சிறந்த வீராங்கனை என்றே என்னால் கூறமுடியும். மேலும் யதார்த்தமாக கூறுவதானால் எங்கள் அம்மா வாழ்க்கைப் போராட்டத்தின் ஒரு சுறுசுறுப்பு மிக்க தைரியம் நிறைந்த ஒரு வாழ்வியல் போராளியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் எவருக்கும் விட்டுக் கொடுக்காத சுறுசுறுப்பான இயல்புதான் அப்பாவின் இறப்பிற்கு பின்னர் மூன்று ஆண் பிள்ளைகளையும் சிறந்த வாழ்விற்கு மேம்படுத்துவதற்கு வழிகாட்டியாக அமைந்தது. அது மட்டுமல்ல எங்கள் அக்காவின் குடும்ப மேம்பாட்டிற்கும் அத்திவாரம் இட்டது.

எங்கள் அம்மா தனது உறவினர்கள் யாவரிடமும் மனந்திறந்து தனது கருத்துக்களைப்பரிமாறி அவர்களை வழிநடத்தும் சிறந்த தலைவி. எனினும் அவரது கல்வி, திறமை, அனுபவம் ஆகியன ஒரு பொருத்தமான சமூகச் சூழலில் பதியமிடப்பட்டிருக்குமானால் அவர் தனது சொந்த வாழ்விலும் பொது வாழ்விலும் பாரிய வெற்றிகளை ஈட்டியிருந்திருக்கலாம். ஒரு சமூக அமைப்பில் தலைமை தாங்கும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கலாம். தனது பிள்ளைகள் குடும்ப வாழ்வில் இணைந்து கொண்ட பின்னரும் அவர்களின் குடும்ப வாழ்வின் உயர்வுக்காகவும் மருமக்கள், பேரப்பிள்ளைகளின் நல்வாழ்வுக்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர். தனது தனிப்பட்ட கஸ்டங்கள் தனது பிள்ளைகளின் குடும்பத்தில் துன்பத்தை வளர்க்க கூடாது என்பதற்காக தனது அனைத்து வேலைகளையும் தானே நிறைவேற்றி வந்தார். அம்மாவின் எந்தப் பொறுப்பையும் ஏற்பதற்கு நாங்கள் என்றும் தயாராகவே இருந்தோம். அத்துடன் எல்லா வகையான பணிகளையும் முழுமையாக நிறைவேற்றினோம்.

அம்மாவின் இறுதிப்பயணம் 2008 கார்த்திகை மாதம் இருபத்தியாறாம் திகதி ஏற்பட்ட நிஷா புயல் அனர்த்தத்துடன் சம்பந்தபபட்டது போல உள் மனம் சொல்கிறது. அம்மாவின் எழுபத்தியிரண்டாவது பிறந்த தினமும் அன்று தான். வழமையாக அவரது பிறந்த தினத்தில் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்து திருநீறு, பிரசாதம் அவருக்கு கொடுக்கும் வழக்கம் என்னிடம் இருந்தது. ஆனால் அன்றைய தினம் அம்மாவின் உள்ளத்தில் எழுந்திருந்த துயரச் சூறாவளியும் இயற்கையின் நிஷாச் சூறாவளியும் ஒன்று மற்றொன்றின் பிரதிபலிப்போ என்று எண்ணும் வகையில் அமைந்து விட்டது. எம்மைச் சான்றோர் எனக் கேட்க விரும்பிய எங்கள் தாயின் இறுதிக் கணம் வரையான இவ்வுலகக் கனவு என்றும் நனவாகவே நீடிக்கும் என்று தாயின் ஆத்ம வலிமையோடு நம்புகிறோம்.

அம்மா இழக்கப்படுவதுஇயற்கைக்கு முன் கூட்டியே தெரிந்தது போல் நூற்றாண்டு பழமை வாய்ந்த பெரு விருட்சங்கள் சாய்ந்தன. அம்மாவும் இவ் இயற்கை அனர்த்தத்தைக் கண்டு ஆச்சரியம் அடைந்தார். உடல் தளர்வுற்றிருந்த அம்மாவை 30.11.2008 ஞாயிறு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில்அனுமதித்தோம். தொடர்ந்து 2008 மார்கழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம் முழுவதும் தனது இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் பல சிகிச்சை முறைகளுக்கு உட்படுத்தப்பட்டார். முக்கிய பிரச்சனையாக அவரின் குருதியில் யூரியாச் செறிவு அளவுக்க அதிகமாக இருந்தது. வழமையான உணவுகளை உண்ணும் விருப்பின்றி இருந்தார். திரவத்தன்மையான உணவு வகைகளை பரிமாறினோம். ஆனாலும் ஜீவ மரணப் போராட்டத்தில் அவரால் வெல்ல முடியவில்லை. இருபத்தியொன்பது மார்கழி இரண்டாயிரத்துதெட்டு (29.12.2008) முற்பகல் 10.55 மணிக்கு சிவசக்தியின் பாதங்களை சென்றடைந்து விட்டார்.

"பிறப்பு உண்டேல் இறப்பும் உண்டு" என்ற நியதிக்கு அமைவாக எங்கள் தாய் எங்களிடம் இருந்து பிரியாவிடை பெற்றுச் சென்றுள்ளார். எங்கள் அம்மாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக..

15.01.2009
தொல்புரம் மேற்கு
சுழிபுரம்.

இளைய மகன்
க.ஹரிஹரசக்தி
(இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை)
விரிவுரையாளர்
யாழ. தேசிய கல்வியியல் கல்லூரி
கோப்பாய்

"அன்பிலார் எல்லாம் தமக்குஉரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

(குறள் - 72)

**The loveless to themselves
belong alone;
The loving men are others'
to the very bone.**

(G.U.Pope's English Translation )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மை அரவணைத்து வளர்த்த அன்னை

எங்கள் வரலாற்று பெருமை மிக்க கந்தரோடை பதியில் நாகமுத்து அப்பச்சி - முத்துப்பிள்ளை தம்பதியின் கனிஸ்ட புத்திரியாக பிறந்தவர் தான் என் அன்னையின் தங்கை அமரர் திலகவதி கனகநாயகம் அவர்கள்.

இன்றுபோல் அல்லாமல் அன்று நாம் அனைவரும் கூட்டுக் குடும்பமாகவே வாழ்ந்து வந்த காலம் இன்றும் எங்கள் நெஞ்சில் நீங்காத நினைவலைகளை தோற்றுவித்துக் கொண்டுதான் இருக்கிறது. நாம் பிறந்த நாள் முதல் எம்மை அரவணைத்து வளர்த்த பெருமை எமது சிறிய தாயாராகிய திருமதி திலகவதி அவர்கட்கு உரியது.

எமது சிறு வயதிலிருந்து நாம் கல்வியில் ஆர்வம் காட்டவேண்டுமென்பதில் மிகுந்த அக்கறையுடன் எமது பெற்றோரை விட ஆர்வம் காட்டியவர் எமது சிறிய தாயார்தான் என்பது என்றுமே மறக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை.

ஆன்மீகப் போக்கில் அதிகம் நாட்டம் காட்டி தன் வாழ்க்கையை நெறிப்படுத்தி வந்த அவர். தன் சொந்த வாழ்கையின் உயர்ச்சியை சிறிதும் சிந்திக்காமல்விட்டது எம் அனைவருக்கும் வேதனை தரும் விடயமாகவே இருந்து வந்தது.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் ஆங்கில மொழிமூலம் விஞ்ஞானக் கல்வியைகற்று சிரேஸ்ட தாராதரப் பத்திரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறைப் பெற்று பலரும் பாராட்டும் வகையில் மேம்பட்டுத் திகழ்ந்தார். நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட "அப்போதிக்கரி" பரீட்சையில் சித்தி பெற்று கிடைத்த பதவியை உதறி விட்டு தன் தாய் தந்தையரின் நலன் மீது மிகுந்த அக்கறையும் பரிவும் காட்டி அவர்கள் பணியே மகத்தானது என்று எண்ணி வாழ்ந்த பெருந்தகையாவார்.

அவர் கரம் பற்றிய கணவர் திருவாளர் கனகநாயகம் அவர்கள் மிகுந்த அமைதியும் அன்பும் அறிவும் நிறைந்த ஒருவராக தன் குடும்ப வாழ்வை சிறப்பாக நடாத்தி வந்த காலத்தில் அவர்களுக்கு கிடைத்த பெரும் பேறாக மூன்று ஆண் மக்களைப் பெற்றெடுத்தனர். அவர்கள் மீது மிகுந்த பாசமும் பரிவும் காட்டி கல்வியில் உயர்ந்து நிற்க வேண்டுமென அவர் கண்ட கனவை மூவரும் நனவாக்கி அன்னை விரும்பிய வகையில் தம்மை அரச பணிகளில் இணைத்துக் கொண்டு வாழ்ந்து வருவது மகத்தானது ஆகும். அவர்களது மூத்த புதல்வன் சிறந்ததோர் ஆங்கில புலமையாளனாகவும் எழுத்தாற்றல் மிக்க ஒருவனாகவும் திகழ்ந்து நிற்பதோடு வெகுஜன ஊடகத்துறைசார் பங்களிப்பிலும் வெகுஜன ஊடககல்வியிலும் வளர்ச்சி கண்டு பாராட்டுக்களைப் பெற்றமை பெற்றோருக்கும் எமக்கும் பெருமை தரும் விடயமாகும். இத்தனை பேற்றையும் பெற்று வையத்தள் வாழ்வாங்கு வாழ்ந்த எம் அன்னையின் ஆன்மா எல்லாம் வல்ல அருளானந்த விநாயகனின் பாதக்கமலங்களில் சரணடைந்து சாந்தி பெற நாம் அனைவரும் இறைஞ்சுவோமாக.

பெறாமகன்
சின்னப்பா பேரின்பநாயகம்
(சமாதான நீதவான்)
களஞ்சியப் பொறுப்பாளர்
சுன்னாகம் ப.நோ.கூ.ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிச்சல் மிக்க அன்னை

எளிமையான உடை; நீறணிந்த நெற்றி; தீட்சண்யம் மிக்க பார்வை; பரிவுடன் அரவணைக்கும் வார்த்தை; புராண இதிகாசங்களிலிருந்து உதாரணம் சொல்லி எப்போதும் அறிவுறுத்தும் பாங்கு இத்தனையும் அன்னை திலகவதி கனகநாயகம் அவர்கள் தொடர்பில் என் மனதில் படிந்த படிமங்களாகும்.

அகழ்வாரைத்தாங்கும் பூமியையும். பிழைபொறுக்கும் கங்கையையும் பெண்களாக உருவகித்த எமது பண்பாட்டு பாரம்பரியத்தில் பெண்கள் மென்மையின் வடிவமாக சித்தரிக்கப்பட்டனர். அந்தப் பெண்கள் சிறுமை கண்டு பொங்குகின்ற. அநீதிகளை எதிர்த்து நிற்கின்ற போர்க்குணம் கொண்டவர்களாகவும் இலக்கியங்களில் உலா வந்துள்ளனர்.

அமரர் திலகவதி கனகநாயகம் அவர்களும் அப்படித்தான். நீறணிந்த சாதுவாக்கப்பட்ட நிலையிலிருந்து தனக்கோ. பிறருக்கோ அநீதி நேரும் போது எதிர்த்துக் குரலெழுப்பும் போர்க்குணம் மிக்கவராகவும் மாறிவிடுவார். மனிதர்களில் பெரும்பாலும் ஒத்தோடிகளே அதிகம். அதிகாரம் என்பது சமூக விமர்சனமற்ற ஒத்தோடிகளையே ஊக்குவித்தும் வந்துள்ளது. அதனால் பலரும் குறிப்பாக பெண்கள் அநீதிக்கெதிராக குரலெழுப்பவோ. சமூக விமர்சனம் செய்யவோ முன்வருவதில்லை.

அமரர் திலகவதி கனகநாயகம் அவ்வாறானவரல்லர். சமூகத்தின் நீதியற்ற செயற்பாடுகள் மீதான விமர்சனம் அவரிடம் இருந்தது. அநீதி நேரும் போது அதை எதிர்த்துக் குரல் கொடுக்கின்ற. நியாயத்தை நிலைநாட்டுகின்ற துணிச்சல் அவரிடமிருந்தது. கனிவும். மென்மையும் அரவணைப்பும் மிக்க அவரிடமே கண்டிப்பும். நியாயம் நோக்கிய போர்க்குணமும் காணப்பட்டன. அவரது தனிப்பட்ட வாழ்க்கைப் பயணத்தில் அவரது வெற்றிகள். தோல்விகள் என்ற ரீதியில் விமர்சிப்பதைக்காட்டிலும் பெண் ஒடுக்கு முறை மலிந்திருந்த யாழ்ப்பாணச்சமூகத்தின் மரபுவாதக் கிராமமான கந்தரோடையில் முற்போக்கான துணிச்சல் மிக்க அணுகு முறைகள் மூலம் எத்தகைய தடங்களை விட்டுச்சென்றிருக்கிறார் என்பதை நினைத்துப்பார்ப்பதும் அதன் ஆக்க பூர்வமான பக்கங்களை வரவேற்பதும் இன்றைய காலத்தின் தேவையாகிறது.

இத்தகைய துணிச்சல் மிக்க தாய்மையை பெற்ற பிள்ளைகள் தாமும் அத்தகைய துணிச்சலையும் முற்போக்கையும் பேணி பெருமை அடைவார்களாக.

எஸ். ஶ்ரீகுமரன் B.A.,Spl.Trd.,Dip.in Ed.,M.E d.
ஆசிரியர்
யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

யாழ்ப்பாண தீபகற்பத்தின் வளம் கொழிக்கும் பூமியான வலிகாமத்தின் பழம் பெரும் தமிழ் கிராமமான கந்தரோடையை சேர்ந்த எனது நண்பனான வேல்தஞ்சன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி கனகநாயகம் திலகவதி அவர்கள் 29.12.2008 அன்று காலை அமரத்துவம் எய்திய செய்தி கேட்டு ஆற்றொணா துயரடைந்தோம்.

அன்னார் தமது புதல்வர்கள் சிறுபராயத்தினராக இருந்த போதே தமது கணவனை இழந்தும் உளம் தளராது தியாக உணர்வோடு தமது பிள்ளைகளுக்காக தன்னை அர்ப்பணித்து வளர்த்தெடுத்து அவர்களை சமூகத்தின் நற்பிரசைகளாக்க பாடுபட்டவர். அதன் வழி சிரேஷ்ட புதல்வரை அரச முகாமைத்துவ நெறிசார் பதவியிலும் அடுத்த மகனை ஆசிரியராகவும் இளைய புத்திரனை கல்வியியல் கல்லூரி விரிவுரையாளராகவும் மிளிர விட்டுள்ளார்.

தாய்மைக்கு பெருமை சேர்த்தாய் தரணியில்
வாய்மைக்கோர் விடிவு தந்தாய் வளமுயர்
சேயெல்லாம் சிறக்க வாழ்வு தந்தாய்
நின்னயலில் வேறுயாரும் உனைப்போல் உண்டோ

உன் பிரிவால் துயர் கொள்ளும்
உன் குடும்பம் துயர் பகிர்ந்து
உன் ஆத்ம சாந்திக்காய்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொ.ஜக்சீல்
(முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர்
யாழ் மாநகர சபை)
களஞ்சியப் பொறுப்பாளர்
வீதி அபிவிருத்தித் திணைக்களம்
யாழ்ப்பாணம்

"ஈன்ற பொழுதிற் பெரிதுஉவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

(குறள் - 69)

**When mother hears him named**
**'fulfill'd of wisdom's lore,'**
**Far greater joy she feels,**
**than when her son she bore.**

(G.U.Pope's English Translation )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கந்தா கல்லூரி கால நினைவுகள்

"திலகவதி பவுடர் பூசுவது குறைவு. படிக்கிற காலத்தில திருநீத்து குறியும் கறுப்புப் பொட்டோடயும் பள்ளிக்கூடம் வருவா. ஸ்கந்தாவில 8 th Standard இல் இருந்து S.S.C சோதனை எடுக்கும் வரைக்கும் அவாவுடன் கூடப்படித்தேன். வகுப்பில் இருந்திருந்திட்டு நல்ல முஸ்பாத்திக் கதைகள் கதைப்பா. வகுப்பு தொடங்க முன்னமும் வகுப்பு முடிஞ்ச பிறகும் பொம்புளப்பிள்ளையள் Ladies' Room இல் நிற்பம். நிக்கிற போது Junior Girls, Senior Girls அனைவருடனும் பாத்துப்பாராமல் பகிடியாக கதைப்பா. எங்களுக்கு Senior Batch இல் படித்த சண்டிலிப்பாயை சேர்ந்த அமுதலிங்கம் என்பவரின் சகோதரி லீலாவதி எங்கட Same Batch இல் Arts Class இல் இருந்தா. அவா தாங்கள் வீட்டில அயன் சேவுக்குள்ள தங்களுடைய சாமானுகளை வைத்து பூட்டி விட்டு எங்கயென்டாலும் வெளிக்கிடுறதா எனக்கும் திலகவதிக்கும் சொல்லுவா. அடிக்கடி இதை லீலாவதி சொல்லச்சொல்ல திலகவதியும் அத ஒரு விதமான பகிடியாக்கி எங்களை சிரிக்க வைப்பா. அதுக்கு பிறகு லீலாவதி அயன் சேவுக்குள்ள பூட்டி வைக்கிற கதைய சொல்லுறேல்ல. Arts Class இல இருந்த Girls ஐ விட Science Class இல S.S.C இல மிகக் குறைவானவர்களே இருந்தம். அதுவும் எங்கட Batch இல நானும் திலகவதியும் இரண்டேரண்டு பொம்பிளைப்பிள்ளையளே இருந்தம். நிறைய பெடியங்கள் இருந்தாங்கள். ஒறேற்றரின் மகன் கந்தசாமி வைசரின் மகன் சிவானந்தராஜா சுன்னாகம் டாக்குத்தர் மகேசன் போன்றோரை ஞாபகம் இருக்கு. ஒறேற்றர் சுப்பிரமணியம் வந்து பெட்டயள நுள்ளிப்பார்த்து கைத்தசையை இழுக்க அவரது விரல்கள் சறுக்கிச் செல்லும். திலகத்தை கோப்பி என்றும் என்னை மில்க்றொபி என்றும் கூறுவார். ஒறேற்றர் தான் English படிப்பிச்சவர். Vice Principal லும் பாடம் எடுத்தவர். கந்தரோட விஸ்வநாத குருக்கள் தமிழ் படிப்பிச்சவர். Botany நாகப்பர் படிப்பித்தார். இந்தியாவில இருந்து இங்கு வந்த மத்தியூஸ்நையினார் Zoology படிப்பிச்சார். பாடங்களில கேள்வியலுக்கு திலகவதி கிளியராக விடை சொல்லிப்போடுவா. ஆனால் Ladies Room இல அவாவின்ர பகிடியல் தாங்கேலாது. ஒருக்கா மனோன்மணி ரீச்சர் அவா தையல் படிப்பிச்சவா சொன்னா - கிரமபோன் மாதிரி திலகவதி நெடுகலும் கதைச்சுக்கொண்டிருக்கிறீர்.

அந்தக்காலத்தில தமிழ்க்கந்தையா வித்தியாசாலை. ஸ்கந்தவரோதயாக்கல்லூரி எண்டு ஊரில கதைக்கிரேல்ல. சின்னப்பள்ளிக்கூடம், பெரிய பள்ளிக்கூடம் எண்டும் தமிழ்ப்பள்ளிக்கூடம், இங்கிலீசு பள்ளிக்கூடம் எண்டும் கதைப்பினம். நாங்கள் எல்லாரும் - திலகவதி, நான் எல்லாரும் தமிழ்ப்பள்ளிக்கூடத்தில படிச்சு இங்கிலீசு பள்ளிக்கூடத்துக்கு போனனாங்கள். திலகவதின்ர தகப்பன் அப்பச்சியும் என்ர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகப்பன் இராமுவும் நெருங்கிய சொந்தக்காரர் கடைசியா இரண்டு வருசங்களுக்கு முன்னுக்கு திலகவதி எங்கட வீட்ட வந்தா. எங்கட Batch இல Arts Class படிச்ச லலிதாம்பிகையும் நேரத்தோட போயிட்டா. நானும் நீங்களும் மிஞ்சியிருக்கிறம் எண்டு சொன்னா. ஒரு நாள் அதுவும் இரண்டு வருசத்துக்கு முன்னுக்குத்தான் யாழ்ப்பாணத்திற்கு பஸ்ஸில போய்க்கொண்டிருந்தனான் அந்த பஸ்ஸில திலகவதியும் ஏறினவா அவாவும் யாழ்ப்பாணம் தான் வந்து கொண்டிருந்தா. "சோதிமணி உமக்கொண்டு சொல்ல வேணும்...." என்னைக்கண்டுட்டு சொல்லிக்கொண்டு என்ர சீற்றுக்கு கிட்ட வந்தா. "இந்த கொண்டக்ரர் பெடியங்கள் இளம் பெட்டயள் பஸ்ஸை மறிச்சால் நிப்பாட்டி கவனமா ஏத்திக்கொண்டு போவங்கள். எங்களைப்போல கிழவியள் எண்டால் ஓட ஓட ஏறச்சொல்லுவங்கள் ஏறினால் சீற்றும் தரமாட்டாங்கள்." இதைக் கேட்ட கொண்டக்ரர் பெடியன் "அக்கா எழும்பி இந்த அம்மாவுக்கு இடங்கொடுங்கோ" என்று சீற்றிலிருந்த குமர்ப்பிள்ளையை கேட்டான். "இல்லப்பிள்ள நீ இரு.... நான் பகிடிக்குச் சொன்னனான்..." எனக்கு அந்தக்காலத்தில திலகவதி Ladies Roomஇல விட்ட பகிடியள் ஞாபகம் வந்துது.

இப்ப அவா போயிட்டா. அவாவின்ர ஆத்மா சாந்தியடைய வட்டாக்கை அம்மனை கும்பிடுவம்.

**யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் திருமதி க. திலகவதி அவர்களுடன் சக மாணவியாக கல்வி கற்ற திருமதி நவரட்ணம் சோதிமணி [வயது - 72] 11.09.2009 அமரரின் மகனுடன் பரிமாறிய கருத்துக்களின் பதிவிலிருந்து....**

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பதுபோலும் பிறப்பு"

(குறள் - 339)

**Death is sinking**
**into slumbers deep;**
**Birth again is waking**
**out of sleep.**

(G.U.Pope's English Translation )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அமரர் திலகவதி அம்மையார் எம் எல்லோருக்கும் ஒரு வழிகாட்டி"

அன்னை திருமதி திலகவதி கனகநாயகம் அவர்கள் காலமாகிவிட்டார் என்ற அறிவித்தலை பத்திரிகை வாயிலாக அறிந்து அதிர்ச்சி அடைந்து அன்னைக்கு இறுதி அஞ்சலியை செலுத்தவென தொல்புரத்திற்கு விரைந்த போதிலும் அது கைகூடவில்லை. அவர் குறித்த நேரத்தில் தனது இறுதிப்பயணத்தை மேற்கொண்டுவிட்டார். என்ன செய்வது? அன்னையின் நினைவுகள்தான் தொடர்கின்றன.

1995ம் ஆண்டு ஒக்ரோபர் 30ம் திகதி வலிகாமம் பிரதேசத்திலிருந்து ஒட்டுமொத்தமான இடப்பெயர்வு. வடமராட்சி, தென்மராட்சி,வன்னி, தென்னிலங்கை, வெளிநாடுகள் என மக்கள் சிதறி ஓட்டம்! 1996ம் ஆண்டு ஏப்ரல் 21ம் திகதி திரும்பி எமது வதிவிடங்களுக்கு வருகின்றோம். கணிசமானவர்களின் வரவு தாமதப்படுகின்றது அல்லது மீள்வரவை விரும்பாது சென்ற இடங்களில் தங்கி விடுகின்றனர். இந்நிலையில் அன்னை அவர்களும் குடும்பத்தினரும் தமது சொந்தக்கிராமமாகிய கந்தரோடையில் வீடு அழிந்திருந்ததால் அங்கு செல்ல முடியவில்லை. எமது வீட்டுக்கு அருகில் உள்ள வீட்டில் குடியமர்கின்றனர். அந்த வீட்டின் பின்புறத்தில் ஒரு பெரிய புளிய மரம் உண்டு. அன்று தொடக்கம் ஏற்பட்ட அன்னையுடனான உறவு வளர்ந்து பெருகியது. நாள்தோறும் வருவார். நாங்களும் போவோம். புளியமரம் உள்ள வீடான படியால் அன்னையை "புளிவீட்டு ஆச்சி" எனச்செல்லமாக அழைப்போம்.

இந்நிலையில் எனது குடும்பத்தினர் 1997இல் இந்தியாவுக்குச் செல்லவேண்டி ஏற்பட்டது. அந்த நேரத்தில் "நான் உங்கள் வீட்டினைப்பொறுப்பேற்று நீங்கள் வரும்வரை கவனமாக பராமரித்து தருகின்றேன்" எனக்கூறி அப்படியே நிறைவேற்றியவர். அன்னையவர்கள் சொன்னதைச்செய்பவர் ; செய்வதை சொல்பவர். அவருடன் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேல் அன்போடு பழகியதிலிருந்து அவரது நேர்மை, நிதானம், மற்றவர்களை மதிக்கும் பண்பு, உறவினைப்பேணும் பண்பு ஆகியன அவரது மிகச்சிறப்பான அணிகலன்களாக இருந்துள்ளன எனக்கூறுவேன். வெளிப்படையானவர் ; மனதில் வஞ்சகமில்லை; மற்றவர்களை வஞ்சிப்பதுமில்லை.

அமரர் அன்னையவர்களின் வாழ்வுப்பாதை மேடுபள்ளம் நிறைந்ததாக இருந்துள்ளது. அவரது அன்புக்குரிய கணவருடன் பன்னிரண்டு வருடங்களே வாழக்கிடைத்தது. அவரது கணவர் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார். அப்பொழுது அவர்களது பிள்ளைகள் சிறு பராயத்தினர். அவர்களின் கல்வி மற்றும் அவர்களை நற் பிரசைகளாக்குதல் ஆகிய விடயங்களில் அவர் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை எமக்கு கூறும் போதுஉண்மையில் அவரது மனத் தையிரியத்தினையும் மனத்திடத்தினையும் நாம் வியந்ததுண்டு. அவரது உழைப்பு வீண் போகாது. அவரது பிள்ளைகளான அம்பிகாதேவி, வேல்தஞ்சன், சிவன்சேய், ஹரிஹரசக்தி ஆகியவர்கள் தங்கள் தனிப்பட்ட வாழ்விலும் பொது வாழ்விலும் சிறப்படைவார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. ஏனெனில் தாயின் வாழ்வும் அவரது பாடுகளும் நேர்மையும் வெளிப்படைத்தன்மையும் மிக்கவை. அவர்களது தாய் ஒளிவு மறைவு இல்லாத வெளிப்படையான சீவன்.

அன்னை திலகவதி அம்மையார் அவர்கள் தனது வாழ்வுப் பாதையினை எங்களுக்கு அடிக்கடி கூறுவார். எங்கள் குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் அன்போடும் ஆர்வத்தோடும் விருப்போடும் அவரது கதைகளை கேட்போம். அவரது ஒவ்வொரு கருத்துக்களும் மற்றவர்களுக்கு வழிகாட்ட வல்லது. ஆன்மீகம், தமிழ், உலக விவகாரங்கள் தொடர்பாக ஆழமாக கற்றவர்; ஆங்கிலப்புலமையும் அவரிடம் இருந்தது. அவர் ஒரு ஆசிரியராக அல்லது அரச நிறுவனத்தில் பணிபுரிவதற்கு சந்தர்ப்பம் கிடைத் திருந்திருக்குமானால் நிட்சயமாக அவர் மிகப்பெரிய பதவி ஒன்றிலிருந்தே ஓய்வு பெற்றிருப்பார் என்பதில் எந்தவித ஐயமும் கொள்ளத்தேவையில்லை. ஏனெனில் ஒரு விவசாயக் குடும்பத்திலிருந்து முற்போக்கான குணாம்சம் பொருந்திய நிலையில் அந்தக் காலத்திலேயே ஆங்கில மொழி மூலத்தில் சிரேஸ்ட பாடசாலைத் தராதரப்பத்திர பரீட்சையில் ஆங்கில மொழிமூலமான பாடத்திட்டத்தில் சித்தியடைந்ததுடன் உயர்கல்வியையும் தொடர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

*மேலும் அன்னை திலகவதி அம்மையார் ஒரு நாள் மிகுந்த களைப்புடன் வீட்டுக்கு வந்தார். அவர் பதட்டத்துடன் காணப்பட்டார். ஏன் இப்படி இருக்கிறீர்கள் எனக் கேட்டோம். உடனே ஒரு கடிதத்தினை பார்க்குமாறு தந்தார். அக்கடிதம் ஒரு பிரதி. அதில் அன்னையவர்கள் யாழ்பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி அவர்களுக்கு தான் இறக்கும் பட்சத்தில் தனது உடலை மருத்துவ பீடத்திற்கு ஒப்படைக்கவுள்ளேன். என்று எழுதியிருந்தார். அத்துடன் தான் அவரிடம் நேரில் சென்று அக்கடிதத்தினை கொடுத்து விட்டதாகவும் கூறினார். அப்போது இது பற்றி உங்கள் பிள்ளைகளிடம் கூறிவிட்டீர்களா எனக் கேட்ட போது "ஆம்" என்றார். இது ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சம்பவம். யாழ் பல்கலைக்கழகம் இது விடயத்தில் தொடர்ச்சியாக அணுகாத நிலையினால் அவரது மிகச்சிறந்த நோக்கம் - சிந்தனை கொண்ட அவரது அபிலாசையானது எமது மருத்துவபீட மாணவர்களின் வளமான எதிர்காலத்திற்கு பயன்படவில்லை என்றே கூறவேண்டும்.*

இதிலிருந்து நாம் சிந்திக்க வேண்டியது யாதெனில் திலவதி அன்னை அவர்கள் வாழ்விலும் சாவிலும் தான் வீணடிக்கப்படாது மற்றவர்களுக்கு சிறந்த பயன்பாடுடையவராக இருக்க வேண்டும் என்ற இலட்சியத்தை சித்தாந்தத்தை கொண்டிருந்தார் என்பதை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையவர்களின் மூத்த இரு புதல்வர்களினதும் திருமணம் அவர்கள் வாழ்ந்த எங்களது அயல் வீட்டிலும் இளைய புதல்வனின் திருமணம் எங்கள் வீட்டில் அவர்கள் வசித்த வேளையிலும் நடந்தேறியது. அவர்களது இன்ப துன்பங்களில் நாங்கள் பங்குபற்றியிருக்கிறோம்.

அன்னையின் வாழ்வும் வளமும் எதிர்காலச் சந்ததியினருக்கு நிட்சயமாக ஒரு வழிகாட்டியாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை. அன்னாரின் பிரிவினால் ஆறாத்துயருற்றிருக்கும் அவரது பிள்ளைகள். மருமக்கள். பெறாப்பிள்ளைகள். பேரப்பிள்ளைகள்.உற்றார்.உறவினர். நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னையின் ஆத்மா எல்லாம் வல்ல பரமேஸ்வர பார்வதி பாதத்தில் சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி.. ஓம் சாந்தி... ஓம் சாந்தி...

அன்னையின் அபிமானி
பேராசிரியர் கா.குகபாலன்
சம்பியன் ஒழுங்கை
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்

*குறிப்பு :- எங்கள் அன்னை தனது உடலை யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு தானமாக ஏற்கும்படி பீடாதிபதிக்கான தனது கோரிக்கையில் முன்னர் கேட்டிருந்தபோதும் பின்னர் தனது முடிவை மாற்றினார்.முடிவு மாற்றம் பற்றி எங்களுக்கு கூறியிருந்தார். தனது கைப்பட பதிவுத் தபாலில் மருத்துவ பீடாதிபதிக்கு எழுதிய கடிதப் பிரதி திலகதீபத்தின் பிற்பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. தற்செயலாக அண்மையில் எங்கள் அன்னையின் ஆவணங்களை ஆராய்ந்த போது பதிவுத்தபால் அனுப்பிய ரசீட்டும் கடிதப் பிரதியும் எங்கள் கைக்கு கிடைத்தன.*

"நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு"

(குறள் - 336)

**Existing yesterday,**
**to-day to nothing hurled!**
**Such greatness owns**
**this transitory world.**

(G.U.Pope's English Translation )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka

T.P.No - 0602-213151

திகதி 12.03.2009

தலைவர் :
செஞ்சொற் செல்வர்
திரு. ஆறு. திருமுருகன் B.A.

உப - தலைவர் :
திரு. சி. அருளானந்தசிவம்
திரு. ச. ஆறுமுகநாதன்

பொதுச் செயலாளர் :
வைத்தியகலாநிதி
ஸ்ரீ. தியாகரன்

இணைச் செயலாளர் :
திரு. நா. தவநாதன்
திரு. மு. அருளையா

தனாதிகாரி :
திரு. அ. சண்முகநாதன்

உப-தனாதிகாரி :
திரு. க. ஏழூர்நாயகம்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும், ஸ்கந்தவரோதயாக்கல்லூரியின் அதிபருமாகிய செஞ்சொற்செல்வர் திரு. ஆறு. திருமுருகன் அவர்களின்

## பிரார்த்தனை உரை

கல்வியிலும் கடவுள் பக்தியிலும் அன்பிலும் அரவணைக்கும் தாய்மையிலும் சிறந்து விளங்கியவர் அமரர் திலகவதி கனகநாயகம் அவர்கள். கடந்த பதினாறு ஆண்டு காலமாக என்னைக்கண்டு இன்புற்று அன்பு நிறைந்த வார்த்தைகளால் ஆரவாரம் செய்து நேசித்தவர் இவர். நெற்றியில் திருநீறு. தூய உடுப்பு. வார்த்தைகளில் அறிவுசார்ந்த சொற்கள். எவர்க்கும் அஞ்சாத தனித்துவத்துடன் இவரது வாழ்வு இவரை வெளிப்படுத்தியது.

பழம் பெரும் பதி கந்தரோடை. இப்பதியில் பிறந்து புகழ்பூத்த ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கற்று ஆங்கிலம் தமிழ்ப் புலமையுடன் இல்லற வாழ்வில் இணைந்தவர். ஒரேற்றர் கால கல்லூரி வரலாற்றை சந்திக்கும் போதெல்லாம் இரை மீட்டுச்சொல்லுவார். பழம் தமிழ் இலக்கியங்கள். திருமுறைகள். பக்திப்பனுவல்களை படித்து அகத்தில் பதிய வைத்த பண்பினால் பேசும் போதெல்லாம் பழமொழி - திருமொழி உச்சரிப்பார்.

எங்கள் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி மீதும் துர்க்கையம்பாள் மீதும் எல்லையற்ற அன்பு கொண்டவர். அதனால் சிவத்தமிழ்ச் செல்வி அன்னையர் இல்லத்தில் சிறுது காலம் தங்கியிருந்தார். அதிகாலை வீதி வலம் வந்து உரத்த குரலில் பாடுவார். தெய்வக்காட்சியை விபரிப்பார். "திலகவதி அம்மா" என்று மகளிர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லப் பிள்ளைகள் செல்லமாக அழைத்து உறவு கொண்டாடினர்.

"யான் ஒரு பென்சனர்" இதை அமரர் அடிக்கடி சொல்லுவார். பொட்டுத் தந்தவர் - வாழ்வு தந்தவர் போன போதும் புண்ணியவான் பென்சன் என்னைக்காக்கும் நிலை பற்றி பெருமையோடு சொல்லுவார். தன் கணவனின் சிறப்பை என்றும் உயர்த்திச் சொல்லுவார். தன் பிள்ளைகள் மூவர்க்கும் தெய்வப் பெயர் என்பார். எல்லாவற்றையும் அவரை விளங்கிய அன்பு உள்ளங்கள் ரசிப்பர். உள்ளத்தால் கள்ளம் கபடமின்றி எதையும் வெளியாக நேரே சொல்லும் பண்பாக தன் வாழ்வைக் கழித்த அம்மையார் இறுதிக்காலத்தில் சுகவீனம் உற்று வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

ஒரு சமயம் சிவத்தமிழ்ச்செல்வி அம்மா அதிதீவிரசிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்த வேளை மறு வாட்டில் தங்கியிருந்த திகவதி அம்மா எழுந்து வந்துவிட்டார். அதிதீவிர சிகிச்சைப்பிரிவுக்குள் சென்று ஓலமிட்டு அழுது "துர்க்கையம்மா எழுந்து விட வேண்டும் " என்று அன்பினால் அழுத காட்சி மறக்க முடியாது. அமரரை சமாதானம் செய்து தாதியர் வாட்டுக்கு அழைத்துச் சென்றனர்.

இறைவனின் இனிய படைப்புக்களே அனைவரும். எத்தனை எத்தனை அன்பு மனிதர்களை எம் வாழ்வில் நாம் சந்திக்கின்றோம். சந்தித்தவர்கள். அறிந்தவர்கள். உற்சாகமாக உறவாடியவர்கள் ஒவ்வொருவராக காலம் வரும்போது கடந்து போய் விடுகிறார்கள். அவர்களுக்காக நாம் செய்யக்கூடியது பிரார்த்தனையை விட வேறு ஏது? கண்டபோதெல்லாம் கலகலப்பாக உரையாடிய அன்னை இறையடியில் சேர்ந்து பிறவா வரம் பெற பிரார்த்தித்து குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் கூறி அமைகிறேன்.



"அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்"

(குறள் - 71)

**And is there bar**
**that can even love restrain?**
**The tiny tear shall make**
**the lover's secret plain.**

(G.U.Pope's English Translation )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அறிவுப்பெட்டகமும் ஆன்மீக உறைவிடமும்"

புராதன. புண்ணிய பூமியாக விளங்கும் கந்தரோடை கிராமத்தில் திலகவதி அக்காவை தெரியாதவர்கள் யாருமில்லை. தெய்வ நம்பிக்கையும் இறை பக்தியும் கொண்ட இவர் தன் பிள்ளைகளான வேல்தஞ்சன். சிவன்சேய். ஹரிஹரசக்தி ஆகியோர்களை தெய்வ நம்பிக்கை உடையவர்களாகவும் சமூக பங்களிப்பு மிக்கவர்களாகவும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கக் கூடியவர்களாகவும் வளர்த்தெடுப்பதில் அயராது உழைத்தவர்.

வாழும் வயதில் கணவனை இழந்த போதும் தன் பிள்ளைகளில் அளவற்ற அன்பும் பாசமும் வைத்து தியாக மனபபாங்குடன் அவர்களை கற்றோர் போற்ற உருவாக்குவதற்கு இடையறாது முயற்சித்தவர்.

அவரின் பிள்ளைகள் மூவரும் என்னிடம் கணித பாடத்தை திறம்பட கற்ற காலம் எய்திய வெற்றிகள் என்பனவற்றை என்னால் மறக்க முடியாது. அவரின் மூத்த புதல்வன் வேல்தஞ்சனை நான் ஒரு சிறந்த வைத்தியராக வருவார் என ஏங்கிய காலம் ஒன்று ஓடி மறைந்தாலும் இன்று அவர் பல்துறைப் புலமையுள்ள தமிழ் ஆங்கில மொழிகளில் ஆற்றல் நிறைந்தவராக இருப்பது திருப்தியே. இளைய புதல்வர்களை ஆசிரியராக. அதிபராக - விரிவுரையாளராக பரிணமிக்க வழிகாட்டியாக விளங்கியவர் திலகவதி அக்கா அவர்கள்.

அமரர் ஆகிய அக்கா அவர்கள் என்னிடம் வைத்த அன்பு. பாசம். மதிப்பு என்றும் என்னால் மறக்க முடியாது. அவரில் குடி கொண்ட தெய்வீக ஒளி அவரின் மேல் அளவற்ற தாய்ப்பாசத்தை என்னுள் உருவாக்கியது. அவர் இன்று எம் மத்தியில் இல்லாவிடினும் அவரின் வாழ்த்துக்கள் என்றும் என்றும் என்னுள் வாழும். அவர் மறைந்து முப்பத்தொரு நாட்கள் கடந்த நிலையில் அவரின் குடும்ப அங்கத்தவர்களுடன் நானும் எனது குடும்பமும் அக்கா திலகவதியின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி....

சிவகுரு மகேந்திரன்
பிரதி அதிபர்
யாழ் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
கந்தரோடை. சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி திலகவதி கனகநாயகம் அவர்கள்...

கந்தரோடை நகரம் இலங்கையில் மிகவும் தொன்மை வாய்ந்த தலை நகர்களில் ஒன்றாக திகழ்ந்த பெருமையுடையது. கந்தரோடை ஊடாக பாய்ந்தோடும் வழுக்கை ஆறு மல்லாகம், சண்டிலிப்பாய், கட்டுடை, வட்டுக்கோட்டை, அராலி ஆகிய கிராமங்களை தாண்டி அராலி கடலில் வீழ்கின்றது. பண்டைய காலத்தில் இவ் வழுக்கையாறு ஆழமாக்கப்பட்டு கடல்வழி போக்குவரத்து காணப்பட்டமைக்கு சான்றுகள் உள. முக்கியமாக கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட, இன்றும் மழை காலத்தில் மண்ணுக்குள் தெரியும் புராதன நாணயங்கள், பவளங்கள், மணிகள், உடைந்த பீங்கான்கள், ஒரு பக்கம் சிவப்பு மறுபக்கம் கறுப்பாக உள்ள பானை ஓடுகள் ஆகியன சான்றுப்பொருள்களாக மிளிர்கின்றன. இங்கு சீன, உரோம, கிரேக்க, போத்துக்கீச, ஒல்லாந்த, பராக்கிரமபாகு கால, சேது மன்னர் கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டு தேசிய அரும் பொருட்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் சில வியாபாரிகளால் வெளியூர்களுக்கும் வெளிநாடுகளுக்கும் அனுப்பப்பட்டுவிட்டன. இராசதானியாக இருந்ததென கருதப்படும் கயற்கண்ணி அரசினால் வாங்கப்பட்டு தொல்பொருட் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டாலும் முழுமையான ஆய்வு இன்னும் நடைபெறவில்லை. இத்துணை பெருமை வாய்ந்த தொல்பதியே கந்தரோடை நகராகும்.

இக் கந்தரோடைப் பதியிலே அப்பச்சி - முத்துப்பிள்ளை தம்பதியினர் வாழ்ந்து வந்தனர். இவர்களுக்கு தெய்வானைப்பிள்ளை, கதிரமலை, வள்ளிநாயகி, முருகையா, வன்னியசிங்கம், திலகவதி, பொன்னம்பலம் ஆகியோர் பிள்ளைகளாக பிறந்தனர். இப்பிள்ளைகளுக்கு ஆரம்ப, கனிஸ்ட கல்வியை யாழ் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையிலும் இடைநிலை சிரேஸ்ட, உயர்தரக்கல்வியை யாழ் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் கற்பித்தனர். சிரேஸ்ட கல்வியை நிறைவு செய்த அமரர் கதிரமலை வனஇலாகாவில் படவரைஞராக இணைந்தார். இவருக்கு சுன்னாகத்தைச் சேர்ந்த சிவசம்பு தம்பதிகளின் ஏக புத்திரியை திருமணஞ் செய்து வைத்தனர். கதிரமலை தம்பதியினருக்கு மூத்த புத்திரியாக செல்வி ஜெயலட்சுமி பிறந்தார். அவரை ஆரம்பக்கல்வி கற்க யாழ் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலைக்கு சுன்னாகத்திலிருந்து அனுப்பி வைத்தனர். பின் கதிரமலை குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் வாழ்ந்தமையால் ஏனைய பிள்ளைகள் கொழும்பில் கற்றனர். திரு முருகையா அவர்கள் விளையாட்டுத்துறை ஆசிரியராகவும் பின்னர் பிரதேச மட்ட விளையாட்டுத்துறை அதிகாரியாகவும் கடமையாற்றி ஓய்வு பெற்று கடந்த பல வருடங்களாக குடும்பத்தினருடன் கனடாவில் வாழ்கிறார். இவரும் தன் பிள்ளைகளை தான் கற்ற யாழ் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையிலும் பின்னர் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் கற்பித்தமை குறிப்பிடத்தக்கது. திரு வன்னியசிங்கம் ஆரம்பக்கல்வி கறறுவிட்டு வர்த்தகத்தொழிலில் ஈடுபட்டார். திரு பொன்னம்பலம் அவர்கள் ஆரம்பக்கல்வி கற்றுக்கொண்டிருந்த வேளை வீட்டில் விளையாடும் போது பழைய தென்னை ஈர்க்கு காலில் குற்றி ஏர்ப்பு வலி ஏற்பட்டு மரணமடைந்து விட்டார். வள்ளிநாயகி அவர்கட்கு யாழ் நகரத்தை சேர்ந்த முத்துக்குமாரு என்பவரை திருமணம் செய்து வைத்தனர். இவர்கள் பிள்ளைகளுடன் யாழ்ப்பாணத்தில் வாழ்கின்றனர். தெய்வானைப்பிள்ளை அவர்களை தெல்லிப்பளையை சேர்ந்த திரு சின்னப்பா அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தனர். இத் தம்பதியினர் அமரரானாலும் பிள்ளைகள் கந்தரோடை, சுன்னாகம் கிராமங்களில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகின்றனர்.

இளைய மகள் திலகவதி ஆரம்ப, கனிஸ்ட கல்வியை யாழ் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையில் கற்றார். இவர் ஏழாம் தரம் சித்தியடைந்த பின்பு ஆங்கில மொழி மூலம் கல்வி கற்பதற்காக கந்தரோடை ஸ்கந்தவரோதயாக்கல்லூரியில் இணைந்து கற்றார். அங்கு ஆங்கில மொழி மூலம் விஞ்ஞான பாடங்களைக்கற்று சிரேஸ்ட தராதரப்பத்திரப்பரீட்சைச் சான்றிதழ் ( Senior School Certificate ) பெற்றார். தொடர்ந்து அங்கேயே உயர்தரப் பாடசாலை தராதரப்பத்திர வகுப்பு (H.S.C ) ஆங்கில மொழி மூலம் உயிரியல் பிரிவில் கற்றார். அக்காலத்தில் மேல் வகுப்புக்களில் பெண்கள் கற்பது குறைவு. இவர் ஒருவரே அவ்வகுப்பில் பெண் பிள்ளையாக இருந்தார். சில கிழமைகளின் பின் பிரபலமான பெண்கள் பாடசாலை ஒன்றில் கற்ற மணிமேகலை என்னும் மாணவி இவரது வகுப்பில் இணைந்து கொண்டார். இருவரும் ஒன்றாக H.S.C வகுப்பில் கற்று வந்தனர். ஏதாவது முரண்பாடு மணிமேகலைக்கும் திலகவதியாருக்கும் இடையில் ஏற்பட்டிருக்கக் கூடும் அன்றேல் திலகவதியாருக்கு மணிமேகலை பற்றிய காவிய எண்ணம் தோன்றியிருக்குமோ என்னவோ! "மணிமேகலைக்கும் திலகவதியாருக்கும் வரலாற்றிலேயே பொருந்தாது எனவே நீர் தொடர்ந்து படியும் யான் படிக்க வரவில்லை" என ஒரு கடிதம் எழுதி செல்வி மணிமேகலைக்கு அனுப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துவிட்டு தனது H.S.C படிப்பை பாதியிலே நிறுத்தி விட்டார் திலகவதியார். மணிமேகலை தொடர்ந்து கற்று இங்கிருந்தே வைத்தியத்துறைக்கு தெரிவாகி இன்றும் வைத்திய கலாநிதியாக கடமையாற்றுகிறார். தான் எடுத்த அந்த தவறான முடிவை மாற்ற முடியாத தன்மையால் இன்று வைத்தியராகவோ உதவி வைத்தியராகவோ அன்றேல் ஒரு விஞ்ஞானப் பட்டதாரியாகவோ வரும் வாய்ப்பை இழந்திருந்தார் திலகவதியார். இதற்கான காரணம் தனது பிடிவாதக் குணமே என்பதை பின்னர் அவர் உணர்ந்திருக்கக் கூடும்.

அந்தக் காலத்தில் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையில் ஆசிரியர் வெற்றிடம் நிரப்பும் போது இவ்வூரவர் பலர் விண்ணப்பித்தால் திருவுளச்சீட்டு மூலமே தெரிவு நடைபெறும். அதுவும் தலைமை ஆசிரியர் சிவஸ்ரீ சு. சிவசுப்பிரமணிய ஐயர் அவர்களே பொறுப்பாக இருந்து சிறிய பிள்ளைகளைக் கொண்டு விண்ணப்பித்த பெற்றார் முன் சீட்டினை எடுப்பிப்பார். அந்த வகையில் திருவுளச்சீட்டு மூலம் எடுக்கப்பட்டவர்களே திரு க. புவனேந்திரநாதன், திரு மு. அருளையா. செல்வி ஆறுமுகம் பூமணி ஆகியோராவர். திலகவதி அம்மையாரின் பெயர் அந்த இடத்தில் திருவுளச்சீட்டில் எடுபட்டிருக்கவில்லை. அது அதிஷ்ட குறைவும் தனது தலைவிதியும் எனக் கூறி ஆறுதலடைந்தார்.

யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களத்தில் எழுதுவினைஞராக கடமையாற்றிக்கொண்டிருந்த திரு சங்கரப்பிள்ளை கனகநாயகம் அவர்களை செல்வி திலகவதிக்கு திருமணம் செய்து வைத்தனர். திரு கனகநாயகம் அவர்கள் யாழ்ப்பாணம் கந்தர்மடத்தை பூர்வீகமாக கொண்டவர். திரு கனகநாயகம் அவர்களுக்கு முதல் தாரம் மனைவி இறக்கும் போது பிறந்த குழந்தை அம்பிகாதேவி ( நந்தினி) என்பவரும் இருந்தார். அந்தப் பெண் பிள்ளையை தன் பிள்ளையைப் போலவே திலகவதியார் பற்றுடனும் பாசத்துடனும் வளர்த்து வந்தார் என்றால் மிகையாகாது. அப் பிள்ளைக்கு வேண்டிய கல்வியை கந்தரோடை ஸ்கந்தவரோதயாக்கல்லூரியில் வழங்கினர். உணவு. உடை யாவற்றிலும் எதுவித பாகுபாடும் காட்டாது அப்பிள்ளையையும் அன்புடன் வளர்த்து வந்தார். கனகநாயகம் திலகவதி தம்பதியருக்கு மூன்று ஆண் குழந்தைகள் பிறந்தனர். மூத்தவர் வேல்தஞ்சன். இரண்டாமவர் சிவன்சேய். மூன்றாமவர் ஹரிஹரசக்தி என்பவராவர். இப் பிள்ளைகள் மூவரும் ஆரம்பக் கல்வியை கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையில் கற்றனர். சிரேஸ்ட கல்வியை கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கற்றனர். சிறிது காலம் வேல்தஞ்சன் யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரியிலும் கற்றிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களாக இருந்தபோது திலகவதியார் பிள்ளைகளை ஆலய வழிபாட்டிற்கு கூட்டிச்செல்லும் முறையே ஒரு தனி அழகு. குளிக்கச் செய்து தோய்த்து உலர்ந்த தூய ஆடை உடுக்கச் செய்து மூவரையும் ஒருவர்பின் ஒருவராக ஒழுங்காக அமைதியாக நடக்கச்செய்து ஆலயத்தை அடைவர். பின் அங்கு முறைப்படி ஆலய வீதி வலம் வந்து வணங்கச் செய்வார். பஜனைகளில் ஈடுபடுத்துவார். தனது பிள்ளைகளை கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாக வளர்த்த பெருமை அன்னை திலகவதியாருக்கே உரியது. காரணம் கணவர் இவர்களுக்கு இளவயதில் காலமானதால் தானே தந்தையும் தாயுமாக கடமைகளைச் செய்து வந்தார்.

மூத்த புதல்வன் வேல்தஞ்சன் தற்பொழுது வலிகாமம் கல்வி வலயத்தின் உடுவில் கல்விக்கோட்டத்தில் முகாமை உதவி அலுவலராக கடமையாற்றி வருகிறார். இரண்டாவது மகன் சிவன்சேய் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் ஆசிரியர். மூன்றாவது மகன் ஹரிஹரசக்தி அராலி வள்ளியம்மை பாடசாலை அதிபராக இருந்து தற்போது யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளராக கடமை யாற்றுகிறார். இப்பிள்ளைகள் கற்று தொழில் பார்க்கும் வரை கண்ணும் கருத்துமாக இருந்து கண்காணித்து கற்பித்த பெருமை திலகவதியார் அவர்களயே சாரும். இவர் தனது ஆண் சகோதரர் பெண் சகோதரது பிள்ளைகளையும் தன்நலம் கருதாது கற்பித்து வந்தவர். இவ்வாறு தனது குடும்பத்தவர்களின் பிள்ளைகளுடன் அயலிலுள்ள பிள்ளைகளையும் சேர்த்து கற்பித்து வந்தவர். இவ்வாறு "பிறர் பிள்ளையை ஊட்டிவளர்க்க தன் பிள்ளை தானே வளரும்" என்ற முதுமொழிக்கேற்ப இவரது பிள்ளைகள் வளர்ந்து வந்தனர் என்றால் மிகையாகாது.

தெல்லிப்பளை துர்க்கையம்மன் சைவச்சிறுவர் இல்ல மாணவர்களுக்கும் சில காலம் இலவசமாக கற்பித்து தொண்டாற்றியவர். அதன் மூலம் அச் சிறார்களின் அன்பையும் பெற்றவர். தனது பிள்ளைகள் எல்லோருக்கும் திருமணம் செய்து கொடுத்த பின் சிறிது காலம் துர்க்கை அம்மன் தேவஸ்த்தான அன்னையர் இல்லத்தில் விருப்புடன் தங்கியிருந்து சேவை செய்தார். பின்னர் மூத்த மகனுடன் சிலவருடங்கள் சுன்னாகம் ஐயனார் கோவிலடி வீட்டில் வாழ்ந்தார். சைவ உணவு அருந்தி சைவ வழிபாடுகள் ஆற்றும் தனது ஆன்மீக ஒழுக்கத்தை எள்ளளவும் விட்டுக்கொடுக்கும் சுபாவம் அற்றவராக இருந்தமையால் தனியே வாழ்வதையே விரும்பினார். சுன்னாகத்தில் மகன் சிவன்சேயின் வீட்டிலும் சிலகாலம் இருந்தார். எனினும் கடந்த இரண்டாயிரமாம் ஆண்டிலிருந்து இரண்டாயிரத்தெட்டின் முடிவில் அவர் இறக்கும் வரை ஏறத்தாழ நான்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களுக்கு மேல் வலிகாமம் மேற்கில் இளைய மகன் ஹரிஹரசக்தியின் உதவியுடன் தனி வீடுகளிலும் சிலகாலம் அவரது இல்லத்திலும் வாழ்ந்து வந்தார். இறுதியாக 2008 இல் கண்ணில் சத்திரசிகிச்சை முடித்த பின்னர் பல மாதங்கள் வேல்தஞ்சனது இல்லத்தில் தங்கியிருந்தார். எனினும் பின்னர் தொல்புரம் மேற்கில் ஹரிஹரசக்தியின் இல்லத்திற்கு அருகாமையில் தனக்கென தனியான ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து அவரின் உதவியுடன் தனது ஆயுளின் கடைசி மாதங்களை கடந்தார். திலகவதியார் அமரத்துவம் அடைவதற்கு முன்னர் ஏறத்தாழ ஒரு மாதம் நோய்வாய்ப்பட்டு யாழ் வைத்தியசாலையில் இருந்தபோது இவரது இளைய மகன் ஹரிஹரசக்தி ஒரு மகள் போல தாய்க்கு உரிய உணவுப்பதார்த்தங்களை தானே தயாரித்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வதிலிருந்து ஆஸ்பத்திரியில் இருந்து தாயின் ஆடைகளை எடுத்துச் சென்று தானே தோய்த்துக் கொடுப்பதுடன் ஆஸ்பத்திரியில் பராமரிப்பாளரை ஒழுங்குபடுத்தி தாயை பராமரித்தது வரை பூரணமான கடமைகளை ஆற்றியுள்ளார். தாயின் மருந்துச் செலவுகள், வைத்திய உபகரணச் செலவுகள் அனைத்தையுமே ஹரிஹரசக்தி தாங்கியுள்ளார். இக்கடமைகளில் ஹரிஹரசக்திக்கு அவரது துணைவியாரும் ஹரிஹரசக்தியின் தமையன்மாரும் பெரிய தாய்மாரின் பிள்ளைகளும் பக்க பலமாக இருந்துள்ளனர்.

ஆரோக்கியமாக இருந்த காலத்தில் திலகவதியார் தமது மக்கள், பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளிடம் இடையறாது சென்று அன்பாக கழகுவார். ஊரவர்களிடம் சென்று சுகதுக்கங்களில் கலந்து கொள்ளுவார். கந்தரோடை வற்றாக்கை விசாலாட்சி சமேத விஸ்வநாத பெருமானையோ தெல்லிப்பளை துர்க்கையம்மனையோ வழிபடாமல் இருப்பதில்லை. எப்போதும் அம்மன் உபாசனையோடு இருப்பார். அம்மன் அருள் வேண்டி வழிபடும் ஓர் அடியாராகவே என்றும் இருந்து வந்தார். அன்னாரது ஆத்மா சாந்தியடைவதாக....

15.01.2009

அ. தற்பரானந்தன்
ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர்
இலங்கை கல்வி நிர்வாக சேவை

கந்தரோடை
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சுரத்துடன் எவருக்கும் அஞ்சாது வாழ்ந்த அன்னை திலகவதி

கந்தரோடை கிராமத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட திருமதி. திலகவதி கனகநாயகம் இறைவனடி சேர்ந்துள்ளார் என்ற துயரச்செய்தியை "உதயன்" பத்திரிகை மூலம் அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையுமடைந்தேன். சில மாதங்களுக்கு முன் கந்தரோடையில் நடந்த பூப்புனித நீராட்டுவிழாவில் அவர் வருகை தந்த போது என்னோடு மகிழ்ச்சியுடன் அளவளாவியது நினைவுக்கு வருகிறது.

அன்னை திலகவதி ஸ்கந்தாவில் கல்வி கற்ற பொழுது அரைத்தாவணி அணிந்து பாடசாலைக்கு செல்வது கண்முன்னே தெரிகிறது. இவர் மாணவியாக இருக்கும் போது மிகவும் கெட்டித்தனமாகவும் புத்தி கூர்மையாகவும் இருந்தார். சிரேஸ்ட பாடசாலை தராதரப்பத்திரத்தை (S.S.C) ஆங்கில மொழி மூலம் பயின்று அப் பரீட்சையில் திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்ததை நன்கு அறிவேன். அதன் பின்பு உயர் கல்வியைக் கற்றுள்ளார். கணிதம், விஞ்ஞானம் ,ஆங்கிலம் போன்ற பாடங்களில் மிகவும் கெட்டித்தனமாக இருந்துள்ளார்.

தனது கல்லூரிப் படிப்பை நிறைவு செய்த பின் உறவினர்கள் அயலவர்களின் பிள்ளைகளுக்கு எதுவித கட்டணமுமின்றி கல்வி புகட்டி வந்ததை எல்லோரும் அறிவார்கள். அன்னை திலகவதி அம்மையாருக்கு கல்விப்பணியாற்ற வேண்டுமென்று தணியாத தாகம் இருந்தது. பாடசாலைகளை அரசு பொறுப்பேற்க முன் தனியாரின் பொறுப்பிலிருந்த போது உள்ளூரில் ஆசிரியராக வர முயற்சியெடுத்தும் அது கைகூடவில்லை. தனக்குத் தகுதியிருந்தும் திறமையிருந்தும் ஆசிரிய பதவி கிடைக்கவில்லையென அவர் வேதனையுடன் வாழ்நாள் முழுவதும் இருந்ததை நான் நன்கு அறிவேன்.

திலகவதி அம்மையார் நேர்மையாகவும் நெஞ்சுரத்துடனும் எவருக்கும் அஞ்சாது வாழ்ந்தவர். அவருடன் வாதிட்டு வெல்வது சுலபமல்ல. பிழை என்று தான் கருதியதை எவருக்குமே அஞ்சாது சொல்லும் தைரியம் கொண்டவர். இவரின் கணவர் காலமாகிய பின் தனது நான்கு பிள்ளைகளுக்கும் போதியதும் நிறைவானதுமான கல்வி புகட்டினார். பிற்காலத்தில் தனது இளைய மகனுடன் வாழ்ந்து வந்தார். நிறைந்த இறை பக்தியுடைய திலகம் அம்மையார் தனது வாழ்வில் எல்லா ஆலயங்களுக்கும் சென்று வழிபட்டதை நன்கு அறிவேன்.

அன்னை திலகவதி கந்தரோடை கிராமத்தையும் மக்களையும் மிக ஆழமாக நேசித்தவர். அதனால் தான் தனது உடலை கந்தரோடை சங்கம்புலவு சுடலையில் தகனம் செய்ய வேண்டுமென தனது பிள்ளைகளிடம் கூறியிருந்தார். பெண்களின் திலகமாக வாழ்ந்த அவரின் ஆத்மா சாந்தியடைய வற்றாக்கை விசாலாட்சி சமேத விஸ்வநாத சுவாமியை இரு கரம் கூப்பி பிரார்த்திக்கிறேன்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆ.சி.கணேசவேல்
சமாதான நீதவான்
(அகில இலங்கை)
முன்னாள் உப தபால் அதிபர்
கந்தரோடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழக்கைக்காலப்பருவங்களில் முதுமை — ஒரு நோக்கு

திரு. எஸ்.கே.யோகநாதன்
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி.

இன்றை சமகால மனித வாழ்க்கைப்பருவங்களான பிறப்பும் பிள்ளைப் பருவமும் .கட்டிளமை, வயதுவந்தோர் பருவம், முதியோர் பருவம் என்பவை மிக முக்கியமானவையாக காணப்படுகின்றன. தற்போது இப் பருவங்களிலேயே முதியோர் பருவம் பற்றிய ஆய்வுகளும் அவர்களை முறையாக பேணுதல் தொடர்பான செயலாற்றுகையும் அதிகரித்து வருகின்றன. சுகாதார சேவைகள், சமூக அபிவிருத்திகள் சிறப்பாக விரிவாக்கம் பெறுவதால் சனத்தொகையில் முதியோர் அதிகரித்து வருகின்றார்கள்.

சமகால சமூக மாற்றங்களால் குடும்பங்களின் சிதைவுகளால் முதியோர்கள் பலவித தொல்லைகளையும் துன்பங்ளையும் அடைந்து வருகின்றார்கள். அவர்கள் தொடர்பான உளவியல் - சமுதாயவியல் - வைத்தியவியல் தொடர்பாகவும் பிரச்சனைகள் அதிகரித்து வருகின்றன. பெருகிவரும் மன நிலைத்தளர்வு முதியோரை மிகவும் பாதித்துள்ளது. இன்றைய காலத்தில் வாழும் பொரும்பாலான முதியோர்கள் மனம் பாதிப்படைந்து ஒரு வகையான துன்ப உணர்வில் தாழ்வுற்றுள்ளனர்.

I.C.கோல்மன், W.எப்ரேன் ஆகியோர் சமகாலத்தில் முதியவர் பற்றி ஆராய்ந்த போது அவர்களால் எதிர்கொள்ளப்படும் பிரச்சனைகளாக பின்வருவனவற்றை எடுத்தியம்புகின்றனர்.

01. சேவையிலிருந்து ஓய்வு, குறைந்த வருவாய் என்பன முதியோரின் செயல்த்திறன்களை குறைத்து பிரச்சனைகளை தோற்றுவிக்கின்றன.

02. நாளடைவில் காலம் செல்லச்செல்ல அவர்களது உடல் வலிமையும் நலிவடைகிறது.

03. தம் பிடிப்பு குடும்பத்தில் தளர்வடைதலை உணர்ந்து மனவேதனைப் பிரச்சனைகளுக்கு உள்ளாகின்றனர்.

04. உடல் நலம், தன்னம்பிக்கை இழக்கப்படுதல் பெரிய பாதிப்பாகின்றது.

05. சகாலத்தவர் தன் உறவுகளை இழத்தல், தனிமைப்படுத்தப்படல், மற்றவர்களால் புறக்கணிக்கப்படல், தம்மைப்பொருட்ப்படுத்தாமை முதலியன முதியோருக்கு தன் முனைப்பை கொடுக்கின்றன.

மேற்கூறப்பட்ட நிலைமைகளால் அவர்களுக்கு வாழ்வு - சாவுப் பிரச்சனைகள் மிகுதியாகின்றன. இனிமேல் வாழ்வதில் அர்த்தமில்லை என்ற உணர்வில் - அவர்கள் உலகில் உயிருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும், உலகு அவர்களை விட்டு அகன்று விடுகின்றது.

எனவே அவர்களுக்கு அமைதியான, மகிழ்ச்சிகரமான, இனிமையான வாழ்வை அமைத்துக்கொடுத்தல் இன்றைய மிக முக்கிய தேவையாக உள்ளது.

முதியவர்களின் குறைகளை போக்கும் செயன்முறைகள்

எமது சமூகத்திலும் நாட்டிலும் முதியோர்களுடைய எண்ணிக்கை அதிகரிப்பதாலும் அவர்கள் பல பிரச்சனைகளை எதிர்நோக்குவதாலும் அவர்களுடைய ஆரோக்கியம், நலன் பேணவும் அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றவும் பிரச்சனைகளைத் தீர்க்கவும் போதுமான ஆதார வளங்களையும் புதிய செயற்றிட்டங்களையும் நிறைவேற்ற வேண்டியுள்ளது. இவ் வகையில் முதியோர்களுக்கான சமூக நலத்திட்டங்கள் பின்வரும் குறிக்கோள்களுடன் பல நாடுகளில் பின்பற்றப்படுகின்றன.

★ முதியோர்களின் நலன்களைப் பேணுதல்.

★ முதியோர்களை அமைதியாக வாழ வழி செய்தல்.

★ முதியோர்களுக்கு பொருளாதார பாதுகாப்புக் கிடைக்கச் செய்தல். (பிரயாண விசேட ஒழுங்குகள் போன்ற உட்பட)

★ ஆரோக்கியமான நல வாழ்வு வாழ வழி செய்து தருதல்.

★ முதியோர்களுக்கு தகுந்த உறைவிடம் முதலிய தேவைகளை நிறைவேற்றித்தருதல்.

★ முதியோர்கள் சுரண்டப்படாமலும் ஏமாற்றப்படாமலும் கொடுமைப்படுத்தப்படாமலும் இருக்க பாதுகாப்பு தருதல்.

★ இவர்கள் தம்முடைய திறமைளை வெளிப்படுத்தவும் மேம்படுத்தவும் வாய்ப்பு வசதிகள் செய்து தருதல்.

★ முதியோரின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி சுதந்திரமாக, மகிழ்ச்சிகரமாக வாழ விடுதல்.

இவ்வாறாக மிகச்சிறந்த முறையில் முதியோர்களைப் பேணி வரும் முதன்மை நாடுகளாக கனடா, ஜேர்மனி, ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, ஜப்பான் போன்ற நாடுகள் விளங்குகின்றன. அநேகமாக இவ்வாறான நாடுகள் அபிவிருத்தி அடைந்த நாடுகளாக உள்ளன. இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இத் துறை சார்ந்த விடயங்கள் பல பரிமாணங்களில் முன்னெடுக்கப்படுகின்றன. அரச - அரசசார்பற்ற நிறுவனங்கள் பல செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. சமூக நலத்துறை அமைச்சும் தனியார் - பொது அமைப்புக்களும் பல முதியோர் இல்லங்களை நடாத்தி வருகின்றன. இவை சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டும் வருகின்றன. என்றாலும் கூட முதியோர்களை புரிந்து கொள்ளுதல், அவர்களின் மகிழ்ச்சிகரமான வாழ்வுக்கு ஆலோசனை - வழிகாட்டுதல் செயற்றிட்டங்களை மேலும் விருத்தியாக்க வேண்டியுள்ளது. முதுமை - முதியோரின் தேவைகள், வாழ்வியல் தொடர்பான பல சமூக - உளவியல் ஆய்வுகளையும் முன்னெடுக்க வேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதியோரைப் புரிந்து கொள்ளுதல்

புரிந்து கொள்ளுதல் என்பது மனித வாழ்வின் எப்பருவத்திற்கும் எக்காலத்திற்கும் மிக மிக இன்றியமையாததாக உள்ளது. ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டு விட்டால் குழப்பமோ கோபமோ இல்லை. வெறுப்போ வேதனையோ இல்லை. எம்மில் பலர் அடுத்தவரைப்பற்றி நன்கு அறிந்தவர்கள். தன்னைப்பற்றி தெளிவாக தெரியாது உள்ளார்கள். புரிந்து கொள்ளுதல் என்பதை வாழ்க்கைத் தத்துவங்களில் ஒன்றாக கருதுகின்றனர் உளவியலாளர்கள். மனிதன் தனக்குத் தெரியாமலேயே தன்னுடைய வாழ்க்கைப் பாதையின் மீது அளவற்ற செல்வாக்குச் செலுத்துபவனாக இருக்கின்றான். மற்றவர்கள் தனக்குச் செய்வதைத்தான் புரிந்து கொள்கின்றான். தான் மற்றவர்களுக்குச் செய்வதை புரிந்து கொள்வதே இல்லை. எனவே மனிதர்கள் முதியோர் தம்மைப்புரிந்து கொள்ளவும். முதியோர்களின் உணர்வுகளை. தேவைகளை. ஆசைகளை மனந்திறந்து கேட்டு அவர்களுடன் உறவாடி அன்பு பாராட்டி அவர்களை புரிந்து கொள்கின்ற போது அவர்களுடைட பல பிரச்சனைகள் தீருகின்றன.

மனித வாழ்வில் முதுமை என்பது வாழ்வின் இறுதிக்கட்டத்திற்கு முன்பாக வரும் ஒரு இயற்கையான காலகட்டமாகும். எம்மில் அறுபது வயதிற்கு மேற்பட்டோர் முதியோர்களாக கணிக்கப்படுகின்றனர். மற்றவர்களிலிருந்து அவர்களை வேறுபடுத்திக்காட்டும் உயிரியல் மாற்றங்ள் தோன்றுகின்றன. தலை முடி நரைத்தல். தோலில் சுருக்கம். முகத்தில் கோடுகள் விழுதல். தோல் வரட்சி. வழுக்கை விழுதல். ஐம்புலன் உணரும் சக்தி குறைதல் போன்றன ஏற்படுகின்றன. இதனால் இயல்பாகவே தளரும் நிலை ஒன்று தோன்றுகின்றது. உள ரீதியாகவும் அவர்கள் தளர்கின்றனர். இவற்றை புரிந்து கொண்டு அவர்களுடன் உறவுகள் சேர்ந்து வாழ்ந்து மகிழ்ச்சியாக வைத்திருக்கும் பக்குவ நிலையை நாம் அனைவரும் இணைந்து தோற்றுவிக்க வேண்டும். ஏனெனில் நாமும் முதியோர் ஆவது திண்ணம்.

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவற்கு"

(குறள் - 383)

**A sleepless promptitude,**
**knowledge, decision strong:**
**These three for aye to rulers**
**of the land belong.**

(G.U.Pope's English Translation )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளை ரோஜா செடிகளாய் பயிரிட்டுள்ளோம்.

வையகமே போற்றும்படி வாழ்ந்து வந்த சின்னஅம்மம்மாவே! உங்களை சின்னஅம்மம்மா என்று அழைத்ததில்லை - சின்னம்மா என்று தான் அழைத்துவந்தோம். ஆசையிலே எங்கள் வீடு வந்து அழகான சிரிப்புடம் எம்மைக்கண்டு அன்பான வார்த்தையால் எம்மை அழைத்து நல்ல நல்ல அறிவுரைகள் பல கூறுவீரே. அந்த அழகான அறிவுரைகள் எம் நெஞ்சை விட்டு என்றும் நீங்காதே.. இதோ உங்கள் அறிவுரைகள்......

"ஏட்டில் படித்ததோடு இருந்து விடாதே - நீர்
ஏன் படித்தோம் என்பதையும் மறந்து விடாதே"
"நாட்டின் நெறிதவறி நடந்து விடாதே - நமை
நால்வர் தூற்றும் படி வளர்ந்துவிடாதே"
"நீர் மாற்றார் கைப்பொருளை நம்பிவாழக்கூடாது
தன்நிலையறியாது நெறிதவறுவோருடன் சேராக்கூடாது"
"நீர் துன்பம் வெல்லும் கல்வி கற்றிட வேண்டும்
சோம்பலை அகற்றும் திறன் பெற்றிட வேண்டும்"
"வளர்ச்சியில் வான் முகட்டைத் தொட்டிட வேண்டும்
நீர் பெற்ற தாயின் புகழும் நீர் பிறந்த மண்ணின் புகழும்
வற்றாமல் வாழ்ந்திட வேண்டும்"

எங்கள் அம்மம்மாவின் உருவான எங்கள் சின்னம்மாவே எங்கள் இதயத்தோட்டத்திலே உங்கள் நினைவுகளை ரோஜாச் செடிகளாய் பயிரிட்டுள்ளோம். அறுவடை செய்ய நினைப்பினும் எம் நெஞ்சை விட்டு நீங்காது உங்கள் நினைவலைகள்...

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்தனை செய்கின்றோம்.

ஓம் சாந்தி.. சாந்தி... சாந்தி....

அமரர் க. திலகவதியின் அக்காவின்
பேரப்பிள்ளைகள் சார்பில்
த.தினேஷ்
கந்தரோடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசத்தின் இமயம்

அன்புள்ளம் கொண்டவரே - நீங்கள்
மறைந்து போனதேனோ?
பண்பின் சிகரமாய் பாசத்தின் இமயமாய்
பார்மீது உதித்த நற் தாயே!
நாம் இனி யாரை "சின்னம்மா" என அழைப்போம்!
நாம் இனி யாரிடம் அறிவுரை கேட்போம்!
நம்பாத மரணத்தை அணைத்தாயே!
உமை ஒரு போதும் மறவோம் சின்னப்பம்மா.

அமரர் க. திலகவதி அவர்களின்
இளைய தமக்கையின் பேரப்பிள்ளைகள் சார்பில்
செல்வி. சு. சிந்துஜா
திருநெல்வேலி

## மீண்டும் ஜனனிப்பீரோ!

என்தாய் அழைப்பது போல்
நானும் சின்னம்மா என்றழைத்தேனே!
வந்ததும் வராததுமாய் "கல்வியிலே
கருத்ததாய் இரு அப்பு" என்றீரே!
பயணக்களை ஆற முன் பாரினிலே
நிகழ்ந்த வித்தை பரப்பிடுவீரே!
வலக்கரம் தன்னைப் பிடித்து
என் எதிர்கால வாழ்வுபற்றி எடுத்தியம்பிடுவீரே!
மனதிலே உமக்குச் சரியெனப்பட்டதை
சற்றும் சறுக்கிடாமல் செப்பிடுவீரே!
உமைக்காண எம் கண்கள் தவிக்கின்றன
கடவுளின் உத்தரவுடன் மீண்டும் ஜனனிப்பீரோ!

அமரர் க. திலகவதி அவர்களின்
இளைய தமக்கையின் பேரப்பிள்ளைகள் சார்பில்
செல்வன் இ. ராம்தீபன்
கில்னர்லேன்
யாழப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தப் பிறவியில் உன்னைக் காண்பேன் என் பிறவியே

**"ஆச்சி ஆச்சியென அடிக்கடி ஓடி வருவாயே**
**எந்தப்பிறவியில் உன்னைக் காண்பேன் என் பிறவியே**
**மாறி ஆச்சியையும் உன்னையும் பார்க்க வருகிறேன் என்றாயே**
**இன்று எங்கு சென்றாய்?**
**என்னையும் உன் மூன்று பிள்ளைகளையும் தவிக்க விட்டு**
**எங்கு சென்றாய் திலகம்?**
**ஆச்சியை பார்க்க நீ ஆசைப்பட்டாயே**
**அச்சி உன்னைப் பார்க்க வரமுன்**
**ஆண்டவன் உன்னை அழைத்துச் சென்றுவிட்டானே"**

அமராின் இளைய தமக்கை
திருமதி முத்துக்குமாரு வள்ளிநாயகி (ஆச்சி)
கில்னர் லேன்
யாழ்ப்பாணம்

# எங்கு பிரிந்து சென்றீரோ!

சொல்லொணாச் சோகம் தூக்கியடிக்குதம்மா
என்னுள்ளம் இன்றும் துடி துடிக்குதம்மா!
உணர்வு தடுமாற வைத்து தாங்கள் சென்றவிடம் எதுவோ
சிவன்தாள் சென்றடைந்தீரோ சின்னம்மா!
என் அன்னையைப்போல உமையும் பார்த்தேனே
எங்கு பிரிந்து சென்றீரோ!
காலன் உமை நெருங்கியதை உணர்த்தி
வைத்தியசாலையில் கட்டியணைத்து அழுதீரோ!
கண்ணீர் பெருகுது எனை மிஞ்சி
கதறியழும் என் குரல் கேளீரோ!

பெறாமகள்மார் சார்பில்
திருமதி சி.ஜெயலலிதா
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிற்றன்னை.....

தாய் நாடு, தாய் மண்
பண்பாட்டுக் கலாச்சார விழுமியங்கள்
நிறைந்த எழில் கொஞ்சும் தலை நகராம் கந்தரோடை
பிறக்கும் போது பெற்றேன் யான்.

வருடத்தில் மூன்று மாதம்
பாடசாலை விடுமுறை நாட்களில்
சிற்றன்னை அரவணைப்பில் வாழ்ந்த காலம்....
வெம்பிய மனத்துடன் வேதனையான
உள்ளக்கிடக்கைகளை உருளவிடுகிறேன்.
சந்தண மரமாம் அவர்
சாதனை பல படைத்திருப்பார்!
சமூக விதிகள் சுமூகமாய் இருக்கவில்லை.....
அர்ச்சுனன் இலக்குப் போல கல்வி ஒன்றே அவர் இலக்கு
"கேடு இல் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடு அல்ல மற்றை யவை"
என தன் மைந்தர்களுக்கும்
நிலையான செல்வத்தை உகந்தார்
மட்டுமல்லாது தனைச் சார்ந்த
இனபந்துக்களுக்கும் பகிர்ந்தளித்தார்

செல்வத்துள் பெருஞ் செல்வம் தாய்.
அப்பேறு பெற்ற மக்கள் பாக்கிய சாலிகள்.
சுமந்த பத்து மாதத்தை விட மண்படாமலும் புண்படாமலும்....
கல்வி கேள்விகளில் சான்றோராக்கி
நல்வாழ்வு அமைத்துக் கொடுத்த தாய்.

தமிழும் சமயமுமே இரு கண்களாகக் கொண்டார்.
சமய குரவர் போன்றே வாழ்வும் கண்டார்.
விதியது வலியது வெல்ல முடியாத
பிராப்த வினையும் அதுவே
வென்றெடுத்தார் மானிட விதியை
என்றும் வாழ்வார் எம் மனதில்

அன்புள்ள பெறாமகன்
மு.மகாலிங்கம்
நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திமதி திலகவதி கனகநாயகம் அவர்களின் மறைவு சார்பாக சங்கானைக் கோட்டக்கல்விப்பணிப்பாளரின் இரங்கல் அறிக்கை

எனது கல்விக் கோட்டத்தில் அடங்குகின்ற பாடசாலைகளில் கடந்த ஒன்பது வருடங்கள் சிறந்த கல்விச் சேவை செய்த இன்றைய ஆசிரிய கல்வியியலாளர் திரு.க.ஹரிஹரசக்தி அவர்களின் அன்புத்தாயார் அமரர் திருமதி திலகவதி கனகநாயகம் அவர்கள் இறந்த செய்தி அறிந்து துயரடைந்தேன். யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் அமரர் ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்களின் பழைய மாணவியான அமரர் திருமதி.க.தலகவதி அவர்கள் சிறந்த கல்விப்புலமை மிக்கவர் என்பது அன்னாரின் சகமாணவர்கள்மூலம் நான் கேள்வியுற்ற செய்தியாகும். அமரர் திருமதி.க.திலகவதி அவர்களின் அண்ணன் உயர்திரு.அ.முருகையா அவர்களிடம் நானும் கல்வி கற்றுள்ளேன். இவ்வகையில் அமரர் திருமதி.க.திலகவதி அவர்கள் நல்லசிந்தனை, இறைபக்தி, விசுவாசம், தலைமைத்துவம், பொறுப்புணர்ச்சி யாவும் நிறைந்த நல்லாசிரியை ஆவார். அவரின் வழித்தோன்றல்களான பிள்ளைகளும் சிறந்த வாழ்க்கை பண்புகளை உடையோராகக் காணப்படுகின்றனர். இவரது தூய பண்புக்கு அமைவாக எல்லா வழிமுறைகளும் எதிர்காலத்தில் நிஜமாகும். இதனை இவரின் வழித்தோன்றல்கள் நிதர்சனமாக்குவார்கள். இதுதான் இவரின் ஆத்மாவுக்கு நாம் வழங்கும் நன்றிக்கடன் என்ற செய்தியுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து நிறைவு செய்கிறேன்.

வணக்கம்.

திரு.துரை. எங்கரசு<br>
கோட்டக்கல்விப் பணிப்பாளர்<br>
சங்கானைக் கல்விக் கோட்டம்<br>
சித்தன்கேணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதாபச் செய்தி

நான் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆசிரியராக, உபஅதிபராக, அதிபராக இருந்த காலப்பகுதியில் (1977 - 1991) திருமதி திலகவதி கனகநாயகம் குடும்பத்தினரை எனக்கு நன்கு தெரியும். அன்னாரது புதல்வர்கள் வேல்தஞ்சன், சிவன்சேய், ஹரிஹரசக்தி ஆகியோர் நான் உப அதிபராக, அதிபராக இருந்த காலப்பகுதியில் அங்கு கற்றார்கள். வேல்தஞ்சனுக்கு உயர்வகுப்பில் பௌதிகவியல் கற்பித்தேன். இவர்களது தாயார் திருமதி திலகவதி காலமாகியமை அறிந்து ஆழ்ந்த கவலையடைந்தேன். எனது அனுதாபத்தையும் இரங்கலையும் அன்னாரது பிள்ளைகளுடன் பகிர்ந்து கொள்வதோடு ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

சே. இராசவல்லவர்
செல்லாச்சியமையார் வீதி,
சுன்னாகம்
16.01.2009

"எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு"

(குறள் - 392)

**The twain that lore of numbers**
**and of letters give**
**Are eyes, the wise declare,**
**to all on earth that live.**

(G.U.Pope's English Translation )

"கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை"

(குறள் - 400)

**Learning is excellence**
**of wealth that none destroy;**
**To man nought else affords**
**reality of joy.**

(G.U.Pope's English Translation )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணிவேரை மறக்காத எங்கள் அம்மா

கந்தரோடையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திலகவதி கனகநாயகம் அவர்களை நான் சிறிய வயதிலிருந்தே நன்கு அறிந்தவன். அத்தோடு எனது நெருங்கிய உறவினரும் கூட. நான் எனது ஆரம்பக்கல்வியை யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையில் ஆரம்பித்ததிலிருந்து இன்று வரை எனக்கு நன்கு பரீட்சயமானவர். துடிதடிப்பம் வீர நடையும் கொண்ட இவர் கணவனை இழந்து நிலையிலும் தனது மூன்று பிள்ளைகளையும் கல்வியில் சிறக்கச் செய்து இன்புற்று வாழ்ந்து காட்டிய பெருமைக்குரியவர்.

எந்நேரமும் ஓய்வின்றி ஓடியாடித்திரிந்து மூன்று பிள்ளைகளுடனும் மருமக்கள், பேரப்பிள்ளைகளோடு இதமாய் வாழ்ந்தவர். சந்தர்ப்பம் கிடைக்கும் நேரமெல்லாம் உறவினர்களோடு விருந்துண்டு, இன்புற்று மகிழ்ந்தவர். மகிழ்ச்சி கலந்த தமிழ்ப் பேச்சோடு கலகலப்பாக பேசி ஆங்கிலத்திலும் வியக்க வைத்தவர். ஊரின் பெருமையை உலகிற்கு பறைசாற்றியவர்.

கந்தரோடை அருளானந்த பிள்ளையார் கோவில் உற்சவங்களில் பக்தியோடு கலந்து கொள்ளுவார். தனது ஊர் கந்தரோடையையும் தனது தந்தைவழி உறவிர்களையும் ஒரு போதும் மறந்தது கிடையாது. தனது ஊரின் ஆழ்ந்தபற்றின் நிமித்தமே அன்னாரது இறுதிக்கிரியைகள் தொல்புரத்தில் நடந்தபோதும் பூதவுடல் கந்தரோடை சாங்கம்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டதை யாவரும் அறிவர்.

பல்வேறு ஊர்களிலே விழுதுகளை எறிந்த பொழுதும் ஆணிவேரை என்றைக்குமே. மறக்காத அன்னாரின் பண்பு அவரது இறுதியாத்திரையிலும் தெரிந்தது. கந்தரோடையில் பிறந்து, கந்தரோடையில் வளர்ந்து, கந்தரோடையில் கற்று, கந்தரோடையில் வாழ்ந்து, கந்தரோடையிலேயே தனது இறுதி யாத்திரையை அன்னார் நிறைவு செய்தார். கந்தரோடைக்கும் அவருக்குமிடையேயுள்ள உறவு என்பது என்றைக்குமே மறக்க முடியாதது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கந்தரோடை அருளானந்தப் பிள்ளையாரை பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி

சுவாமி சாந்தகுமார்
ஆசிரியர்
யாழ். மானிப்பாய் இந்துக்கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துகிருஷ்ணர் வீதி
சுன்னாகம்
18.01.2009

பாசத்துக்குரிய அப்பம்மாவுக்கு எழுதுவது

நீங்கள் எங்கே போய்விட்டீர்கள்? உங்கள் விலாசம் தெரியாது. நாங்கள் தைப்பொங்கல் இம்முறை கொண்டாடவில்லை. அப்பம்மா இனி அடுத்த மாதம் சிவராத்திரி வருது. அப்பா சிவராத்திரி தினத்தில் பிறந்தால். அவருக்கு சிவன்சேய் என்று பெயர் வைத்ததாக சொல்லுவீங்கள். நீங்கள் அப்பாவுக்கு பெயர் வைத்தீர்கள். எனக்கும் வித்தகன் என்றும் நீங்கள்தான் பெயர் வைத்தீர்கள் என்றும் சொல்லுவியள். என்னுடைய முழுப்பெயரும் நீங்கள் வைத்த பெயர்தான் சிவன்சேய் வித்தகன். தம்பி கிரிசி, தங்கச்சி பார்க்கவி, அம்மா அப்பா எல்லோரும் உங்களை ஒருநாளும் மறக்கமாட்டம். எங்கள் எல்லோருடைய சார்பிலும் நான்தான் எழுதுகிறேன். நீங்கள் எங்கட வீட்டில் இருந்தபோது எங்களுக்கு சொல்லித்தந்த தேவாரத்தையும் உங்களுக்கு எழுதுகிறேன்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்த கைதொழ
கற்றுணை பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே

அப்பம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து கடிதத்தை முடிக்கிறேன்.

அன்புள்ள பேரன்
சி.வித்தகன்
எங்கள் குடும்பசார்பில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயனார் கோவிலடி
புளியந்தோட்டம்
சுன்னாகம்
20/1/2009

எங்கள் அன்பு அப்பம்மா

20-12-2008 ஞாயிற்றுக்கிழமை மத்தியானம் அப்பாவுடன் நானும் கிஷோரும் வேணுவும் ஆஸ்பத்திரிக்கு வந்தபோது சொன்னீங்கள் "பொன்மகள் இனி ஆறாம் வகுப்பு நல்லாப் படிச்சு கெட்டிக்காரியா இருக்க அப்பா அம்மா சொல் கேட்கவேண்டும். கடவுளை கும்பிட்டு நல்ல பிள்ளையா வளரவேணும் .... நான் இனி எப்ப உங்களிட்டை வாறது .... "வேணுவின்ரை கையைப் பிடித்து" என்னை வேணுக்குட்டியோடை உம்மடை வீட்டை வந்து எப்ப சிரிச்சு விளையாடுகிறது...." என்று அழுதீர்கள், கிஷோரைப்பார்த்து "தம்பி ஸ்கொலசிப் வகுப்பு இனி நீ இன்னும் ஊக்கமாக படி .... உங்கடை அப்பம்மா தப்புவனோ தெரியாது...." என்று அழுதியள் அப்பம்மா நீங்கள் எங்கடை வீட்டிலை இருந்த போது எங்களுக்குச் சொல்லித்தந்த தேவாரம், கணக்குகள், கதைகள் எல்லாம் எங்களால் மறக்கமுடியாது. 21.12.2008 அன்று என்னுடைய பிறந்தநாளுக்கு ஆஸ்பத்திரிக்கு நான் வரவில்லை. ஒவ்வொரு பிறந்தநாளுக்கும் காசு தருவியள் 21.12.2007 பிறந்தநாளுக்கு நீங்கள் தந்த காசுக்கு அப்பா ஸ்கொலசிப் சோதனைக்கு படிக்க புத்தகங்கள் வாங்கித் தந்தவர். அப்பம்மா நீங்கள் இனிமேல் ஒருநாளும் எங்கடை வீட்டை வரமாட்டியள் தான். ஆனால் அப்பாவும் நாங்களும் உங்களை ஒருபோதும் மறக்கமாட்டம். நன்றி அப்பம்மா. நீங்கள் கடவுளோடை இருந்து எங்கடை நல்ல வாழ்வுக்காக எங்களை ஆசிர்வதியுங்கள்.

உங்கள் பேர்த்தி
பொன்மகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசை அப்பம்மாவின் அறிவுரைகள் எம் வாழ்வின் நல் வழிகாட்டிகள்

எங்கள் ஆசை அப்பம்மா எம்மோடு இணைந்து பல கதைகள் சொல்லிடுவார். எனது அப்பா, அம்மா, தங்கை யாவருடனும் பக்குவமாய்ப் பழகும் பயிற்சி தனை ஒவ்வொரு பொழுதும் என் அருகில் இருந்து ஊட்டிடுவார். இறை நம்பிக்கை தனை தினம் தினம் வளர்த்திடுவார். ஆலமரத்தின் வித்தாக நாம் முளைத்து எழும் போதே அசையாத நம்பிக்கை வார்த்தைகளை சொல்லிடுவார். ஆங்கிலப் பயிற்சி தனை ஆர்வத்துடனே உரைத்திடுவார். பள்ளிப்பருவம் இதனை பாலர் நாம் பின் தொடரவே நல் அனுபவங்கள் பல பகிர்ந்திடுவார். வெள்ளை உள்ளத்துடன் வேண்டாத வேலைகளை மெல்ல அகற்றிடுவார். தெய்வ வார்த்தைகள் பல சமத்தக் கூறி தேனிலும் இனிய தூய பல சிந்தனைகளை எம் வாழ்வின் அனுபவங்களாய் தந்திட்ட ஆசை அப்பம்மாவே நீங்கள் இறுதி வாழ்க்கைப் பயணத்தில் இறைவனது பாதங்களை அடைவதையே இலட்சியமாக வைத்து நல்ல மார்கழி மாதத்தில் சிவபெருமானது பாதங்களை சென்றடைந்தீர்கள். உங்களை இறைவன் ஏற்றுக்கொண்டுள்ளார் என்ற நிறைவுடன் பேரப்பிள்ளைகள் ஆகிய நாம் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பணிகின்றோம்.

ஆசைப்பேரப்பிள்ளைகள்
ஹ. நீதிகா
ஹ. இனித்திகா

29-01-2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயனார் கோவிலடி
புளியங்கூட்டம் சுன்னாகம்
20-01-2009

ஆசை அப்பம்மா

உங்கடை பேரன் கிஷோர் எழுதுறன்.
நீங்கள் சொல்லித்தந்த பாட்டுக்கள், தேவாரம்,
வாய்ப்பாடு, ஆங்கிலப்பாடம் எல்லாம்
எனக்கு இனிமேல் சொல்லித்தர வரமாட்டியள்.
14.01.2009 தைப்பொங்கலன்று
சித்தப்பா வீட்டுக்கு அப்பாவுடன்
பொங்கலும் பலகாரங்களும் கொண்டு வந்து உங்களுக்கு
படைத்து நானும் தேவாரம் பாடினேன்
நீங்கள் கடவுளோடை இருந்து கேட்டிருப்பியள்.
நீங்கள் சொல்லித்தந்த தேவாரங்களும் பாடினேன்.
அப்பம்மா உங்களிட்டை என்ன கேள்விகள்
விளங்காமல் கேட்டாலும் சொல்லித்தருவியள்.
எங்கடை வீட்டிலை இருந்து நீங்கள் வெளியால்
எங்கை போகிற போது மெல்லமாக அப்பாவுக்குத்
தெரியாமல் இனிப்புவகை எல்லாம்
வாங்கிக்கொண்டுவருவியள். போன தீபாவளிக்கு
அக்காவும், நானும், வேணுவும் வந்தபோது
அக்காவுக்கு ஸ்கொலசிப் பாஸ் பண்ணினதுக்கு
காசு கொடுத்தீர்கள் "கிஷோர் உனக்கு
பிறந்தநாளுக்கு காசு தருவன்" என்றீர்கள்.
இம்முறை 25-12-2008 என்னுடைய
பிறந்தநாளன்று நீங்கள் ஆஸ்பத்திரியில
அனுமதிக்கப்பட்டிருந்தியள். அப்பா மட்டும் தான்
என்னுடைய பிறந்தநாள் -நத்தார் அன்று ஆஸ்பத்திரிக்கு
வந்தவர்; நான் வரேல்லை. அப்பம்மா, எனக்கு
நீங்கள் சொல்லித்தந்த நல்ல பாடங்களை எனக்கு
கிடைத்த பிறந்தநாள் பரிசுகளாகும்.

உங்கள் பேரன்
கிருஷ்ணகிஷோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுவில் கோட்டக்கல்விப்பணிப்பாளர் அவர்களின் இரங்கல் செய்தியிலிருந்து......

மனிதனுடைய வாழ்க்கை எப்படியோ வாழ்ந்து முடிவது என்பது அன்று. இப்படி இப்படித்தான் வாழவேண்டும் என்ற குறிக்கோளோடு இயங்குகின்ற வாழ்க்கை மனிதனுடைய வாழ்க்கை.

மனிதனின் குறிக்கோள் தீராத ஆசையிலே மாறாத கவலைக்கிடம் கொடுத்து மயங்குவதன்று. பொய்யாமொழிப்புலவர் கூறும் குறள் இது.

"நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு" (குறள் 336)

ஒருவர் நேற்று இருந்தார். இன்று இல்லை - என்று சொல்லும் இரங்கத்தக்க நிலையை உடையது இவ்வுலகம். இதுதான் இந்த உலகின் பெருமை. மண்ணில் தோன்றிய மனிதர்கள் எல்லோருமே ஒரு நாள் மறையவேண்டியவர்களே. எவ்வளவு காலம் மனிதன் வாழ்ந்தான் என்பதிலே அல்ல எப்படி வாழ்ந்தான் என்பதிவேயே தான் மனித வாழ்வின் பெருமையே அடங்கியிருக்கிறது. அந்த வகையிலே - கந்தரோடைக் கிராமத்திலே பிறந்து வாழ்ந்து. அண்மையில் அமரத்துவம் அடைந்த திருமதி திலகவதி கனகநாயகம் அவர்களின் வாழ்வு பற்றி இரங்கல் உரையிலே நினைவுகூருகின்றேன்.

எங்கள் உடுவில் கல்விக்கோட்ட அலுவலகத்தில் பொது முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் வேல்தஞ்சனின் தாயார் சக்தி உபாசனையுடைய பக்தர். சதா கோவில் வழிபாடு. கோவில் திருப்பணியிலே ஈடுபாடு கொண்டு சைவசமய விழுமிங்களை அனுசரித்து வாழ்ந்தார். தனது மூன்று ஆண்மக்களையும் நன்றாக படிக்கவைத்து முறையே கல்விப்பணியாற்றும் உத்தியோகத்தராகவும் ஆசிரியராகவும் ஆசிரிய கல்வியியலாளராகவும் மிளிரச் செய்துள்ளார்.

அவர்களது தாயின் கடமை போற்றுதற்குரியது. அத்துடன் அரும் முயற்சி என்றே கூறலாம். இத் தாயார் ஆரம்பக் கல்வியை கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையிலும் தொடர்ந்து அதே கிராமத்திலுள்ள ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் பயின்றார். அவர் படித்த பாடசாலைகளில் நல்லொழுக்கப் பண்பினை கல்வி வளத்தை பெறும் வகையில் தனது மைந்தர் மூவரையும் அப்பாடசாலைகளுக்கே அனுப்பினார். அத்தாயானவர் இவ்வுலகின் அற்ப இன்பங்களை விட்டு இறைவனடி சேர்ந்து பேரானந்த பேறும் அடைந்துள்ளார். அதே நேரம் அவரை இழந்த குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

செ.குபேரநாதன்
கோட்டக்கல்விப்பணிப்பாளர்
உடுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் கல்விவலய நிர்வாக உத்தியோகத்தரின் இரங்கல் செய்தியிலிருந்து

அமரர் திகவதி கனகநாயகம் அவர்கள் தீவிர துர்க்கையம்மன் பக்தை. தான் கொண்ட கொள்கையில் என்றும் மாறாத இலட்சியவாதி. அவரை எனது குடும்பத்தினர் அறிவார்கள். திரு. கனகநாயகம் வேல்தஞ்சன் அவர்கள் எமது அயலில் திருமணம் செய்து கொண்டமை மட்டுமன்றி எமது பிள்ளைகளுக்கு ஆங்கில மொழி, ஆங்கில இலக்கியம் ஆகியவற்றை போதித்தமையினாலும் அமரரின் குடும்பத்தினருடன் தொடர்புகள் ஏற்பட்டன. அத்துடன் அன்னாரின் மூன்று புதல்வர்களும் என்னுடன் உத்தியோக பூர்வ ரீதியாக அலுவலக மட்டத்தில் தொடர்பு கொள்பவர்களாகவும் இருந்தமை அமரராகிய அவர்களது தாயை நன்கு தெரிய வாய்ப்பைத் தந்தது. அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

திருமதி.த. சிவயோகி
நிர்வாக உத்தியோகத்தர்
வலயக்கல்வி அலுவலகம்
வலிகாமம

"கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்தஇவ் வுலகு"

(குறள் - 578)

**Who can benignant smile,**
**yet leave no work undone;**
**By them as very own**
**may all the earth be won.**

(G.U.Pope's English Translation )

"வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு"

(குறள் - 595)

**With rising flood the rising lotus flower**
**its stem unwinds;**
**The dignity of men is measured**
**by their minds.** (G.U.Pope's English Translation

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னம்மா என் கல்வியின் இரண்டு கண்ணம்மா

முதல் உயிரெழுத்து "அ" வை உங்களிடமே கற்றேன். நல்லுணவும் தருவீர்கள் . நல்லறிவும் தருவீர்கள். குழந்தைப்பருவத்திலேயே நான் உங்கள் மேற்பார்வையில் வழிகாட்டலில் கல்விகற்பதை அம்மா. அப்பா விரும்பினர். உங்களிடம் கல்வி கற்பதும் உங்களோடு இருந்து கதைப்பதும் மகிழ்ச்சிகரமானவை. கந்தரோடை தமிழ்கந்தையா வித்தியாசாலையில் முதலாம் வகுப்பிலிருந்து மூன்றாம் வகுப்புவரை நான் கற்ற போது மாலையில் உங்களிடமே கல்விகற்றேன்.

பின்னர் போர்ச்சூழலால் நாங்கள் எல்லோரும் தென்மராட்சிக்கு இடம்பெயரும் நிலை ஏற்பட்டது. கந்தரோடையில் உள்ள உங்கள் வீடு "முன்னேறிப்பாய்தல்" நடவடிக்கையில் கடும் சேதத்திற்கு உள்ளாகிய நிலையில் நீங்களும் இடம்பெயர்ந்தீர்கள். எங்கள் குடும்பத்தினர் சரசாலையில் தங்கியிருந்த போதும் நான் உங்களோடு மட்டுவிலில் தங்கியிருந்தேன். எனது மச்சான் ஆர்த்தியும் (அகாலமாகியவர்) நானும் உங்களிடம் அங்கும் படித்தோம்.

இவ்வாறு ஆறு மாதங்கள் கடந்த நிலையில் திரும்பவும் எமது சொந்த ஊருக்கு வந்தோம். ஆனால் கந்தரோடையில் இருந்த உங்களின் வீடு யுத்தத்தால் அழிவுண்டதால் உங்கள் குடும்பம் கொக்குவிலில் வசிக்க நேரிட்டது. நானும் உங்களுடன் கொக்குவிலில் இருக்க விரும்பினேன். தரம் நான்கு கற்பதற்காக என்னை கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாசாலையில் சேர்த்தீர்கள். என்னை உங்கள் செல்ல மகன் போலவே அரவணைத்துக் காத்தீர்கள். நீங்கள் ஓய்வூதியம் எடுத்துக் கொண்டுவரும் நாளில் எனக்கு விருப்பமான சிற்றூண்டிகளை வாங்கிவருவீர்கள். ஓய்வூதியத்தில் ஒரு தொகையை எனது கல்விக்காக வழங்கிய வண்ணம் இருந்தீர்கள். தொடர்ந்து ஐந்தாம் வகுப்பில் கற்று புலமைப்பரிசில் பரீட்சை எடுப்பதற்காக மைந்தன் மாமா (சிவன்சேய்) தான் கற்பித்த பாடசாலையான சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையில் என்னைச் சேர்த்தார். புலமைப்பரிசில் பரீட்சைக்காக என்னைத் தயார் செய்தார். இருந்தபோதும் அதில் சித்தியடைய முடியவில்லை. குடும்பத்தவர்கள் எல்லோரும் என்னை ஏசினார்கள். சின்னம்மா நீங்கள் மட்டும் ஆறுதல் சொல்லி கல்வியின் ஆழ அகலங்களை புரிய வைத்தீர்கள். இனி ஆறாம் வகுப்பில் கற்பதற்காக கொக்குவில் இந்துக்கல்லூரியில் மைந்தன் மாமா அனுமதி பெற்றுத்தந்தார். தரம் 7 வரை உங்களிடம் இருந்தே அங்கு கற்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் ஓடியது. பின்னர் நான் உயர்தரத்தில் கணிதம் கற்று யாழ் பல்கலைகழகத்திற்கு பௌதீக விஞ்ஞானத்தறையில் அல்லது சப்பிரகமுவா பல்கலைக்கழகத்தில் அளவை விஞ்ஞானத்துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்ள சந்தர்ப்பங்கள் கிடைத்தன. இரண்டு சந்தர்ப்பங்களையுமே உதறிவிட்டு மக்கள் வங்கியில் எனக்கு கிடைத்த வாடிக்கையாளர் சேவை உதவியாளர் பதவியை ஏற்றுக்கொண்டேன். இவ்விடயத்திலும் எனது விருப்பத்தை நீங்களும் "அவன் விருப்பப்படி வங்கித் தொழிலை தெரிவுசெய்திருக்கிறான் அதிலும் அவன் தொடர்ந்து படித்து முன்னேற்றத்தையும் பதவி உயர்வுகளையும் அடைவான். அவனது தெரிவைப்பற்றி அவனை பிழை சொல்லவேண்டாம்" என்று தஞ்சன் மாமாவிடம் (வேல்தஞ்சன்) கேட்டுக்கொண்டதுடன் எனது முடிவையும் நீங்கள் அங்கீகரித்ததாக அறிந்தேன்.

எனது வாழ்நாளில் எனது கல்வி, தொழில்வாய்ப்பு ஆகியவற்றில் மிகுந்த அக்கறை செலுத்தி பக்கபலமாக நின்றிருக்கிறீர்கள். நீங்கள் இறக்கும் வரை எனது கல்விக்காக உங்கள் ஓய்வூதியப் பணத்தில் ஒரு தொகையை வழங்கி வந்தீர்கள். என்ன அழிந்தாலும் ஒருவர் கற்ற கல்வி அழியாது. சின்னம்மா எனது கல்வியில் உங்களின் பங்கு மிக முக்கியத்துவம் மிக்கது. நான் சாகும்வரை நீங்கள் என் மனதிலிருந்து அழியமாட்டீர்கள்.

க.கமலாக்ஷன் (லக்ஷன்)
வாடிக்கையாளர் சேவை உதவியாளர்
(Customer Service Assistant)
மக்கள் வங்கி

குறிப்பு :- செல்வன் கருணாநிதி கமலாக்ஷன் எங்கள் அக்கா அம்பிகாதேவி (நந்தினி) அவர்களின் மூத்த மகனாவார். எங்கள் அம்மாவின் பேரனும் எங்களின் மருமகனுமான அவர் எங்கள் அம்மாவை எங்கள் அக்கா அழைப்பது போலவே சின்னம்மா என்றே அன்புடன் அழைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய பண்பாடுகளை காத்தவர்

கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் என்னுடன் கல்வி கற்ற திரு அ. முருகையா. அக்காலத்திற் கல்லூரியின் காற்பந்து அணிக்குப் பெருமை சேர்த்தவரும் புத்திக்கூர்மை நிறைந்த மாணவருமான திரு.அ.கதிரமலை ஆகியோரின் இளைய சகோதரியாக நான் அறிந்த செல்வி .அ. திலகவதியை நீண்ட காலத்தின் பின் திரு.ச.கனகநாயகம் அவர்களின் இல்லக் கிழத்தியாகவும் வேல்தஞ்சன். சிவன்சேய். ஹரிஹரசக்தி ஆகிய முத்தான மூன்று பிள்ளைகளின் தாயாக கண்டு மகிழ்ந்தேன்.

அளவான அடக்கமான குடும்பத்தின் ஆனந்த வாழ்க்கைக்குத் திரு. கனகநாயகம் அவர்களின் மறைவு முற்றுப்புள்ளி இட்ட போதிலும் விதியின் வலிமையை உணர்ந்து மனந்தேறியும் இறைவனின் கருணை நினைந்து நம்பிக்கை கொண்டும் தாய்க்குத் தாயாகவும் தந்தைக்குத் தந்தையாகவும் இருந்து பிள்ளைகளை வளர்த்தெடுத்தார் அவர்.

"தந்தையொடு கல்வி போம்" என்பதைப் பொய்யாக்கி. தன் பிள்ளைகளை கற்க வைத்த பெருமை - கசறட கற்க வைத்த பெருமை - கற்றவற்றின் படி நிற்க வைத்த பெருமை அவருக்குண்டு. ஆலய வழிபாட்டிலும் ஆலயத்தொண்டுகள் செய்வதிலும் அளப்பிலா ஆர்வமுடைய அவருக்கு மனம் நிறையும் படி. மகிழ்ச்சி அடையும்படி பிள்ளைகள் மூவரும் வாழ்க்கையில் வெற்றிகண்டு வருவதை அவர் கண்ணாரக் கண்டார்.

பரம்பரையை மட்டுமல்லாமல். பாரம்பரியப் பண்பாடு களையும் தொடர்வதில் வெற்றிகண்ட அவருடைய நினைவு பலருடைய உள்ளங்களில் நீண்டு நிலைக்கும்.

அவருடைய ஆன்மா சாந்தியடைய விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

22.01.2009
கந்தரோடை
சுன்னாகம்

சி.சரவணபவன்(சிற்பி)
(ஓய்வு பெற்ற அதிபர்)
வைத்தீஸ்வராக்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K. Selvakumaran M. A.,
Sri Lanka Principal's Service Class I.
Principal:,
Kanderodai Tamil Kandiah Vidyasalal.

Kanderodai,
Chunnakam.

200[illegible]–1–12

# சக்தி உபாசகி அமரர் திலகவதி கனகநாயகம் அவர்கள்

அமரர் திலகவதி கனகநாயகம் கந்தரோடைக் கிராமத்தில் எல்லோருடனும் அன்புடனும் மதிப்புடனும் பழகிய ஒருவர். சக்தி வழிபாட்டில் அதிக நம்பிக்கை கொண்டவர். சமய வழுமியங்களைப் பின்பற்றுவதில் அதிக அக்கறை காட்டி வந்தார்.

இவர் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையில் சிறந்த மாணவர்களில் ஒருவராக திகழ்ந்தவராக இருந்தாரென அறிகின்றேன். அதே போன்று தனது மூன்று பிள்ளைகளையும் இவ் வித்தியாலயத்தில் இணைத்து ஆரம்பக் கல்வியை கற்பித்தார். கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்படும் போட்டிகளுக்கு இவர்களைப் பங்கு கொள்ளச் செய்து அவர்கள் வெற்றியீட்டுவதற்கு ஆசிரியர்களோடு இணைந்து பல பயிற்சிகளை வழங்கி பெருமிதமடைந்ததை என்னால் அறிய முடிகிறது.

இவர் இடைநிலைக் கல்விக்கு ஆங்கில மொழிமூலமான விஞ்ஞான பாடநெறியை தேர்ந்தெடுத்து H.S.C வகுப்புவரை கற்றார். வீட்டு சூழ்நிலை கல்வியினை தொடர இடையூறாக இருந்ததனால் தொடர்ந்து கற்க முடியவில்லை.

இருப்பினும் அவர்களிடம் காணப்பட்ட அறிவாற்றல் காரணமாக தனது பிள்ளைகளுக்கும் ஏனைய உறவுகளுக்கும் கல்வி வழிகாட்டலைச் செய்து வந்துள்ளார். ஒரு சிறந்த பழைய மாணவியாக, சிறந்த பெற்றோருமாக இருந்து முன்மாதிரியாக செயற்பட்ட அம்மையின் இழப்பு ஈடுசெய்ய முடியாததொன்றாகும்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக...

ஓம் சாந்தி!
ஓம் சாந்தி!!
ஓம் சாந்தி!!!

க. செல்வக்குமரன்.
அதிபர்
கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தந்தையின் உடன்பிறவாச் சகோதரன் சுப்பிரமணியம் விஜயகாந்தன் அவர்களின் இரங்கல் செய்தி

என் அண்ணன் கனகநாயகத்தினதும் என்னுடையதுமான பூர்வீகம் யாழ்ப்பாண நகரின் நீராவியடியைச் சேர்ந்ததாகும். எங்களது பூட்டன் கோவிந்தர். அவரின் மகன் (எங்களது பேரன்) கந்தர் அவர்களாகும். அவருக்கு சங்கரப்பிள்ளை, பொன்னம்மா, சுப்பிரமணியம், தங்கம்மா ஆகியோர் பிள்ளைகள். எங்கள் மாமி பொன்னம்மாவுக்கு பிள்ளைகள் இல்லை. தங்கம்மா மாமியின் பிள்ளைகளாக நடராசா, கமலாம்பிகை, புவனேஸ்வரி ஆகியோர் பிறந்தனர். எனது பெரியதந்தை சங்கரப்பிள்ளை அவர்களின் ஏக புத்திரன் எனது ஒன்றுவிட்ட அண்ணர் கனகநாயகம் அவர்கள். நானும் எனது தந்தை சுப்பிரமணியம் அவர்களுக்கு ஒரேயொரு புதல்வன். நான் கோவிந்தர் கந்தர் சுப்பிரமணியம் விஜயகாந்தன். எனது அண்ணர் கோவிந்தர் கந்தர் சங்கரப்பிள்ளை கனகநாயகம்.

அண்ணர் கனகநாயகம் அவர்களின் தாயார் இறந்து போக தநதையார் மறுதாரமாக தனது முதல் மனைவியின் தமக்கையாரான ஆச்சிக்குட்டி அவர்களை திருமணம் செய்தார். ஆச்சிக்குட்டி அவர்களுக்கு பிள்ளைகள் இல்லை. அதனால் அண்ணர் கனகநாயகத்தை சொந்தப்பிள்ளையாகவே பெரியதாயார் வளர்த்துபடிப்பித்தார். அண்ணர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் எஸ்.எஸ்.சி வரை கற்று சித்தியடைந்தார். அதன் பின்னர் சிலகாலம் தனிப்பட்ட ரீதியில் ரியூசன் கொடுத்து வந்தார். அதன் பிறகு அவர் அரச எழுதுவினைஞர் சேவையில் இணைந்தார்.

சுன்னாகத்தில் எனது அண்ணர் திருமணம் செய்தார். அவர்களுக்கு அம்பிகாதேவி (நந்தினி) என்ற பெண் குழந்தை கிடைத்த போது அண்ணரின் மனைவி சிறிது காலம் நோய்வாய்ப்பட்டு இறந்துபோனார். அதனை அடுத்து பெண் குழந்தை பேரன் பேர்த்தியின் பராமரிப்பில் விடப்பட்டது. எனினும் அண்ணரின் இறந்துபோன மனைவியின் உற்றார் உறவினர்கள் அவரை மறுதாரம் செய்யுமாறு வலியுறுத்தினர். எனினும் ஆரம்பத்தில் மறுத்த அண்ணர் பேச்சுத்திருமணம் ஒன்றை ஒழுங்குபடுத்தியவர்கள் அதில் கந்தரோடையை சேர்ந்த படித்த பெண் ஒருவர் - திலகவதி என்ற பெயருடையவர் - அண்ணருக்கு மறுவாழ்வு தரும் திருமணத்தில் இணைய சம்மதிப்பதாக தெரிவித்தனர். இதனையடுத்து சம்பந்தப்பட்ட சகல விடயங்களிலும் இணக்கம் கண்டு கனகநாயகம் திலகவதி திருமணம் செல்வச்சன்நிதி முருகன் ஆலயத்தில் நிறைவேறியது. திருமணத்தை அடுத்து சிறிது காலத்தில் அம்பிகாதேவியும் திலகவதி பெற்றெடுத்த ஆண் மக்களும் ஒரே குடும்பத்தில் பிள்ளைகள் ஆகினர்.

அக்காலப்பகுதியில் அண்ணர் கனகநாயகம் யாழ்பாபணத்திலிருந்த வடமாநில கல்வித்திணைக்களத்தில் எழுது வினைஞராக சேவையாற்றத் தொடங்கினார். விடுதலை நாட்களிலும் சனி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறு தினங்களிலும் அண்ணர் கனகநாயகம் குடும்பத்தினர் நீராவியடிக்கு உறவினர்களிடம் வருவார்கள். ஆலயங்களுக்கும் செல்வார்கள். இவ்வாறாக அவர்கள் உறவு கொண்டாடினாலும் அண்ணர் கனகநாயகத்தின் தாயின் தம்பியாரின் மகளான சரஸ்வதியின் குடும்பத்தினருடன் (எங்கள் மச்சாள் குடும்பம்) அண்ணரின் மறைவின் பின்னரும் திருமதி திலகவதியின் உறவு நீடித்தது. சரஸ்வதி அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்திலும் பின்னர் இறந்து போன பொழுதும் திருமதி திலகவதி அவர்கள் தனது உடலாரோக்கியமின்மையையும் கருதாது இடையறாது வந்து துயரங்களில் பங்கொண்டு ஆறுதலளித்தார்.

கடந்த வருடம் மார்கழி மாதம் தொடர்ச்சியாக முப்பது நாட்கள் வரையில் அன்னார் சிறுநீரகங்கள் செயற்பாடு இழந்து வருகின்ற நிலையில் யாழ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த வேளை பல தடவைகள் அவரைச் சென்று பார்த்தேன். முதற்தடவை செல்லும் போது என்னுடன் நன்றாக கதைத்தார். அவர் குணமாகி வீடு திரும்புவார் என்றே நம்பினேன். எனினும் அவர் இறைவனடி சேர்ந்தார். அவரது இறுதிக்கிரிகைகளில் கலந்து கொள்வதற்காக சுழிபுரம் வந்திருந்தேன். அன்னாரது இறுதிக்கிரிகைகள் அவரது இளைய மகனின் இல்லத்தில் நடைபெற்றது. அவர் தனது கணவரின் சாயல் . இயல்பு. பொறுமை. சகிப்புத்தன்மை என்பன தனது இளைய மகன் சக்தியிடமே நிரம்பியிருக்கிறது என பெருமைப்பட பேசுவார். அவரது இளைய மகனே தாயின் கடமைகளை நோயுற்ற காலத்திலும் சாவின் பின்னரும் நிறைவு செய்திருக்கிறார். எங்கள் அண்ணரின் மனைவியின் அந்திமகால விடயங்களை ஒழுங்காக நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பும் உதவிகளும் புரிந்த ஹரிஹரசக்தி அவர்களின் அன்பு மனைவி. உற்றார் உறவினர்கள் ஆகியோருக்கு இவ்விடத்தில் நன்றியை தெரிவிப்பதோடு திலகவதி அவர்களின் இழப்புக்காக குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து விடைபெறுகிறேன்.

சுப்பிரமணியம் விஜயகாந்தன்
கொக்குவில்

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

(குறள் - 619)

**Though fate divine**
**should make your labour vain;**
**Effort its labour's**
**sure reward will gain.**

(G.U.Pope's English Translation )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மையெல்லாம் அரவணைத்த எம் இனிய சின்னம்மாவே!

எம் இனிய சின்னம்மாவே நீங்கள் அழகாக சேலையுடுத்தி வீபூதிப் பூச்சுடனே எம் இல்லம் நோக்கி எம்மைப் பார்ப்பதற்கு வந்திடுவீரே. சின்னம்மாவை சில நாட்கள் காணவில்லை என்று நினைத்தால் போதும் அன்று எம் கண் முன்னே வந்து நின்றிடுவீரே. எமக்கு ஆறுதல் கூறுவீரே. நல்ல நல்ல கதைகள் கூறி பேரப்பிள்ளைகளுக்கு புத்திமதியும் புகட்டிடுவீரே. ஆங்கிலம், கணிதம் ஆறுதலாய் போதிப்பீரே. அத்துடன் சாத்திரமும் கூறிடுவீரே. நாம் பசித்து உங்கள் இல்லம் வரும் நேரம் அன்பாய் உணவுதந்து நாம் உண்ணும் வரை பல கதைகள் கூறி எமக்கு புன்னகையுடன் விருந்தோம்பல் செய்வீரே. இத்தனையும் கொண்ட எம் சின்னம்மாவே உம் பிரிவை அறிந்ததும் நாம் துடியாய் துடித்து விட்டோம். சின்னம்மா உங்கள் பிரிவு எம் மனதை விட்டு என்றுமே நீங்காதம்மா. உமது ஆத்மா சாந்தியடைய கந்தரோடையின் உங்கள் பெறாமக்கள் அனைவரும் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பெறாமக்கள் சார்பில்
திருமதி அ. இராஜேஸ்வரி
சுப்பிரமணியம் முன்பள்ளி ஆசிரியை
கந்தரோடை

"முயற்சி திருவினை ஆக்கும் முயற்றுஇன்மை
இன்மை புகுத்தி விடும்"

(குறள் - 616)

**Effort brings
fortune's sure increase,
Its absence brings
to nothingness.**

(G.U.Pope's English Translation )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SARAN SETHU SERVICES

Reg No:- 15717 / 16-09-1985 / Jaffna
Undertaking Civil Construction & Supply of Building Materials
Branch :-
Vipa Orbit Services
Office :- 207,209,211 K.K.S Road, Chunnakam.
Residence :- 17/1, Chellachchi Ammayar Road, Chunnakam. ௩௦/௯௧/200௭.
Sole Propritor : LION SETHU VIPULANANDHA (Sooty Master)
Telephone and Fax :-

| Office | Mobile | Residence |
|---|---|---|
| 021 222 6337 | 077 773 0087 | 021 222 6337 |
| 060 221 2709 | 077 605 1927 | 021 222 ......... |
| 077 773 8484 | | |

# ஸ்கந்தாவின் மகள் எங்கள் அக்கா

கந்தரோடை மண்ணின் மகளாக உதித்து ஸ்கந்தாவின் சிறந்த மாணவியாக திகழ்ந்து அறிவும் பண்பும் நிறைந்த கணவரின் மனைவியாகவும் திகழ்ந்து உன்னதமான பிள்ளைகளின் தாயாகவும் பரிணமித்து அமரத்துவம் எய்திய என் அன்பு அக்கா திருமதி திலகவதி கனகநாயகம் அவர்களின் ஆன்ம ஈடேற்றம் வேண்டிநிற்க்கும் இம் மலரில் அவரையும் அவரது அன்பான உள்ளத்தையும் அவரோடு நான் பழகிய காலத்தையும் நினைவுகூர எனக்கு வாய்ப்பளித்த அவரது பிள்ளைகளுக்கு நன்றியைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

திருமதி கனகநாயகம் திலகவதி அவர்கள் நான் ஸ்கந்தாவில் எனது கல்வியை கற்கத் தொடங்கிய காலத்தில் தனது கல்லூரிக்காலத்தை முடித்துக்கொள்கின்ற வேளையில் இருந்தார். அவரையும் அவரது குடும்பத்தையும் நன்கு அறிந்து பழகி பரீட்சையம் பெற்றவன் நான்.

திருமதி திலகவதி அக்காவின் அண்ணன் திருவாளர் கதிரமலை அவர்களும் நானும் லயன்ஸ் கழகத்தில் இணைந்து பணியாற்றிய காலத்தில் அண்ணன் அவர்கள் ஸ்கந்தாவின் ஆரம்ப கால வரலாற்றையும் தான் தலைமை தாங்கிய ஸ்கந்தா உதைபந்தாட்டக் குழு எதிர்கொண்ட ஆரம்பகால அவலங்களையும் விளங்கப்படுத்தினார். ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு ஒரு உதைபந்தாட்ட மைதானத்தை உருவாக்க வேண்டிய பொறுப்பும் அந்த உதைபந்தாட்டக் குழுவிடமே இருந்தது. கல்லூரிக்கு வடக்குப் பக்கமாக இருந்த பனந்தோப்பு அடர்ந்திருந்த பற்றைகள் இவற்றையெல்லாம் துப்புரவு செய்து மைதானம் உருவாக்கி உதைபந்தாட்டம் நிகழ்த்த வேண்டிய அணியாக அது இருந்தது. எனது தந்தை சேதுகாவலர் மைதானத்தை உருவாக்குவதில் மாணவர்களை ஒழுங்குபடுத்தி வழிநடத்தினார் என திருவாளர் கதிரமலை என்னிடம் கூறினார். மிகுந்த பண்பாளனாக வாழ்ந்த திர கதிரமலை அவர்களும் அவரது சகோதரன் திருவாளர் முருகையா மாஸ்டர் அவர்களும் ஸ்கந்தாவில் கற்று உதைபந்தாட்ட அணிகளை அலங்கரித்து பெருமைகாத்த இருவராவர்.

அவர்களின் தங்கையாக உதித்தவரே திலகவதி அக்கா அவர்கள். அக்காவின் பிள்ளைகளும் ஸ்கந்தாவில் கற்ற காலத்தில் உதைபந்தாட்ட. கிரிக்கெட் அணிகளில் பங்காற்றியவர்கள். வேல்தஞ்சன் உதைபந்தாட்ட அணியில் இருந்தார். சிவன்சேய் அவர்கள் உதைபந்தாட்ட அணியிலும் கிரிகெட் அணியிலும் நட்சத்திர வீரனாக இருந்தார்.

இவ்வாறாக எங்கள் கல்லூரிக்கு பெருமை சேர்த்த குடும்பத்தை சேர்ந்த திலகவதி அக்கா அவர்கள் எப்பொழுதெல்லாம் வாய்ப்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கிறதோ அப்பொழுதெல்லாம் என்னுடன் பேசி தனது மனக் கிடக்கைகளை பகிர்ந்து கொண்ட காலத்தை என்னால் இலகுலில் மறந்து விட முடியாது.

கணித பாடத்தில் சிறந்த தேர்ச்சி பெற்ற அக்கா திலகவதியிடம் கணிதம் கற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்று இன்று உயர்ந்த நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் பலரை நான் அறிவேன்.

ஆங்கில மொழி மூலம் விஞ்ஞானக் கல்வியைப் பெற்று அன்றைய எஸ்.எஸ்.சி பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்றவர். தனது கிராமத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் ஒரு ஆசிரியையாக இணைந்து சேவைசெய்ய வேண்டும் என்ற இலட்சியம் தன்னிடம் இருந்ததாகவும் அக்கனவு நனவாகவில்லை என்றும். அந்த நேரம் தனியார் முகாமைத்துவத்தின் கீழ் பாடசாலைகள் இருந்ததால் லொத்தர்ச் சீட்டு குலுக்கல் முறையில் முகாமையாளர்கள் ஆசிரியர்களை தெரிவுசெய்தனர் என்றும் இக்காலம் போல் வெளிப்படையான போட்டிப்பரீட்சைகள். நேர்முகத்தேர்வுகள் முதலியனவற்றின் மூலம் திறமையும் தகைமையும் மதிப்பிடப்பட்டு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படுவதில்லை என்பதையும் அதிஷ்டம் யார்பக்கம் சாய்கிறதோ அவர்களே வெற்றியாளர் என்பதையும் நினைவு படுத்துவார். பின்னர் அவரைத் தேடிவந்த எந்த உத்தியோகங்களையும் அவர் உதறித் தள்ளினார். கிராமத்தின் ஏழைப் பிள்ளைகளுக்கும் தனது உறவினரின் பிள்ளைகளுக்கும் கடைசி காலத்தில் பேரப்பிள்ளைகளுக்கும் வீட்டு ஆசிரியையாக இருந்து பணி செய்தார்.

எவரது வற்புறுத்தல்களுக்கும் பணியாத அசாத்திய துணிச்சல் மிக்க ஒருவராக திகழ்ந்தவர். தன் உள்ளத்தில் தோன்றுகின்ற சரியான கருத்தக்களை உறுதியோடு வெளிப்படுத்தும் துணிச்சல் மிக்க ஒருவர். அவரது அரவணைப்பில் தோன்றிய அவரது பிள்ளைகள் அவர் எம் மீது வைத்திருந்த அன்பிற்கும் மதிப்பிற்கும் எவ்வகையிலும் குறைவின்றி எம்முடன் வாழ்ந்து வருவது எமக்கு பெருமை தருகிறது.

திலகவதி அக்காவுடன் பழகிய காலத்தில் அவர் மூலம் நான் பெற்ற அறிவுரைகளையும் எமது கல்லூரி வளர்ச்சியில் அவர் காட்டிய அக்கறைகளையும் என்னால் உயிருள்ளவரை மறக்க முடியாது. அளவு கடந்த இறை பக்தியும். ஆன்மீப்பற்றும் நிறைந்த சூதுவாது இல்லாத வெளிப்படையான நேர்மையான வாழ்க்கையையும் வாழ்ந்த அந்த தெய்வத் திருமகள் சிலகாலம் துயரங்களையும் நோய் நொடியையும் அனுபவிக்க நேர்ந்தது எனக்கு ஆழ்ந்த வருத்தத்தை தருகிறது. இருப்பினும் நீண்டகாலம் முதுமையிலும் நோயிலும் அவஸ்த்தையுறாது ஆண்டவன் இவ்வுலகின் பிறவிப்பெருங்கடலை கடந்து ஆன்ம விடுதலை பெறும் வாய்ப்பை அளித்திருக்கின்றார். என்றும் வற்றாக்கை கொண்டு அருள்பாலிக்கும் கந்தரோடையின் காவல் தெய்வமாக திகழும் விசாலாட்சி சமேத விஸ்வநாத பெருமானின் அருள் நிறையப்பெற்ற அக்காவின் ஆன்மா அவன் கழலடியில் சங்கமித்து சாந்தி பெறுவதாக...

சேது விபுலானந்தா
(சூட்டி மாஸ்டர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னம்மா ஒரு கலங்கரை விளக்கு

எம் அன்பான சின்னம்மாவிற்கு அஞ்சலிகள் செலுத்துகின்ற இப் புனித நாளில் கனக்கிறது எம் நெஞ்சம். அவர்தம் வாழ்க்கை வரலாறு. அவர் வாழ்ந்த வாழ்க்கை அவருடன் நாமும் எம்முடன் அவரும் பாசத்துடனும் பண்புடனும் பன்தியுடனும் பழகிய நாட்கள். எம்மை அனுசரித்து அவர் வழங்கிய அறிவுரைகள்..... அந்தக் கால் நூற்றாண்டு கால ஞாபங்களை மீட்டுப்பார்க்கிறேன்.

1982 இல் தன் அன்புக் கணவரை இழந்து விட்டாலும் அல்லல்கள். அவலங்கள் நிறைந்த மனித வாழ்வு நிலையற்றதென்பதையும் விதியின் வலிமை திகக்கொடியதென்பதையும் நன்கு அறிந்திரந்த அந்த அன்னை தன் இள வயது ஆண் பிள்ளைகள் மூவரினதும் எதிர்காலமே தனது இலட்சியம் எனக் கொண்டு வாழ்க்கைப்பயணத்தின் சவால்களுடன் எதிர்நீச்சலடித்து முன்னேறியவர்.

இப்பயணத்தில் தான் கந்தரோடையில் அவரது அன்பு அக்காவின்( எனது மனைவியின் தாய் ) ஆதரவும் அவர்தம் பிள்ளைகளின் அனுசரிப்பும் அதீதமாக கிடைக்கப்பெற்றது. சகோதர பாசத்தில் கட்டுண்டு தன் பிளளைகள். அக்காவின் பிள்ளைகள் என்ற வேறுபாடின்றி பராமரித்து வந்த இவருக்கும் பிள்ளைகளுக்கும் அக்காவீடு அதாவது அவர் பிள்ளைகளின் பெரியம்மா வீடு தெப்பமாக இருந்தது.

எவ்வாறெனினும் காலப்போக்கில் சின்னம்மா தனது சுயாதீனத்தை வலுவாக்கிக்கொண்டு தன்னம்பிக்கையை பலப்படுத்திக கொண்டு இறை பக்தியுடன் செயற்படலானார். இவர் பெற்றிருந்த ஆற்றலும் ஆழுமையும் பரம்பரைச் சொத்தாக இருந்ததுவோ என்னவோ! இறைவன் கொடுத்த கல்வியறிவும் அந்த ஆற்றல் ஆழுமை ஆகியவையும் பணிவுரைவழங்குபவராக அன்றி பணிப்புரை வழங்குபவராகவே இவரை வடிவமைத்தது. ஒரு முன்மாதிரியான பெண்ணாகவும் சீர்திருத்தவாதியாகவும் சமூகத்தால் மதிக்கப்பட்டார்.

இச் சிறந்த தாய் தன் பிள்ளைகளை கல்வி கேள்விகளில் சிறக்கச் செய்ததும் வாழ்வில் உயர்வடையச் செய்ததும் ஒன்றும் வியப்பானதல்ல. மாலை வேளைகளில் தன் இளவயது மைந்தர்களை கைகளில் பற்றி கோயிலுக்கு சென்று திரும்புகையில் எம் வீட்டிற்கு அழைத்து வருவதும் அவர்களின் கல்வியறிவு வளர்ச்சி விடயங்களை என்னுடன் பகிர்ந்து மகிழ்வதுவும் நல்ல பல கருத்துக்களை உரைப்பதுவும் ஞாபகத்திற்கு வருகிறது. தன் பிள்ளைகளை எம்முடன் எவ்வளவு சகோதர பாசத்துடன் இணைத்துக் கெண்டாரோ அதே போல் எம் பிள்ளைகளையும் பாசமுடன் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று அறிவூட்டி. அமுதும் ஊட்டி பக்குவமாக அனுப்பிவைப்பார். சின்னம்மா என் மனைவிக்கு சின்னம்மா. எனக்கு மாமி முறையானவர். என் பிள்ளைகளுக்கு சின்னம்மம்மா ( பேர்த்தி). ஆனால் எங்கள் எல்லோருக்கும் அன்னையாக - சின்னம்மாவாக விளங்கினார். அவரை எல்லோரும் சந்ததி வேறுபாடின்றி சின்னம்மா என்றெ அன்பாக அழைத்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் ஒரு சீர்திருத்தவாதியாக வெளிப்படையான கஜத்துக்களை முன்வைக்கம் பழக்கம் உள்ளவர் என்பதால் அவரது கனத்தையும் கருத்தின் ஆழ அகலத்தையும் பெறுமதியையும் புரிய முடியாதவர்கள் அல்லது புரியமறுப்பவர்கள் அவரோடு பகைமை உறவை பேணமுற்பட்ட துர்ப்பாக்கியசாலிகளே ஆவர். அவரிடம் காணப்பட்ட புலமை காரணமாக பொருத்தமான சந்தர்ப்பங்களில் மிகப்பொருத்தமான குறட்ப்பாக்கள், வெண்பாக்கள், முதுமொழிகள், சமய தத்துவங்கள் என்பனவற்றைக்கூறி தன் கருத்து ஊன்றச் செய்துவிடுவார். இளம்பிள்ளைகள், சிறுவர்கள் இவரது கருத்திற்கு இலகுவில் இசைவாகி நல்வழிப்பட்டதைக்கண்டு நான் இவரை நயந்திருக்கிறேன். அல்லாமல் இவரின் நற்குணங்களை கண்டு பயன்படுத்த முடியாமல் போனவர்களின் பால் எனக்கு வியப்பும் பரிதாபமுமே ஏற்பட்டதுண்டு. ஓரிரு நல் வார்த்தைகளை கூறினாலோ அன்றேல் சிவசிவ என்றாலோ அன்றேல் எல்லாம் இறைவன் செயல் என்று இரங்கினாலோ காணும் சின்னம்மா ஒரு சமாதான தேவதையாக இயங்கத்தொடங்கிவிடுவார். அவரை திருப்திப்படுத்த பெரிய முயற்சிகள் எதுவும் தேவைப்படாது.

இவ்வாறான எங்கள் அன்பு அம்மா தனது பிள்ளைச் செல்வங்களையும் எங்களையும் உறவுகளையும் உற்றார் நண்பர்களையும் விட்டுப்பிரிந்தார் என்பதை இன்னும் ஜீரணிக்க முடியவில்லை. அவர் காட்டிய ஒழுக்கமும் ஒழுங்கும் அகத்திலும் புறத்திலும் சரிவரக் கடைப்பிடிக்கப்படுவதும் அவரையும்அவரது ஆன்மாவையும் வாழ்வியலையும் வணங்கி மதிப்பதுவும் அவருக்கான எங்களின் அஞ்சலியாகும்.

21.01.2009 — வ.பஞ்சாட்சரம்
கந்தரோடை — பொது முகாமையாளர்

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்
பிரதான வீதி
யாழ்ப்பாணம்

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்துஊர்வது அஃது ஒப்பது இல் "

(குறள் - 621)

**Smile, with patient, hopeful heart,**
**in troublous hour;**
**Meet and so vanquish grief;**
**nothing hath equal power.**

(G.U.Pope's English Translation )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் குழந்தைப்பருவமும் சின்னம்மம்மாவும்

எங்கள் சின்னம்மம்மா எங்களுக்கு நல்ல பேர்த்தியாகவும் நல்ல ஆசிரியராகவும் வழிகாட்டியாகவும் வாழ்ந்தவர். நானும் எனது சகோதரர்களும் சிறுவயதாக இருக்கும் போது கந்தரோடையில் அவர் வாழ்ந்து வந்த அவருடைய வீட்டில் கல்விகற்பதற்காக செல்வோம். சின்னம்மம்மா வீட்டிற்கு போவதற்கு முன்னர் நாங்கள் செல்லும் பாதையில் ஒரு பனை வளவை கடந்துதான் செல்ல வேண்டும். நாங்கள் பனை வளவின் நடுவில் செல்லும்போதே "சின்னம்மம்மா ! சின்னம்மம்மா ! " என்று உரக்க கூப்பிட்டுக் கொண்டேதான் போவோம். நாங்கள் வருகிறோம் என்று அவர் தனது வீட்டுப்படலையிலேயே வந்து நின்று கவனமாக அழைத்துச்செல்லுவார்.

சின்னம்மம்மா மதிய போசனம் சமைப்பது வழமையாக தாமதமாகும். சிலவேளைகளில் சமையல் முடிய மூன்று மணியாகும். நாங்களும் அந்த நேரம் தான் படிப்பதற்குச் செல்வோம். பெரிய பூவரசம் இலைகளை பிடுங்கி கழுவிக்கொண்டு வருவார். இலைகளை எங்கள் கையிலே தருவார். பாத்திரத்தில் சோறு கறி போட்டு தனது கையால் குழைத்து இலையிலே வைப்பார். முதலில் எங்களுக்கு சாப்பாடும் குடிதண்ணீரும் தந்துவிட்டுத்தான் படிப்பிக்கத் தொடங்குவார். எங்கள் எல்லோரையும் தனித்தனியாக வெவ்வேறு இடங்களில் இருக்கச் சொல்லுவார். பாடங்கள் தொடங்கிவிட்டால் இடத்தை விட்டு கொஞ்சம் கூட நகர விடமாட்டார். அங்கு இங்கு எழும்பித்திரிந்தால் எங்கள் மாமாக்கள் அடுக்கி வைத்திருக்கின்ற புத்தகங்களை குழப்பி விடுவோமோ என்ற காரணத்தினால் எங்களை கட்டுப்பாடாக வைத்திருப்பார்.

தமிழ் எழுத்துக்கள், எண்கள், ஆங்கில எழுத்துக்கள், பாட்டுக்கள், தேவாரங்கள், பாடல் மூலம் கணக்கு என்று எல்லாவற்றையும் அவரிடமே முதலில் படித்தோம். விளங்கக் கூடியவாறு சொல்லித்தருவார். படிப்பு எல்லாம் முடிந்ததும் வீட்டு வேலையும் தந்து அனுப்புவார். அதை விட எங்களுக்கு கைரேகைச் சாத்திரம் பார்த்து நீ கெட்டிக்காரியாய் இருப்பாய் என்று சொல்லுவார்.

நாங்களும் அவருடன் சந்தோசமாய் பழகிய நாட்கள் என்றும் மறக்க முடியாதவை. சின்னம்மம்மாவின் கந்தரோடை வீடு ஷெல் விழுந்து இடிந்து போன பிறகு தென்மராட்சி இடப்பெயர்வு. மீள வலிகாமம் திரும்புதல். அவர் குடும்பம் கொக்குவிலில் வாழ்ந்த பொழுது எங்கள் மாமாமாரின் (அவரின் பிள்ளைகள்) திருமணங்கள் நடைபெறுதல். அவர் தன் பிள்ளைகளுடனும் வேறுவேறு இடங்களில் வேறு வேறு காலங்களில் தனி வீடுகளிலும் வாழுதல் என.... காலம் ஓடிய பொழுதிலும் எங்கே அவர் இருந்தாலும் அவர் எனது வீட்டுக்கு வந்து "இது நான் பிறந்த வீடு; ஓடி ஆடி விளையாடிய இடம்; மண் அளைந்த முற்றம்...."என்பார். இப்பொழுது எனது குடும்பத்தின் வீடாக இருக்கும் - அவர்கள் தமது ஆச்சி அப்புவுடன் வாழ்ந்த இந்த வீட்டின் சகலஞாபகங்களையும் மீள மீளச் சொல்லுவார். எங்கள் வீட்டில் வந்திருக்கும் போது எங்களுக்கு பாடம் சொல்லித்தந்தது போல எனது மகளுக்கும் கொப்பியும் பென்சிலும் கொண்டுவாங்கோ என்று சொல்லி சித்திரம் வரைந்து கொடுப்பார். கைரேகையில் சாத்திரமும் அவளுக்குச் சொல்லுவார். "பாட்டி அம்மா எனக்கு சாத்திரம் சொல்லுறவா செத்தப்போனாவே... இனி வரமாட்டாவோ.....?" என்று எனது மகள் மான்குட்டி கேட்கிறாள்.

பேரப்பிள்ளை

திருமதி சந்திரசிறி சுகன்ஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம்
**NORTH SRI LANKA JOURNALISTS' ASSOCIATION**

උතුරු ලංකා ජනමාධ්‍යවේදී සංගමය

23, சிவன்பண்ணை வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

23, Sivan Pannai Road,
Koddady,
Jaffna,
Sri Lanka.

பதிவு இல: வகிமா/கல/பண்/கொட்/169/2002


Date: 16.01.2009

## இரங்கல் செய்தி

எமது நீண்ட நாளைய நண்பனும் சக ஊடகவியலாளரும் சக ஊடகக் கல்வியாளரும் வடஇலங்கை பத்திரிகையாளர் சங்க அங்கத்தவருமான கனகநாயகம் வேல்தஞ்சன் அவர்களுடைய அன்புத் தாயார் திருமதி கனகநாயகம் திலகவதி அம்மையார் காலமான தகவல் அறிந்து நாமும் ஆழ்ந்த கவலையடைந்தோம்.

தாயாரின் பிரிவால் துயருற்றிருக்கும் நண்பன் வேல்தஞ்சன், அவரது சகோதரர்கள், குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னையின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல எம் பெருமானை வேண்டி நிற்கிறோம்.

**N. PARAMESVARAN**
SECRETARY
NORTH SRI LANKA JOURNALISTS ASSOCIATION

"காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர் "

(குறள் - 485)

**Who think the pendant world
itself to subjugate,
With mind unruffled
for the fitting time must wait.**

(G.U.Pope's English Translation )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இறையடி சென்றடைந்த

பொற்புடை அன்னை.

திருமதி திலகவதி கனகநாயகம் அவர்கள் பெற்றவர்களுக்கு மங்கலம் பொங்கும் திலகமாய் இல்லற வாழ்வில் என்றும் ஜோதியாய் திகழ்ந்து அமரத்துவம் அடைந்து விட்ட புண்ணியவதி.

வாழும் காலத்தில் அன்புடைமை, அருளுடைமை, பண்புடைமை எல்லாவற்றிற்கும் இலக்கணமாகி தமர், பிறர் என்ற பேதம் பாராது இன் சொல் பேசி இனிதே வாழ்ந்த தாய்.

நல்ல சிந்தனை, நல்ல செயல்கள் மூலம் நல்லவற்றை அறுவடை செய்யலாம் என்பதற்கு உதாரணமாக வாழ்ந்தவர்.

தற்காத்து தற்கொண்டானைப் பேணி முத்தான மூன்று புதல்வர்களை ஈன்று புறந் தந்த பெருமைக்குரியவர்.

"பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த
மக்கட் பேறு அல்ல பிற" எனும் பொய்யா மொழியாருக்கு அமைய அறிவிற் சிறந்த துறைகளில் உயர்ந்த புத்திரர்கள் நாடும் உயர் நிலையில் இருந்து அன்னையின் அரவணைப்பும் ஆளுமையும் புலனாகின்றது. "தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் அறியப்படும்' என்பது அன்னாரின் வாழ்க்கை முறைக்கு பொருந்தும்.

குத்துவிளக்காய், குலவிளக்காய், தாய் எனும் திருவிளக்காய் ஒளி பரப்பி நின்று அணைந்து போன அன்னையின் ஆன்மா பரமுத்தி அடைய பரம் பொருளைப் பணிந்தேத்தி,

அன்னாரின் பிரிவால் ஆற்றொணாத் துயருறும்
அத்தனை உள்ளங்களுக்கும் எனது ஆழ்ந்த
அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

"குடம்பை தனித்தொழிய புட்பறந் தற்றே உடம்பொடு உயிரின் நட்பு"

ஓம் சாந்தி - சாந்தி - சாந்தி -

சோ. நரேந்திரன்
காரிய உதவியாளர்
யாழ் மாநகர சபை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்மா உயர்வடைந்ததோர் கனவின் காலம் மறைந்ததா?
அம்மா துயரடைந்ததோர் இருளின் காலம் மறைத்ததா?
அம்மா அயர்வடைந்திடா நெற்றித்திருநீறுடை சூரிய முகத்தாயே
அம்மா எவரெம்வழி மூடினாலும் உடனுடைத்து நடப்போம்
அம்மா பெரும்படை பலமாய் எமைக் காத்தவளே
அம்மா நிகரிலாத உன் ஆத்ம பலமே இனி தடைதகர்த்துதவும்

-தஞ்சன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்கந்தாக்கால எங்கள் அன்னை



தன் தந்தை தாயுடன் எங்கள் அன்னை



மணவாழ்வின் தாலி, திலகத்துடன் எங்கள் அன்னை



தன் கணவனின் பெரியதாயுடன் எங்கள் அன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Government of Ceylon

## Department of Examinations

---------- APPACHCHI THILAGAVATHYTHEVI ----------

of SKANTHA VARODAYA COLLEGE, CHUNNAKAM.

Index No. J 377. , December, 1953

is awarded this

# GENERAL CERTIFICATE OF EDUCATION

(Ordinary Level—English Medium)

in the following SEVEN subjects

1 TAMIL LANGUAGE (ORDINARY PASS)
2 TAMIL LITERATURE (CREDIT)
3 GEOGRAPHY (ORDINARY PASS)
4 PURE MATHEMATICS (ORDINARY PASS)
5 CHEMISTRY (ORDINARY PASS)
6 BOTANY (CREDIT)
7 ZOOLOGY (CREDIT)
8 ——

Superintendent of Examinations.

Commissioner of Examinations.


Colombo-2, March 27, 1954.

Signature of the above-named candidate } Thilagavathy thevi A.

Certificate No. 2330

ஏங்கள் தாயார் தனது இறுதி மூச்சுவரை பேணிப்பாதுகாத்த
அவரது கல்விச்சான்றிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Government of Ceylon

DEPARTMENT OF EXAMINATIONS

----- APPACHCHI THILAGAVATHYTHEVI -----

of SKANTHA VARODAYA COLLEGE, CHUNNAKAM.

Index No. J 203. , July, 1954

is awarded this

GENERAL CERTIFICATE OF EDUCATION

(Ordinary Level — English Medium)

in the following ---------- subject

1. ENGLISH LANGUAGE (ORDINARY PASS) 2. ——

3. —— , 4. —— ,

5. —— , 6. —— ,

7. —— , 8. —— ,

and

having completed the necessary conditions

is awarded the

SENIOR SCHOOL CERTIFICATE

(ENGLISH)

ஏங்கள் தாயார் தனது இறுதி மூச்சுவரை பேணிப்பாதுகாத்த
அவரது கல்விச்சான்றிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Mr. C. Subramaniam
B.A. (Lond)
(1944 - 1962)



Mr. V. Sivasubramaniam
B.A., B.Sc., PGT.
(1962 - 1969)

எங்கள் அம்மா தனது இறுதி மூச்சுவரை பேணிப்பாதுகாத்த - அன்றைய ஸ்கந்தா அதிபர் C.சுப்பிரமணியம் அவர்களால் 11.03.1955 இல் வழங்கப்பட்ட நற்சான்றுதழ்

C. SUBRAMANIAM, B. A. (LOND.).
Principal
V. CHUPPIRAMANIAM, B. A., B. Sc. (LOND.),
Vice - Principal

SKANTHA VARODAYA COLLEGE,
CHUNNAKAM.

11th March, 1955.

Thilagavathy Appachchy has been a student of this College for over five years. She passed her S.S.C.(English) Examination in July 1954. She is now studying in the 1st year H.S.C. Science class and is doing Botany and Zoology.

She is intelligent, obedient and hardworking being good in Science subjedts. She took part in all College activities. She is fit for higher studies in Science.

Her character is good.

Principal.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூத்த புதல்வர்கள் வேல்தஞ்சன், சிவன்சேய் ஆகியோருடன்
அன்னையும் தந்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எங்கள் அம்மாவுடன் நாங்கள் (1980 களின் முற்பகுதி )



எங்கள் பெரியம்மாமாருடன் எங்கள் அம்மா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஏங்கள் அம்மாவின் பொற்கால விம்பம்
ஏங்களின் கண்ணீர்த்துளிகளில் பிரதிபலிக்கிறது.....



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுடன் எங்கள் அம்மா (1990 களின் முற்பகுதி )



எங்கள் அம்மா பெரியம்மா குடும்பத்துடன் ( 2000 ம் களின் முற்பகுதி )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகன் சிவன்சேய் மருமகள் பாரதி திருமண வாழ்வில்
எங்கள் தாய் (1997 ஜனவரி)



பேரன் சிவன்சேய் வித்தகனின் பிறந்த நாளில் எங்கள் அன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேரப்பிள்ளைகளுக்கு ( கிசோர், வேணு ) பாடம் சொல்லிக்கொடுக்கும் பேர்த்தி
தஞ்சனின் இல்லத்தில் - 2008



பேரப்பிள்ளைகளுடன் பேர்த்தி
(கந்தரோடை வயல் - 2008 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மூத்த அண்ணன் அமரர் கதிரமலையுடன் தங்கை திலகவதி



இளைய தமக்கை பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுடன் எங்கள் அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏங்கள் ஆசைமாமா (திரு. முருகையா) குடும்பத்துடன் எங்கள் அம்மா திலகவதி இளமை நாட்களில் .....

வயது முதிர்ந்த நிலையில் தமது பிள்ளைகள் குடும்பத்தினருடன் தற்பொழுது கனடாவில் வாழ்ந்து வரும் எங்கள் ஆசை மாமா அம்மாவின் மரண அறிவித்தல் கேட்டு தனது ஆழ்ந்த அனுதாபங்களை தந்தி மூலம் அறிவித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எங்கள் அம்மாவும் எங்கள் பெரியதாய்மாரும்.



பேறாமகன் ராஜகுமாரின் திருமணத்தில் எங்கள் அம்மாவும் பெரியதாய்மாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மகன் வேல்தஞ்சன் மருமகள் ரஜனி திருமண நாளில்
எங்கள் தாய் (1997 டிசெம்பர் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஐயனார் கோவிலில் மகன் வேல்தஞ்சனின் திருமண நிகழ்வில்
எங்கள் அம்மா (1990 களின் பிற்பகுதி )



திருமணக் கோலத்துடன் மகனை மணமகள் இல்லம் அழைத்துவரும்
எங்கள் அன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூத்த மகன் வேல்தஞ்சன், மருமகள் ரஜனி, பேரப்பிள்ளைகள் பொன்மகள், கிருஸ்ணகிசோர், வேணுசாயினி ஆகியோருடன் எங்கள் அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அப்பம்மாவுடன் பேரப்பிள்ளைகள் வித்தகன், கிருசிகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மகன் ஹரிஹரசக்தி மருமகள் சுமிதா திருமண நாளில்
எங்கள் அன்னை (1999 பெப்ரவரி )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகன் ஹரிஹரசக்தி மருமகள் சுபிதா ஆகியோரின் பட்டமளிப்பு விழாவில்
(யாழ் பல்கலைக்கழகம் 2004 மார்ச் )



இளைய மகன் சக்தியுடனும் பேரப்பிள்ளைகளுடனும் பிறந்த நாளில் எங்கள் அன்னை - 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் குகபாலன் அவர்களின் சிரேஷ்ட புத்திரி திருமகள் திருமணத்தில்
எங்கள் அன்னை பேராசிரியரின் குடும்பத்தாருடன் - கொக்குவிலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில் எங்கள் அம்மா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கந்தரோடை வற்றாக்கை அம்மன் ஆலயத்தில் வழிபடும் எங்கள் தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்மா அப்பாவுடன் பிள்ளைகள் தஞ்சன், மைந்தன்,சக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறுதி யாத்திரைக்கான நிரந்தரத் தூக்கத்தில் எங்கள் அம்மா
தாய்க்கான கடமைகளில் இளைய மகன் ஹரிஹரசக்தி (30.12.2008 தொல்புரம் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தனது உடலை மருத்துவ பீடத்திற்கு தானமாக வழங்கும் தனது முன்னைய முடிவை இரத்துச் செய்யும்படி பீடாதிபதிக்கு அவர் எழுதிய கடிதம்.**

19.6.2003.

மரண சாசனம் ரத்து செய்தல்.

பீடாதிபதி
மருத்துவ பீடம்,
யாழ்ப்பாணம்.

~~ஐயா~~ / அம்மா.

அவர்களுக்கு மிகவும் தயவாக அறிவிப்பது, கந்தரோடை, சுன்னாகம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திலகவதி கனகநாயகமாகிய நான் 22.11.2002 (26) அன்று மரண சாசனம் ஒன்று அமைத்துத் தங்களுக்கு 28.11.2002 கையளித்துள்ளேன், அதை நிராகரித்து, ரத்து செய்யவும். இத்துடன் மரண சாசனப் பிரதியொன்று என்னிடமிருந்தது அதையும் தங்களுக்கு அனுப்பியுள்ளேன். சாட்சிகளிடமோ என்னிடமோ, இப்பிரதி எதுவுமில்லை. ஆகவே இறந்தபின் எனது பூதவுடலை, உறவினரோ, சாட்சிகளோ யாரும் ஒப்படைக்கமாட்டார்கள், அறிவிக்கமாட்டார்கள். தயவு செய்து என்னை மன்னிக்கவும். நன்றி. இதையிட்டு எந்தவித ஆட்சேபனையும் எழுப்புவது நல்லதல்ல.

மரணசாசனம் ரத்து செய்யப்பட்ட கடிதம் எதிர்பார்க்கின்றேன். நன்றி.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
திலகவதி கனகநாயகம்

எனது தற்காலிக விலாசம்:
க. திலகவதி
C/o. S. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏங்கள் தாயின் மறைவை ஒட்டி பத்திரிகை வாயிலாக அஞ்சலிகளை தெரித்தவர்களுக்கு நன்றியுடன் மீள் பிரசுரிக்கிறோம்

## கண்ணீர் அஞ்சலி

உடுவில் கல்விக்கோட்ட முகாமைத்துவ உதவியாளர்
திரு.க.வேல்தஞ்சனின் அன்புத் தாய்

### அமரர் கனகநாயகம் திலகவதி

அவர்களின் மறைவு குறித்து கண்ணீர் அஞ்சலியைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

உடுவில் கோட்டக் கல்விப்
பணிப்பாளர், அதிபர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

(சி/556421)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சுபிதா ஹரிஹரசக்தி அவர்களின்
அன்பு மாமியார்

### அமரர் க.திலகவதி

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

யா/ சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை. ஆசிரியர் கழகம்.

## திருமதி திலகவதி கனகநாயகம் (கந்தரோடை)

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் தொல்புரம் மேற்கு, சுழிபுரத்தை தற்போதைய முகவரியாகவும் கொண்ட திருமதி திலகவதி கனகநாயகம் (29.12.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பச்சி - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் அமரர் சங்கரப்பிள்ளை கனகநாயகம் (ஓய்வுபெற்ற அரச லிகிதர்) அவர்களின் அன்பு மனைவியும் வேல்தஞ்சன் (முகாமைத்துவ உதவியாளர், உடுவில் கல்விக் கோட்டம்), சிவன்சேய் (ஆசிரியர், யா/ வட்டு மத்திய கல்லூரி), ஹரிஹரசக்தி (விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் அம்பிகாதேவியின் சிறிய தாயும் றஜனி, பாரதி (ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி), சுபிதா (ஆசிரியை, யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை) ஆகியோரின் அன்பு மாமியும் பொன்மகள், கிஷோக்குமார், வேணுசாயினி, வித்தகன், கிருசிகன், பார்கவி, நீதிகா, இனிந்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான கதிரமலை, தெய்வானைப்பிள்ளை, வன்னியசிங்கம் மற்றும் முருகையா (கனடா), வள்ளிநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2008) செவ்வாய்க்கிழமை பி.ப.2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (தொல்புரம் மேற்கு) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.ஹரிகரசக்தி
(மகன்).

*தொல்புரம் மேற்கு,*
*சுழிபுரம்.*

(81280)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தாயின் மறைவையொட்டி துண்டுப்பிரசுரங்கள்மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கு நன்றியுடன் மீள் பிரசுரிக்கிறோம்

# கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்







எமது நிலைய நிர்வாக உறுப்பினரும் முன்னாள் தலைவருமாகிய க. வேல்தஞ்சனின் அன்புத்தாயார்

அமரர் திருமதி

## கனகநாயகம் திலகவதி



அன்பு கொண்ட உமது உயிர்
எம்மை விட்டுப் போனதே
ஆலமரம் சாய்ந்ததினால் விழுதுகள்
இங்கு வாடுதே!
இனிய உங்கள் அன்புக்குரல் நித்தமும்
எம் காதில் ஒலிக்குதே!
தனித்து உம் உறவுகளை வாழவிட்டு
நீங்கள் போனதுதான் நியாயமோ!
உறவுகள் எத்தனை இருந்தென்ன
எங்கு தேடியும் காண்போமா உங்கள் இன்முகம்.

இவரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

ஐயனார் கோயிலடி.
சுன்னாகம்.
30.12.2008.

ஐயனார் சனசமூக நிலைய
நிர்வாகிகள், அங்கத்தவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏங்கள் தாயின் மறைவையொட்டி துண்டுப்பிரசுரங்கள்மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கு நன்றியுடன் மீள் பிரசுரிக்கிறோம்

# கண்ணீர் அஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 26 ✱ 11 ✱ 1936 |  | 29 ✱ 12 ✱ 2008 |

யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை முன்னாள் அதிபரும் தற்போதைய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் கோப்பாய் திரு.க.ஹரிஹரசக்தியின் தாயார்

## அமரர் திருமதி. திலகவதி கனகநாயகம்

அன்பும் பாசமும் உள்ள அம்மாவே
ஒருநாள் தன்னும் ஓயா
இன்முகம் காட்டி வாவென்று எம்மை அழைத்து
இனியமொழி பேசிடும் கலங்கா
நெஞ்சமதனை கலங்க வைத்த
காலனவன் கவர்ந்தானே
நம் கண்ணீர் மல்க

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

30.12.2008

**பாடசாலைச் சமூகம்**

யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை

ஸ்ரீ விநாயகர் அச்சகம், வழுக்கம்பரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மறவாமை

எங்கள் அன்னையின் வாழ்வில் அன்று தொடக்கம்
அன்புடனும் ஆதரவுடனும் தோள் கொடுத்த
எங்கள் பெரியதாய்மாரின் பிள்ளைகளுக்கு மனப்பூர்வமான
நன்றிகள். உடன்பிறவா சகோதரர்கள்
எங்கள் அன்னையின் பிரிவுத் துயரில் எங்களுக்கு
பெரும் ஆறுதல் அளித்தனர். எங்களோடு
கண்ணீர் சிந்தினர். எங்கள் கண்ணீரைத்
துடைத்து விட்டனர். எங்கள் மனங்களைத் தேற்றினர்.
அவர்களை நன்றியுடன் என்றும் பார்க்கிறோம்.
எங்கள் ஊரின் உறவுகள், உற்றார், நண்பர்கள்
மற்றும் கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள்
சக ஆசிரியர்கள், சக உத்தியோகத்தர்கள்
யாழ்ப்பாணம் கல்வியியல் கல்லூரி பீடாதிபதி,
சக விரிவுரையாளர்கள் என அனைவரும் பல்வேறு
வழிகளில் துயர்பகிர்ந்தனர். அவர்களுக்கும் நன்றி.
எங்கள் தாயார் நோயில்வாடிய போது
உதவி நல்கிய எங்கள் உறவினர்கள்,
யாழ் மருத்துவமனையின் மருத்துவர்கள்,
தாதிமார், ஊழியர்கள், பராமரிப்பாளர்கள்
ஆகியோருக்கும் எங்கள் நன்றி உரித்தாகிறது.
அன்னையின் இறுதிக் கிரியைகளில்
கலந்து கொண்ட எங்கள் உற்றார், உறவினர், நண்பர்கள்
நலன்விரும்பிகள் அனைவருக்கும் நன்றி கூறுகிறோம்.
திலகதீபம் வெளிவர தங்கள் இதயத்திலிருந்து
எழுத்துக்களை வடித்துத் தந்த அனைத்து
உறவுகளுக்கும் நூலை கணனியில் வடிவமைத்துத்
தந்த எங்கள் மருமகன் செல்வன் தயாபரன் தினேஷ் அவர்களுக்கும்
நாங்கள் நன்றி கூறுகிறோம்.

**அன்னையின் பிள்ளைகளும் அவர்தம்**
**குடும்பத்தினரும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Designed By :- T.Thinesh ,Kandarodai, T.P :- 0774409256